விவேக போதினி உபதேசமாலை—புஷ்பம்-க

# ராஜம் அய்யர் சரிதை

Printed by G. C. Logonadham Bros.
at the "Guardian" Press, Mount Road, Madras

சாந்தானந்த பரப்பிரஹ்மணே நம:

# ராஜம் அய்யர்

# சரிதை

இது

மைலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூல்
முதல் உதவிபோதகரான
ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர், பீ. ஏ. எல். டி
அவர்கள் செய்தது

சென்னை
ஜனரல் பப்ளிஷ் கம்பெனியாரவர்களால்
"கார்டியன்" அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது

1909

*All rights reserved*]

[விலை அணு 8

# முகவுரை

இப்புத்தகத்தில் சேர்ந்து ஒழுங்குபடுத்தி வெளியிட்டிருக்கும் விஷயங்கள், விவேகபோதினி முதல் தொகுதி 6-ம் ஸஞ்சிகை முதல் 10-ம் ஸஞ்சிகை வரையில், கோர்வையாகவிடாது ஸஞ்சிகை ஒன்றுக்கு ஒரு சருக்கமாக, வெளிவந்தவை. இச்சரிதை ஸுமார் 10-வருஷத்திற்கு முன்பு பட்டணத்தில் இருந்தவராயும் இப்பொழுதிருக்கும் நம்முள் பலருக்குத் தெரிந்தவராயும் உள்ள ராஜம் அய்யரைப்பற்றி யாதலால் இதை இவ்வாறு புத்தகரூபமாகவெளியிட்டு பலர் அறியும்படி செய்யவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. இதில் காணப்படும் 6-வதாகிய உபதேசமொழிச் சருக்கம் புதிதாக தொகுக்கப்பட்டு இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இச்சருக்கத்தில் இருக்கும் கதைகள் பெரும்பாலும் விவேகபோதினியிலே சிறுவர்க்கான பக்கங்களில் எடுத்தாண்டவைகளாக இருந்தமையால், இந்தச் சருக்கத்தை விவேகபோதினியில் பிரசுரம் செய்தல் வீணாகக் கூறியது கூறலாய் முடியும் என இவ்வாறு செய்யாதுவிட்டோம். ஆனால் இந்தச் சருக்கம் இன்றி இம்மஹானது திவ்ய சரித்திரம் பூர்த்தியாகாதாகையால் புத்தகரூபமாக இதைவெளியிடுங்கால் இந்தச் சருக்கத்தைச் சேர்லானோம். இறுதியில் இருக்கும் அனுபந்தம் இராஜம் அய்யர் முதல் எழுதிய ஆங்கலவியாஸமாயும், அவருக்குத் தக்க ஸ்நேஹிதர்களை ஸம்பாதித்துக்கொடுத்து அவர்கள் மூலமாக அவருக்கு ஸத்குருலாபம் கிடைக்கும்படி செய்த வியாஸமாயும் இருத்தலால் அதையும்

இந்தப் புத்தகத்தில் சேர்த்திருக்கிறோம். மொழிபெயர்ப்பில் அதன் உண்மையான சிறப்புக் குறைந்திருந்த போதிலும் அது ஓர் குருஸந்நிதானத்தில் சிஷ்யன் செய்யும் மனன ரூபமாக இருப்பதை வாசிப்போர் எல்லோரும் எளிதில் காணலாம். இந்த மொழிபெயர்ப்பு விவேகபோதினி இரண்டாம் தொகுதி 3-ம் ஸஞ்சிகையில் வெளி வந்திருக்கிறது.

இப்புத்தகத்திலுள்ள சருக்கம் ஒவ்வொன்றிற்கும் தகுதியான படங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் பொருத்தம் அவைகள் அடியில் காணப்படும் குறிப்புகளை வாசிக்குங்கால் தெரியவரும். முதல் சருக்கத்திற்குத் தகுந்ததாகிய ஸ்யாமலினி அம்மாள் படம் எங்களுக்கு இதுவரையில் கிட்டாததால் அதற்குத் தகுந்த படம் மாத்திரம் போடாது விட்டோம். அந்தப்படம் கிடைத்தவுடன் விவேகபோதினி அனுபந்தமாக அதைப் பிரசுரம் செய்வோம். அதை நண்பர்கள் தயவு செய்து முதல் சருக்கத்தை நோக்கும்படி அமைத்துக் கொள்ளவேண்டும்.

ஸ்ரீமான் ராஜம் அய்யர் சரிதையிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியவை இன்னவை என்பதை விஸ்தாரமாகத் தேகம் நழுவிய சருக்கம் இறுதியில் 64, 65-ம் பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சரிதை, சுருக்கிச் சொல்லப்புகின்,

"பெரியவர் சரிதை நம்மைப் பெரியவ ராக்கி நாமே
அரியவாழ் நாளாம் பாலை வனத்திடை யலைவோ ருக்குத்
துரிசற வழியைக் காட்டிஞ் சுவடுறச் செயவும் வன்மை
மருவலா மென்னு மெண்ணை மனங்கொளச் செய்யு மன்றே"

என்று ஓர் ஆங்கல கவி கூறியதுபோல நம்மை மேன்மையை விரும்பும்படி செய்யும் தூண்டுகோலாகும் என்று கூற யாதொரு தடையுமில்லை என்று இதை வாசிப்போர் எளிதில் உணரலாம்.

கமலாம்பாள் சரித்திரம் முடிவில் உள்ள பிற்கூற்றில் வெகு அழகாயும் பரவசமாயும் இராஜம் அய்யர் கூறியிருக்கிறபடி 'எந்த தெய்வத்தைத் தொழுது இந்த திவ்ய சரிதை இயற்றப்பட்டதோ, எந்த ஸ்வயம் பிரகாசமான திவ்ய தேஜோரூபத்தின் பொருட்டு இந்தச் சரிதையானது நிஷ்காம்யமாக அற்பிக்கப்படுகிறதோ, அந்த திவ்யமங்கள குணாதீத பரிபூரண ஸச்சிதானந்த ஸ்வரூபத்தை நாம் அனைவரும் முயற்சித்து அடைவோமாக' என்ற வேண்டுகோளொடு இம்முகவுரையை முடிப்போம்.

அ. சீ. கஸ்தூரிரங்கன்.

# பொருளடக்கம்


பக்கம்

I.

மனம் மாறிய சருக்கம் ... ... 1

II.

உபதேசம் பெற்ற சருக்கம் ... ... 15

III.

பிரபுத்த பாரதச் சருக்கம் ... ... 29

IV.

வாழ்க்கைச் சருக்கம் ... ... 43

V.

தேகம் நழுவிய சருக்கம் ... ... 55

VI.

உபதேசமொழிச் சருக்கம் ... ... 66

அனுபந்தம்

மனிதன் அவன் தாழ்வும் ஏற்றமும் ... 97

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 98 | 1 | ஹிருதளில் | ஹிருதயங்களில் |
| 101 | 8 | கல்லஜெட்டி | மல்லகஜெட்டி |

# ராஜம் அய்யர் சரிதை

## 1. மனம் மாறிய சருக்கம்

ஸாதனமின்றி யொன்றை ஸாதிப்பா ருலகிலில்லை
ஆதலாலிந்நான்கும் பெற்றவர்க் கறிவுண்டாகும்
நாதன விவேகி உள்ளில் நுழையாது நுழையுமாகில்
பூதஜன்மங்கள்கோடிப் புனிதனும் புருடனாமே

என்றார் கைவல்ய நவநீத நூலாசிரியர். இதன்படி மோக்ஷஸாதனம் இல்லாதவர்களுக்கு ஞானம் வந்து மோக்ஷம் ஸித்திக்காது. ஆனால் பட்டணத்துப் பிள்ளையாரைப் போன்ற சில மஹான்களுக்கு ‘காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே’ என்பது போன்ற சிறு உபதேசங்கள் மூலமாக திடீரென்று ஞானம்வர, அவர்கள் ஸம்ஸாரப் பற்றுதலையும் தாம் சிறந்ததெனக் கொண்டிருந்த விஷயங்களையும், முன்பின் யோசியாதுவிட்டு மோக்ஷமார்க்கத்தில் அது முதல் விடாது பாடுபட்டுக் கரையேறியிருக்கிறார்கள். இவர்களுக்கு மேலான வாழ்வு ஸாதனங்கள் ஸஹாயம் ஒன்றுமின்றி எவ்வாறு ஸித்திக்கலாமென்ற சங்கைவரலாம். அதற்குக் கைவல்ய நூலாசிரியர், முன்னெடுத்தெழுதியுள்ள பாட்டின் பின் இரண்டு அடிகள்

மூலமாகப் பதில் கூறுகிறார். அதாவது ஸாதனமில்லாதவன் திடீரென்று ஞானியாதல் அஸாத்யம். அப்படிச் சிலர் ஆயிருப்பதாகக் காணப்பட்டால், அவர்கள் பூர்வம் அநேக ஜன்மங்களில் சுத்தராகி ஸாதனங்களில் பழகிக் கஷ்டப்பட்டு இந்த ஜன்மத்தை முடிவான ஜன்மமாக உடையவராய் இருத்தல்வேண்டும். இப்படிப்பட்ட மஹான்கள் அநேகரை நமது புராணாதிகளில் ஏராளமாகக் காணலாம். இவைகளைப் புராணகதைகள், கட்டுகதைகள் என்று தள்ளிவிடும் தன்மை வாய்ந்தவர்களுக்கு இக்காலத்தில் சிலரையும் எடுத்து திருஷ்டாந்தமாகக் காட்டலாம். அவர்களுள், பட்டணத்திலிருப்பவர் சிலருக்கு நேரிடத் தெரிந்தவராயும், அமெரிக்கா முதலிய தூரதேசங்களில் தமது நூல் மூலமாகப் பிரஸித்தி பெற்றவராயும் உள்ள ஸ்ரீமான் ராஜம் அய்யர் அவர்களே இதற்குத் தகுந்த திருஷ்டாந்தம். இவர் கொஞ்சநாளைக்கு முன்புதான் இருந்தவர். மேலும் இவரோடு நேரிடப் பழகியவர்கள் இன்னும் இவரைப்பற்றிப் புகழ்ந்துபேசி ஆனந்தித்துக்கொண்டிருக்கின்றனர். ஆதலால் இவரது சரித்திரம் இன்னும் மாறுபடாது சுத்தமாகவே இருக்கின்றது. அதை எடுத்து இங்கு விவரிப்போமாக.

ஸ்ரீமான் ராஜம் அய்யர் அவர்கள் மதுரை ஜில்லாவிலிருக்கும் வத்தலகுண்டு (பக்துலகுண்ட)என்ற கிராமத்தில் 1872-ம் வருஷத்தில் ஜனனமானார். இவர் பிறந்த கிராமம் இருக்குமிடத்தில் முற்காலத்தில் பரிசுத்தமாயும், பகவத் பக்தர்களது ஸ்நாந அநுஷ்டானாதிகளுக்குத் தக்கதாயும் இரு

ந்த ஓர் நிர்மலமான ஏரி இருந்தது என்பதை
இதன்பெயரே குறிப்பிக்கின்றது. இப்பரிசுத்தமான
இடத்தில் பிறந்து இளமையில் இவர் மதுரை
பாண்டித்ய பாடசாலையில் எப். ஏ. பரீக்ஷைவரையில்
கல்வி கற்றுவந்தார். இவர் இளமையில் மற்றையப்
பிள்ளைகளைப்போல விளையாட்டில் மனதாரக் கலந்
தவர் அல்லர்; எதிலிருந்தும் வெட்கப்பட்டு பின்னடை
யும் ஸ்வபாவம் இவருக்கிருந்தது. இதைத்தவிர நமக்கு
இவரது இளமையைப்பற்றி வேறொன்றும் தெரி
யாது. இவருக்கு எப். ஏ. பரீக்ஷை தேரியதும் இவர்
பட்டணம் வந்து கிறிஸ்தவர் பாண்டித்யசாலையில் சேர்
ந்து சரித்திர பாகத்தை நன்கு கற்றுணர்ந்து அதிலேயே
1889-ம் வருஷத்தில் பீ. ஏ. பரீக்ஷைகொடுத்து, உட
னே பட்டணம் சட்ட பாண்டித்ய சாலையில் சேர்ந்து
படித்தார். இக்காலத்தில் இங்கிலீஷ் படிக்கும் ஸாதா
ரணப் பிள்ளைகளுக்கு இருந்த சித்த விருத்தியே இவ
ருக்கும் இருந்தது. இவர் நடை உடை பாவனைகள்
யாவும் மிக ஒழுங்காயும் பகட்டாயுமிருந்தன. நமது
ஜாதிவர்ணாசிரமாதிகள் ஸ்வயநயங் கருதும் பிராம்ம
ணர்களால் ஏற்படுத்தப்பட்டன என்றும், அந்த ஏற்
பாட்டால்தான் நமது தேசம் சீரழிந்ததென்றும், அதை
எப்படியாவது வேரறுத்தால்தான் நமது தேசத்திற்கு
க்ஷேமம் பிறக்கும் என்றும், பராஹிம்ஸை கூடியவரை
யிலும் இல்லாது நன்னடக்கைக் கோட்பாடுகளின்படி
நடந்துவந்தால் கடவுளைப்பற்றிய நம்பிக்கைகளும் மத
விஷய நம்பிக்கைகளும் இல்லாது உலகில் ஸுகமாக

வாழலாம் என்றும், இவர் இக்காலத்தில் அபிப்பிராயப் பட்டார்.

இவ்வாறு ராஜம் அய்யர் நாஸ்திக அபிப்பிராயங்களை உடையவராக இருந்தபோதிலும் இவரிடத்து ஓர் விசேஷகுணம் மாத்திரம் இருந்தது. ஷெல்லி, வேர்ட்ஸ்வர்த், டெனிஸன் முதலிய ஆங்கில கவிசிகாமணிகளின் சுத்த கற்பனை நிறைந்த காவ்யவிஷயங்களிலும், கம்பர் முதலிய தமிழ் கவிகளின் கவிதைகளிலும் மூழ்கி ஆனந்தம் அனுபவிக்கும் தன்மை இவரிடத்தில் வாய்ந்திருந்தது. இதுதான் இவரது லோகாயதிக அபிப்பிராயத்தை மாற்றி இவரை நல்ல வழிக்குத் திரும்பும்படி செய்தது. சட்டபரீக்ஷைக்கு வாசிக்குங்காலத்தில், சரித்திர விஷயமாக உலகமே கண்டு பிரமிக்கும்படியான ஓர் நூல் எழுதவேண்டும் என்றும், அமெரிக்கா முதலிய விடங்களில் யாத்திரை செய்து வெளிநாட்டாரது மேன்மையின் ரகஸியத்தை அறிந்து, நமது பாரத கண்டமும் அவ்வாறு சிறப்படையும்படி தக்கமாறுதல்களை ஏற்படுத்தவேண்டும் என்றும் இவர் பெரு ஆவல் கொண்டிருந்தார்.

இவ்வாறு மனோராஜ்யம் செய்துகொண்டிருந்த ராஜம் அய்யர் அவர்களுக்கு பீ. எல். பரீக்ஷை முதல் தரம் தவறியது. இதுதான், 'காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே' என்ற உபதேசமொழி பட்டிணத்தடிகளை மாற்றியதுபோல இவரது மனோநிலையைச் சற்று மாற்றியது. இதுமுதல் இவர்மனம் மதவிஷயங்களில் திரும்பியது. துன்பம் வருங்கால் எல்லோருக்

கும் வாழ்க்கையின் நிலையாமையும் அதற்கப்பாலிருக்
கும் பரம்பொருளது அழியாநிலையும் சற்று வெளியா
கும். அதுமாறியதும் வாழ்க்கையின் இன்பங்கள்வந்து
தாக்க முன்தோன்றிய உண்மைகள் மறைந்துபோகும்.
அப்பொழுது ஸாதாரண ஜனங்கள் வாழ்க்கையின்உண்
மை, நோக்கம், இவைகளைக் கவனியாது மனம்போன
போக்கெல்லாம் வீணாகப்போவது வழக்கம். இதுபற்றி
யே கார்லைல்என்ற மஹான் 'துன்பத்தை ஒருவாறு கஷ்
டப்பட்டு ஸஹித்தாலும் ஸஹிக்கலாம், இன்பத்தை
சாந்த மனத்துடன் ஸஹிப்பது அரிது' என வியந்து
கூறியுள்ளார். ராஜம் அய்யரைப்போன்ற 'பூத ஜன்மங்
கள்கோடிப் புனிதராம் புருஷருக்கு' கஷ்டகாலத்தில்
வரும் ஞானம் பின்பு எந்த ஸமயத்திலும் மாறுதிரு
க்க, அது அவர்களை அந்த ஜன்மத்திலேயே கரை ஏற்
றிவிடும். இதற்கேற்ப ராஜம் அய்யருக்கு பீ. எல். பரீ
க்ஷை தவறியதும் உண்டான ஞானமார்க்க மாறுதல்
பின்பு மாறவேயில்லை. கவிதை விஷயங்களில் ஈடுபட்டு
ஆனந்திக்கும் குணம் இவருக்கு இந்த ஸமயத்தில்
ஸஹாயமாகவர மஹான்கள் 'மனவாக்கெட்டாத' தமது
நிஷ்டானுபூதி விசேஷங்களை வெளியிட்டிருக்கும் ஈத்த
கற்பனை நிறைந்த அருட்பாடல்களின் நயத்தை நன்கு
உணரும் திறம்இவருக்குஇப்பொழுதுஉண்டாயிற்று. இக்
காலத்தில் இவர்கைவல்ய நவநீதம்,தத்வராய ஸ்வாமிகள்
பாடல் முதலிய அநுபூதி நூல்களை மிகுந்த ஆவலுடன்
படித்துவந்தார். இவர் முன்னர் நமது ஜாதி ஆசாரம்,
மதவிஷயம் முதலியவைகளைப் பற்றிக்கொண்டிருந்த
அபிப்பிராயங்கள் எல்லாம் மாறுதல் அடைந்தன.

அமெரிக்கா முதலிய இடங்களுக்குப் போகவேண்டும் என்பதுபோன்ற இவருக்கு இருந்த பேர் ஆவல்கள் யாவும் இருந்தவிடந் தெரியாமல் பறந்தோடிப்போயின.

இப்படி இருக்கையில் இவர் கிறிஸ்தவர் பாண்டித்ய சாலைப் பத்திரிகையில் கணித வித்வான் ரங்கநாத முதலியார் அவர்களால் இயற்றப்பட்ட கச்சிக்கலம்பகத்தின் குணகுண விமரிசை ஒன்றை எழுதி வெளியிட, இவர் பெயரும், இவர் தமிழ்ப் பாண்டித்யமும், அறிவின் நுட்பமும் பலர் அறிய வெளியாயிற்று. இதே ஸமயத்தில் 1892-ம் வருஷத்தில் இவரது மனோதர்மம், தமிழ், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் கவிஹ்ருதயம் உணரும் திறம், மதவிஷய அபிப்பிராயம் யாவும், இவர் விவேகசிந்தாமணி* என்ற மாதாந்த தமிழ்ப் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவந்த ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம் என்ற தமிழ் கற்பனைக் கதைமூலமாக தெரியவந்தது. இந்த அற்புதக் கதையில் புத்திரசோகம் என்ற அத்தியாயத்தில் சோகரசத்தையும், பலீன்சடுகுடு, கடற்கரை விளையாட்டு என்ற அத்தியாயங்களில் கற்பனாசக்தி நிறைந்த காவ்ய விஷயங்களையும், நரபலி என்ற அத்தியாயத்தில் ஆருத்திரா தர்சன வைபவத்தையும், 'கௌரி மாதவன் கோவிந்தன் என்பானோர் காளை புகுதக் கனாக் கண்டேன் தோழி நான்' என்ற அத்தியாயத்தில் பக்தியின் சிறப்பையும். விசுவரூப தர்சனம், கருதும் அன்பர்

இந்த பத்திரிகையிலேயே இவர் சீதை என்ற ஒரு கதையையும் தொடர்ச்சியாக எழுதிவந்தார்.

மிடிதீரப் பருகவந்த செழுந்தேனுகி என்ற அத்தியாயங்களில் அநுபூதி விசேஷங்களையும், இம்மஹான் வெகு அழகாக அமைத்துள்ளார். 'இக்கதை உண்மையை உணர உள்ளபடி விடாது பாடுபட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்து, முடிவில் மோக்ஷசாகம் தீரப் பருகும்படியான தடாகத்தைக் கண்டு நீர் பருகிக் களைப்புத் தீர்ந்த ஓர் சுத்த ஆத்மாவின் அநுபூதி பேதங்களை அடக்கியுள்ளது,' என்பது ராஜம் அய்யரே இக்கமலாம்பாள் சரித்திரத்தைப்பற்றி வெளியிட்டுள்ள அபிப்பிராயம்.

இவ்வாறு உலக விஷயங்களிலிருந்து திரும்பிய தம் ராஜம் அய்யர் மற்றைய வேலைகளைக் கவனியாது விட்டார். எவரது பார்வைக்கும் அகப்படாது தனிமையாக தமது காரியத்திலேயே கண்ணுகயிருந்து ஸித்திபெறத்தக்க இடம் ஜனம் நிறைந்த சென்னைபட்டணமே என்று அவர் அபிப்பிராயப்பட்டதால், இங்கேயே எப்பொழுதும் இருக்க இவர் விரும்பினுர். அந்த ஸமயத்தில் திருவல்லிக்கேணியில் இவர் இருந்த வீட்டிற்கு அருகாமையில் ஓர் ஸந்யாஸினி அம்மாள் அரிய விஷயங்களைப்பற்றி உபந்நியாஸம் செய்துகொண்டிருந்தாள். அவ்விடம் இவர் சென்று தம் மனதைத் திருப்தி செய்துகொள்ள எண்ணி, நாடோறும் அந்த அம்மாள் செய்துவந்த உபந்நியாஸத்தைத் தவருது ஓர் புறமாக இருந்து மௌனமாகவும் சாந்தமாகவும் கேட்டுவந்தார். அந்த அம்மாள் இவரது மௌனம், பிரஸந்ந வதனம், அடக்கம் முதலியவைகளைக் கண்டு வியந்து இவருடன் பேசவேண்டும் என்ற ஆவல் கொண்டாள். ஒருநாள் நடந்த பிரஸங்கம் மிக உருக்கமாக

இருக்க ராஜம் அய்யர் அவ்விடத்திலேயே எல்லோ ரும் போய்விட்ட பின்புகூட அசைவற்று யோசனையில் ஆழ்ந்து இருந்துவிட்டார். இதுதான் ஸமயம் என்று அந்த ஸந்யாஸினி இவரைக் கிட்டே அழைத்தாள். இவரும் முன் பின் யோசியாது ஓர் கூச்சமும் இன்றி அவள் அருகில் சென்றார்.

அருகில் வந்ததும் அந்த அம்மாள் மிகுந்த அன் புடன் இவரது மனோநிலையைப்பற்றிவிசாரித்தாள். இவ ரும் தயங்காது மனதைவிட்டு அந்த அம்மாளிடம் தம து மதவிஷய எண்ணங்கள், படிப்புக்கள் முதலியவை களை எடுத்துரைத்து 'பெரியோர் பெற்ற அநுபூதி எனக்கு எவ்வாறு வரும்' என்று மிகுந்த உருக்கத்து டன் கேட்டார். இதைக் கேட்டதும் இளமை மாறாத இவருக்கு இவ்வளவு ஆழ்ந்த மோக்ஷ அபேக்ஷை எவ் வாறு வந்தது என்று வியப்பு உண்டாக, அந்த அம் மாளுக்கு இவரிடம் கருணையுண்டாயிற்று. உடனே அவள் ஸந்தோஷத்துடன் இவர் கேட்டதற்கு இசை ந்து, கொஞ்சநேரம் இவரிடம் பெரியோர் அநுபூதி விஷயங்களைப்பற்றி உருக்கமாகப்பேசி, அப்பொழுது இவர் தபாது மனதை வைத்துக்கொள்ளவேண்டிய மா திரியைக் குறிப்பித்து விட்டு, இவர் தலையின்மேல் மிகுந்த அன்புடன் கையைவைத்தாள்! அப்பொ ழுது அளவில் அடங்காது எங்கும் வியாபித்த பரம்ஜ்யோதி ஒன்று இவரைச் சூழ்ந்துகொண்டது! தேகப்பிரஞ்ஞை உலகபிரஞ்ஞை எல்லாம் இவரை விட்டு அகன்றது! ஓர்வித ஆனந்தம் இவருக்கு உண்டாயிற்று! இதைத்தான் இவர் கமலாம்பாள்

சரித்திரத்தில் விசுவரூப தர்சன அத்தியாயத்தில் மனப் பூர்வமாக விவரித்தார் போலும், * இந்த நிரதிசய ஆனந்த நிலையில் கொஞ்சநாழிகை இருந்துவிட்டுப் பின்பு வெளிவர இவருக்கு மஹான்களது நிஷ்டாநுபூதிவிஷயத்தில் இருந்த ஸந்தேகங்கள் நீங்கி ஓர்வித ஸாகப்பிரஞ்ஞையே இவர் மனதில் குடிகொண்டது. அந்த அம்மாளிடம் சில உபதேச விஷயங்களைப்பெற்று அன்று வீடு வந்தார். கொஞ்சநாளைக்கு எல்லாம் அந்த அம்மாள் பட்டணம்விட்டுப் போய்விட்டாள். இன்ன விடம் போனுள் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை.

விசுவரூபதர்சனம்.

பக்திமானை முத்துஸ்வாமி அய்யர் திடீரென்று தம் முன் தோன்றிய ஸ்ரீ ஸச்சிதானந்த ஸ்வாமிகளால் தேற்றப் பட்டு தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் நீங்கி அந்த நள்ளிரவில் நிச்சப்தமான ஸமயத்தில் சிதம் பரம் சிவகங்கையில் ஸந்தியாவந்தனம் செய்ய இறங்கினர். அப்பொழுது ஸ்ரீ நடராஜப்பெருமான் அர்த்தஜாம கண்டா மணி அவர் காதில்பட அவர் உடம்பு சிலிர்த்தது மிகுந்த மன உருக்கத்துடன் அவர் ஸந்தியாவந்தனம் செய்து ஜபத் திற்கு ஆரம்பித்து வேதாந்த ரகஸியமாகிய ஓம் என்ற மூலப் பிரணவத்தை உச்சரித்தார். ' அப்பொழுது அவருடைய பிராந்தியோ அல்லது குருதர்சன விசேஷமோ அறியேன்— திடீரென்று பூமிமுதல் ஆகாயம் மட்டும் நிலவிலும் இனிய தாய் வெயிலிலும் காந்தியாய் தென்றலை உருவு கொண்டு வந்தாற்போல ஜில் ஜில் ஜில் என்று குளிர்ந்து மந்தமாய் அசைந்தாடும் ஒருதிவ்விய ஜ்யோதியானது இடைவெளி யற்று எங்கும் பரந்ததுபோல அவருக்குத் தோன்றிற்று. அவ் வாறு தோன்றிய அந்த ஜ்யோதி மஹிமையில் ' உலகவஸ்துக் கள் யாவும் மிகுந்த கம்பீரத்தையும் கௌரவத்தையும் அடை

இதுமுதல் மதவிஷயங்களில் இவருக்கு விசேஷப் பற்று உண்டாக உலகவிஷயங்களில் துச்சபுத்திவந்தது. ஸந்யாஸினி அம்மாள் கருணையால் கண்ட கண்கொள்

---

ந்து விளங்கின. ஆகாயத்தில் வெகுதூரம் மட்டும் ஸகல அண்டங்களும் பலவித வர்ண ஜ்யோதிகளாகப் 'பிரகாசித்துப் பகவானை நோக்கி அமிர்தமயமான கானத்தைச் செய்து ஓர் பயங்கரமான அழகுடன் வெகு கம்பீரமாக உருள, இவை எல்லாவற்றிற்கும் மேல் ஸகலலோகத்திற்கும் காரணனாய் நாயகனாய், சரண்யனாய், பெருமையினும் பெருமையாய் இனிமையினும் இனிமையாய் அநேககோடி ஸூர்யர்கள் ஏககாலத்தில் உதித்தாற்போல பார்க்கப்பதினாயிரம் கண்களும் போதாத அபரிமிதமான ஜ்யோதிஸ் ஒன்று தோன்றுவதை முத்துஸ்வாமி ஐயர் கண்டார். தமது கண்களால் கண்டு பாதாதி கேசம்வரையில் மயிர்க்கூச்செறிந்து ஆ என்று திறந்த வாயும் இமையாது விழித்தகண்ணுமாய் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கி மதிமயங்கி மெய்ம்மறந்து பரவசமாய் பிரமித்து ஸ்தம்பித்துநிற்க, காட்டி யொளிக்கும் மின்னல்போல் ஒரு கணத்துள் மறைந்தது அக் கரையில்லாக்காட்சி. மறைந்ததும் நெடுநேரமாக முத்துஸ்வாமி அய்யருக்கு உணர்ச்சியே வரவில்லை' உணர்ச்சி வந்ததும் அவர் ஓடோடியும் வந்து மிகுந்த பரபரப்புடன் ஸ்வாமிகளிடம் தாம் கண்ட அற்புதக் காட்சியைத் தெரிவித்து மிகுந்த பக்தியுடன் அடியணிய, ஸ்வாமிகள் 'முத்துஸ்வாமி! பயப்படாதே நல்ல நல்ல பூஜையைப் பண்ணியிருக்கிறாய் பகவான் உன்னிடம் விசேஷக்கிருபை வைத்திருக்கிறார்'. நீ அதிக பக்தியோடுகூட மட்டும் இருப்பாயாகில் 'இப்பொழுது பஹிரங்க பூதமாய்ப்பார்த்த ஆனந்தக்காட்சியை உனக்கு உள்ளேயே இடைவிடாது நீ தர்சித்து அனுபவிக்கலாம்' என்று மிகுந்த அன்புடன் தேற்றினார்.

ளாக் காட்சியை மறுபடியும் கண்டு ஆனந்திக்கவேண்டும் என்ற பேர் ஆவல் பிறந்தது. அந்த அம்மாள் போன விடந்தெரியாமல் மறைந்தது இவருக்கு முதல் துக்கத்தை உண்டாக்கியது. இவர் எக்கம்பிடித்தவர்போல் ஆனார். தேகவிஷயங்களைக்கூடக் கவனியாது இவர் அக்காட்சியைக்காண பிரயத்தனங்கள்செய்தார். சாஸ்திரங்களில் நிஷ்டாகாலங்களில் சப்தாதாதிகள் கேட்குமென்ற கோட்பாட்டைப் பின்பற்றி நாதண்டையில் மணி அடித்தல், கையைத்தட்டல் முதலியவைகள் மூலமாக நிஷ்டாநாதத்தை தியானஞ்செய்து முன்கண்ட காட்சியைக்கொண்டுவர எவ்வளவோ பாடுபட்டார். ஒன்றும் பயன்படாமல்போக சில ஸமயங்களில் கண்ணீர்விட்டு அழத்தொடங்கினார். இவர் பக்திமார்க்கத்தில் சொல்லும்படியான பிரிவு என்ற விரஹ நிலையில் இருந்தார்போலக் காணப்படுகிறது. இவர் மனோநிலையை அறியாத வீட்டிலுள்ளோர் எல்லோரும் இவருக்கு சித்தபிரமம் பிடித்ததென்று எண்ணி விட்டனர். அவர்களுக்கு இவர் தகுந்த விடை அளிக்காமலே இருந்துவிட்டார். அவர்கள் எண்ணம் வரவர திடப்பட்டது. இவ்வாறு கொஞ்சகாலம் தமது உத்தியோகவேலை தவிர மற்றைய வேலைகளில் எல்லாம் இவர் பரிதவித்துக்கொண்டு பார்வைக்கு சித்தப்பிரமை பிடித்தவர்போலக் காலத்தைக் கழித்துவந்தார்.

இந்த ஸமயத்தில் விவேகானந்தஸ்வாமிகள் திக்விஜயம் செய்து ஸநாதனதர்மத்தை உலகில் நிலைநிறுத்தப் பேராவல்கொண்டு பட்டணம் வந்தார். அமெரிக்கா போவதற்குமுன் உலகில் உள்ளோர் நமது மத

விஷயங்களை நன்கு உணரும்பொருட்டு பிரம்மவாதினி என்ற ஒரு மாதாந்த இங்கிலீஷ்ப் பத்திரிகையைத் தொடங்கி நடத்திவர ஏற்பாடுகள் செய்தார். அதன்படியே திருவல்லிக்கேணியில் அப்பத்திரிகை அப்பொழுது தொடங்கப்பெற்று இப்பொழுதும் பட்டணத்தில் நடந்துவருகிறது. இது தொடங்கியகாலத்தில் விஷயதானம் செய்வோர் அதிகமாக இல்லாததால், அப்பத்திரிகையில் முனைந்து வேலைசெய்தவர் ஒருவர், ராஜம் அய்யர் ஸ்நேகிதராயும், இவரது தேர்ச்சி முதலிய அரிய குணங்களை அறிந்தவராயும் இருந்ததால் உடனே இவரிடம் வந்தார். இவர் ஒன்றும் செய்யாது பித்துப் பிடித்தவர்போல வீட்டில் ஓர்புறம் சும்மா உட்கார்ந்திருப்பதைக் கண்டு, 'இவ்வாறு உமது கல்வித் தேர்ச்சி யாவும் வீணாகவேண்டுமா ? ஏன் வீண் காலம் கழிக்கின்றீர் ? நமது பத்திரிகைக்கு விஷயதானம் ஏதாவது செய்யுமேன்' என்று மிகுந்த பரிவுடன் கேட்டார். ராஜம் அய்யர் இதை இரண்டொரு தரம் லக்ஷ்யஞ் செய்யாது இருந்துவிட்டதைக் கண்டு பத்திரிகை அதிகாரி அடிக்கடி வந்து விஷயதானஞ் செய்யும்படி இவரை விடாது கேட்கத் தொடங்கினர். ஒருதரம் ராஜம் அய்யர் முன்பின் யோசிக்காது மறுதரங்கூட வாசித்துப்பாராமல் தம் நண்பர் வேண்டுகோளின்படி ஓர் வியாஸம் எழுதிக் கொடுத்தார். அது 'மனிதன் அவன் தாழ்வும் ஏற்றமும்' என்ற விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருந்தது. அதில்:—

இந்தியங்கள் மேலனவாம் என்றுரைப்ப இந்தியத்திற்
சிந்தைமிக மேலதனிற் சீறுடைத்துப்—புந்திதான்

மன்னியவப் புத்தியினும் மாண்புடையான் அன்றோனே
கன்னவிலுந் தோளாய்நீ காண்.

என்ற கீதவாக்கியத்தின் (கீதை அத்தியாயம் 3-சுலோகம் 42) விருத்தியுரையை எழுதி கற்பனைசக்தியின் விசேஷம், அதைவிட வேதாந்த முடிவான பரமபதத்தின் மேன்மை, இவைகளை வற்புறுத்தி, இந்த நிலையை அடையும்படியான சக்தி மனிதனுக்கு மாத்திரம் இருப்பதால் அவனுக்கு ஏற்றம் என்றும், அவனது கற்பனைசக்தி, புத்தியின் விரிவு ஆகிய இவைகளால் அவனுக்கு மற்றைய ஜீவராசிகளைவிடச் சற்று உயர்வு ஏற்பட்டபோதிலும் இவைகளால் அவனுக்கு உண்மையான ஏற்றமில்லை யென்றும், தேகம், இந்திரியம், மனது இவைகளால் மனிதனுக்குத் தாழ்வே ஒழிய ஏற்றம் உண்டாவதில்லை என்றும் தமது அநுபவத்தை ஒட்டி மிகுந்த உருக்கத்துடன் இந்த வியாஸத்தை அமைத்திருந்தார்.

இது பத்திரிகை அதிகாரிகளாய் இருந்தவர்களுக்குப் பிடிக்காமல் போக இதை இரண்டொருமாதம் வெளியிடாமல் வைத்துவிட்டனர். இரண்டொருமாதங் கழித்து விஷயங்கள் பத்திரிகைக்கு அகப்படாமற் போக பத்திரிகை அதிகாரிகளுக்கு ராஜம் அய்யர் வியாஸத்தைப் போடும்படியான அவஸரம் வந்துவிட்டது. அப்பொழுது இந்த வியாஸம் அதிக மாறுதலின்றி பிரம்மவாதினியில் வெளிவந்தது. ஸாதாரண புஸ்தக ஞானத்தால் எழுதும் பெரியோரது வியாஸத்திற்கும் ராஜம் அய்யர் வியாஸத்திற்கும் மடுவிற்கும் மலைக்கும் உள்ள பேதம் இருந்தது. மனிதன், அவன் தாழ்வும் ஏற்றமும் என்ற வியாஸம் அநேகரது மனத்தைக் கவர்ந்து அவர்களுக்கு அடங்கா ஆனந்தத்தை அளித்தது.



ஸ்ரீமத்ஸத்குரு

சாந்தானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்

இராஜம் ஐயர் குரு

## II. உபதேசம் பெற்ற சருக்கம்

சுருதிக் கர்த்தம் பொருளென்னும்
  அவையும் சொல்லாய் முடிக்கிடுமோல்
சுருதிக் கர்த்தம் பொருளாகில்
  ஞாயகுருவும் வேண்டுவதில்
சுருதிக் கர்த்தம் பொருளல்ல
  என்று துணிந்து மாறுநீ
சுருதி சொல்லும் பொருளதனைச்
  சுட்டிக் காட்ட வறிவாயே.

—சிதம்பரஸ்வாமிகள்

மனிதன், அவன் தாழ்வும்எற்றமும் என்ற வியாய ஸம்பிரம்ம வாதினியில் வெளியானதும் அதை அநேகர் வாசித்து ஆனந்தித்தனர். அக்காலத்தில் மைலாப்பூரில் மதவிஷயங்களில் மிகுந்த பிரீதி இருந்த பிரபுக்கள் சிலர் இருந்தனர். அவர்களில் சிலர் இன்னமும் இருக்கிறார்கள். அவர்களுக்கு முதல் முதல், தியஸாபிகல் ஸங்கத்தார் உபந்யாஸங்களைக் கேட்டதனால் நமது மதவிஷங்களில் ஓர்விதப்பற்று உண்டாயிற்று. கொஞ்ச நாளில் அந்த உபந்யாஸங்கள் அவர்களுக்குப் பிடிக்காமல் போக, நமது மதவிஷயங்களை நம்மவரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அந்தத் தருணத்தில் பட்டணத்திலேயே மிக அற்புதமாக நமது மத உண்மைகளை எல்லோரும் எளிதில் அறியும்படி வெளியிட்டுக்கொண்டு சாந்தானந்தஸரஸ்வதி சுவாமிகள் என்பவர் ஒருவர் இருந்தார். அவரது வைபவத்தை அப்பிரபுக்கள் அறிந்து அவர் வாரம் இரண்டுமுறை செய்துவந்த உபந்யாஸங்

களை விடாது கேட்டுவந்து மதவிஷயங்களில் ஒருவாறு தேர்ச்சி அடைந்திருந்தனர். அவர்களது உள்ளத்தை ராஜம் அய்யர் பிரம்மவாதினியில் எழுதி வெளியிட்ட வியாஸம் கவர்ந்தது. அதை மிகுந்த ஆவலோடு ஸ்வாமிகளிடம் கொண்டுபோய் அவர்கள் காண்பிவித்தனர். ஸ்வாமிகள் பி. ஏ. பரீக்ஷை வரையில் வாசித்திருந்தவராகையால் அந்த வியாஸத்தை நேரிடத் தாமே வாசித்து ஆனந்தித்தார். அவருக்கு அப்பொழுது அதை எழுதி வெளியிட்ட புண்யபுருஷனைக் காணவேண்டும் என்ற அடங்கா ஆவல் பிறந்தது.

ராஜம் அய்யர், முன்னரே ஓர் ஸந்யாஸினியிடமிருந்து முதல் உபதேசம் பெற்றிருந்ததாகச் சொல்லி இருக்கிறோம். அதன்பின்பு அவர் எவ்வளவோ முயன்றும் மேலான நிலையை மறுபடியும் அடைய முடியாமல் போக அவருக்கு ஏக்கம் பிடித்தது. 'சுருதிக் கர்த்தம் பொருளல்ல என்று' துணிந்தவராய், 'சுருதி சொல்லும் பொருளதனை சுட்டிக்காட்ட' அதனால் மேலான நிலை கைகூடி உய்யும்பொருட்டு ஓர் ஸத்குருவை அடைய அவர் சிற்சில முயற்சிகள் செய்தார். அந்தக்காலத்தில் எங்கேபெரியோர்கள் உபந்யாஸங்கள் செய்கின்றார்கள் என்று கேட்டாலும் ஸரி, அங்கே அவர்தயாராகப்போவது வழக்கம். அப்படி அவர் திரிந்து கொண்டிருந்த ஸமயத்தில் ஸ்ரீமத்ஸத்குரு சாந்தானந்தஸ்வாமிகளின் வைபவம் அவர் காதிற்கு எட்டியது. அநேகம்தரம் அவரை அணுகி அவர் சொல்லும் அரிய விஷயங்களைச் சிரவணம் செய்ய ராஜம் அய்யர் தம்மால் இயன்றமட்டும் பாடுபட்டார். ஒன்றும் பயன்படாமல்

போய்விட்டது. அப்பொழுது ஸ்வாமிகளிடம் சிரவணத்திற்கு வந்தவர்கள் ஒவ்வொருவரிடத்திலிருந்தும் நன்கொடையாகக் கொஞ்சம் பணம் வாங்கப்பட்டுவந்தது. அது கொடுக்க முடியாதவர்களுக்கு ஸ்வாமிகளை தரிசிப்பது கூட அஸாத்தியமாக இருந்தது. இது அக்காலத்தில் வாங்கவேண்டுவது அநேக காரணங்களால் அவசியம் என, ஸ்வாமிகளைச் சூழ்ந்திருந்த சிஷ்யர்கள் எண்ணியிருந்தனர். ஸ்வாமிகள் எவ்வளவோ தடுத்துச் சொல்லியும் சிஷ்யர்கள் கேட்கவில்லை. இந்த நன்கொடையோ ராஜம் அய்யருக்குத் தடையாயிருந்தது. இதைக் கொடுக்க சக்தி இல்லாததால் ராஜம் அய்யருக்கு எவ்வளவு முயன்றும் ஸ்வாமிகளிடம் போகமுடியவில்லை. இப்படிப்பட்ட ராஜம் அய்யரை ஸ்வாமிகளே பார்க்கவேண்டும் என்று கொண்ட ஆவலை நோக்கில் மஹான்கள் கடவுளால்காப்பாற்றப்படுவார்கள் என்பதற்கு என்ன சந்தேகம்?

ஸ்வாமிகள் இவ்வாறு ஆவல்கொண்டதும், மைசூர் பிரபுக்களுக்கு எப்படியாவது 'மனிதன், அவன் தாழ்வும் ஏற்றமும்' என்ற வியாஸம் எழுதிய மஹானைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாய்விட்டது. உடனே அவர்கள் பிரம்மவாதினி பத்திராதிபரிடம் சென்று இதைப்பற்றி விசாரித்து ராஜம் அய்யர் வீட்டைக்கண்டு பிடித்தார்கள். அங்கு சென்று பார்த்ததும் ஏதோ பித்துப்பிடித்தவர்போல அவர் காணப்பட்டார். இதைக்கண்டு வியந்து இப்பிரபுக்கள் அவரோடு கொஞ்சம் ஸம்பாஷிக்க, பிரம்மவாதினி பத்திராதிபர் சொன்னதுபோல அவர் பித்தர் அல்ல என்பது வெளி

யாயிற்று. இவரோடு இன்னும் அந்தரங்கமாகப் பேச அப்பிரபுக்கள் இவரை தமது வீட்டிற்கு ஓர் இரவில் வரும்படி ஏற்பாடுசெய்துவிட்டு தம் வீடு வந்து சேர்ந்தனர்.

குறிப்பிட்ட நாளில் ராஜம் ஐய்யர் அப்பிரபுக்கள் வீட்டிற்குவர, அவர்களுக்குள் மிகுந்தநேர்த்தியான ஸம்பாஷணை ஒன்று நடந்தது. அதில் பிரபுக்கள் நாஸ்திகவாதம் செய்தனர். அனுபூதிமானதலால் ராஜம் ஐய்யர் தக்க விடை தயங்காது அளிக்க, ஸ்வாமிகளுக்கு அவரைப்பார்க்க உண்டான ஆவல் தகுந்தது என்று அவர்களுக்குத் தோன்றியது. உடனே தமது மனதை உள்ளபடி ராஜம் ஐய்யருக்கு அவர்கள் காட்ட, எல்லோரும் மிகுந்த ஆனந்தத்தோடு அன்றிரவு கலந்து பேசிக்கொண்டனர். அப்பொழுது அவர்கள் சாந்தானந்த ஸ்வாமிகளின் சிறப்பையும் அவர் ராஜம் ஐய்யரை காணக்கொண்டிருந்த ஆவலையும் வெளியிட, 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததென' மகிழ்ந்து ஸ்வாமிகளைக் காண ராஜம் ஐய்யர் இசைந்தார். எல்லோரும் ஒருநாள் ஸ்வாமிகளிடம் சென்றனர்.

ஸ்வாமிகளுக்கும் ராஜம் ஐய்யருக்கும் முதல்நாள் ஸம்பாஷணை நடந்தது. அதில் அவர் எழுதிய வியாஸத்தை வைத்துக்கொண்டு அதன் மூலமாக ஸ்வாமிகள் அவரது அனுபூதி விஷயங்களைப்பற்றி ஊன்றி விசாரித்து, சிற்சில விடங்களில் ஒருவாறு குற்றங்கூறி முடிவில் வெகு அழகாகத் தமது அபிப்பிராயத்தையும் வெளியிட்டு, பொதுவாக ராஜம் ஐய்யரை மிகவும் புக

ழ்ந்து பேசினார். அன்று நடந்த விஷயங்களிலிரு ந்து, ஸ்வாமிகள் ஒருவாறு வாசாஞானம் மாத்திரம் உடையவர் என்றும் பக்தியின் ரஸத்தை முழுவதும் அறியாதவர் என்றும் ராஜம் அய்யருக்குத் தோற்றி யது. அன்று வீட்டிற்கு வந்ததும் அவர் ஸ்வாமியா ரைப்பற்றி ஸாதாரணமாகப் பேசிவந்தாரே ஒழிய அவரிடம் விசேஷ கௌரவம் இருப்பதாக எண்ணிப் பேசவில்லை. ஸ்வாமிகள் ஸாதாரணமாக எல்லோ ரும் பக்தி என்று சொல்லும்படியானது ஞானத்தை விடத் தாழ்ந்த நிலை என்று அநுபூதிவிஷயங்களைப்பற் றிப் பேசுங்கால் சொன்னது ராஜம் அய்யருக்கு இம் மாதிரியான அபிப்பிராயத்தை உண்டாக்கியதுபோ லத் தோற்றுகிறது.

இரண்டாம் முறை ஸ்வாமிகளிடம் இவர்கள் போவதற்குமுன், ஓர் வெள்ளிக்கிழமை அன்று பட்ட ணத்திற்கு அருகாமையில் தியாக ராஜஸ்வாமி திருக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவான்மி யூரென்ற திவ்யக்ஷேத்திரத்திற்கு இவர்கள் எல்லோரும் போகும்படி நேர்ந்தது. அங்கு விசேஷமாயிருக்கும் அம்பாள் ஸன்னதியில்இவர்கள் வந்ததும் ராஜம்அய்யர் தம்மனோபாவத்திற்கேற்பத்தியானம் செய்யத்தொடங் கினார். அவர் கண்களிலிருந்து தாரைதாரையாக ஆனந்த பாஷ்பம் பெருகத் தொடங்கியது. பிரபுக்களுக்குஇது மிகுந்த ஆச்சர்யமாகத்தோன்ற அந்தவிடத்தைவிட்டு அசைய மனம் வராது அங்கேயே நின்றுவிட்டனர். வெகுநாழிகை இவ்வாறு மெய்ம்மறந்து பரவசமாயிரு ந்தபின்பு ராஜம் அய்யர் கண்விழிக்க எல்லோரும் மை

ளைப்பூர் நோக்கிப்புறப்பட்டனர். போகும் வழியில் பக்தி, ஞானம் இவைகளின் ஸ்வரூபத்தைப்பற்றியும் உண்மையாக மோக்ஷமார்க்கத்தில் பாடுபடும் ஒருவனு க்கு ஆனந்தபாஷ்பம் முதலிய வெளித்தோற்றங்கள் இருத்தல் அவசியம் அல்ல என்ற விஷயத்தைப்பற்றி யும் அவர்கள் வெகுவாகப் பேசிக்கொண்டு வந்தனர். அதில் ராஜம் அய்யர் தமது அனுபூதிக்கேற்ப பக்தி, மனஉருக்கம், ஆனந்தபாஷ்பம் ஆகிய இவைகள் இன்றி பரமபதம் ஒருவனுக்கு ஸித்திப்பது அரிது என்று எடுத்துரைத்து தகுந்த ஆதாரங்கள் காண்பித்தார். பிரபுக்களுக்கு மோக்ஷத்திற்கு முன்கூறியவைகள் நே ரான வழிகள் அல்லவென்று தோன்றியபோதிலும், அனுபூதி லவலேசமேனும் இல்லாததால் அவருக்குத் தக் கபடி ஆக்ஷேபணைகள் கூறிப்பிரபுக்களுக்கு தமது எண் ணத்தை ஸ்தாபிக்க முடியாமல் போயிற்று.

இரண்டாம் முறை இவர்கள் ஸ்வாமிகளிடம் போ னதும் முன்னாள் நடந்தவைகளை ஆதியோடு அந்தமாக அவருக்குச் சொல்லிவிட்டனர். இன்னும் பக்தியில் உள்ள விசேஷப்பற்றால் ஞானத்தின்சிறப்பு ராஜம்அய் யருக்கு விளங்கவில்லை என்று கண்ட ஸ்வாமிகள் அவ ரை தமது ஏகாந்த ஸ்தானத்திற்கு அழைத்துப்போய் ஞானானுபூதி விஷயங்களை வெளிப்படையாக உபதேசி த்தார். அதன்முடிவில் ராஜம் அய்யருக்கு மனதில் ஓர் வித ஸமாதானமும் திருப்தியும் உண்டாயிற்று. அன் றோடு ஆனந்தபாஷ்பாதி வெளித்தோற்றங்கள் அவரை விட்டு அகன்றன. அதன் பின்பு எந்தக்கோயிலுக்குப் போனபோதிலும் அவர் கண்களில் ஒரு பொட்டு நீர்

கூடவரவில்லை. ஸ்வாமிகள் எடுத்துக்கூறியவாறு நடக்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று. ஸ்வாமிகளைப்பற்றி அவருக்கு முன்பு இருந்த அபிப்பிராயங்கள் எல்லாம் மாறிவிட அவரிடத்தில் ராஜம்அய்யருக்கு மிகுந்த பக்தியுண்டாய் விட்டது. ஆதலால் அவரையே அவர் குருவாகக் கருதிவிட்டார். கொஞ்ச நாளில் ஸ்வாமிகள் உபதேசம் செய்ய அவருக்கு முன்பு தாம் ஸந்யாஸியினிடம் கேட்டது பூர்த்தியாய்விட்டதென்ற எண்ணம் உண்டாயிற்று! மனம்குளிர்ந்தது!

எவருடை யருளால் யானெனக் குமாம் பிரமமென்பால்
கவருடைப் புவனமெல்லாம் கற்பிதம் என்றறிந்து
சுவரிடைவெளிபோல்யானென் சொரூபஸ்வபாவமானேன்
அவருடைப்பதும பாதம் அநுதினம் பணிகின்றேனே

என்று துதித்தார். அன்றுமுதல் அவர்பக்திவிஷயத்தில் செலுத்தியிருந்த சக்தி எல்லாம் ஸ்வாமிகள் சொன்னபடி நிஷ்டைபழகுவதில் திரும்பிவிட்டது. ஸ்வாமிகள் சொல்வதை சிரவணம் செய்வதும் அதைப்பின்பு ஏகாந்தமாக மனனம் செய்து நிஷ்டையில் இருப்பதும் மற்றையவேளைகளில் சாஸ்திரப் புஸ்தகங்களை வாசிப்பதுமே அவரது முக்கியகாரியமாய் விட்டன. அவர் தமது உத்தியோகத்தை மாத்திரம் அரைமனதோடு விடாது அப்பொழுதும் பார்த்துக்கொண்டு வந்தார்.

இப்பாகத்தை வாசிப்பவர்கள் பக்தி தாழ்ந்தது, ஆதலால் பயனற்றது, என்ற கெட்ட எண்ணத்தை மனத்தில் வைக்கக்கூடாது. நம்மைப்போன்ற ஸாதாரண ஜனங்கள் பக்தியின் மூலமாகவே மேலான

நிலையை அடைய முயலவேண்டும். பக்தியில் மழுகி மனது ஏகாக்கிரப்பட்டு வருங்கால் ஞானம் வந்து உதவாவிடில் மேல்நோக்கிச் செல்வது மிகவும் கஷ்டம். சிற்சில ஸமயங்களில் பக்தர்களுக்கு மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் ஸாதனமாகிய ஞானம் வந்து உதவாததால், அவர்கள் பாமரர்களைவிட அதோ கதியை அடையும் படியான நிலைக்கு வந்துவிடலாம். ஆகையால் பக்தர்கள் ஞானத்தின் சிறப்பை அறிந்து தமது நிலையை மேன்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். இம்மாதிரியான அபாயத்திலிருந்து பக்திமானை ராஜம் அய்யரை விடுவிப்பதற்கே ஸ்வாமிகள் ஞானத்தின் சிறப்பை எடுத்துக்கூறி அவரது ஆனந்தபாஷ்பாதி வெளிபடாடோபங்களை தடுத்துவிட்டார். இதிலிருந்து ஞானமில்லாத பக்தி கேவலம் மனக்கொதிப்பாகவே முடியும் என்று தெரிந்துகொண்டு, பக்தி இல்லாத ஞானம் கேவலம் வாசா ஞானமாகவே முடியும் என்பதை மறவாமலிருக்கவேண்டும்.

இவ்வாறு உபதேசம் பெற்றபின்புதான் ராஜம் அய்யர் ஸாதாரண மனிதர்களைப்போல ஆனார். முன்பு இருந்த ஏக்கம் அவரைவிட்டு நீங்கியது. ஆனால் வரவர அவருக்கு தேகவிஷயங்களில் தம்மை அறியாமலே அசிரத்தை ஏற்பட்டது. அவர் மனம் வரவர மேலே நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டது. இதனால் ஸ்வாமிகள் உபந்நியாஸம் செய்யுங்கால் ராஜம் அய்யரைப் பார்த்தால் புதிதாகப் பார்க்கிறவர்களுக்கு அவர் ஏதோ அசிரத்தையாக உறங்குபவர் போலவும் ஏதோ மயக்கத்திலிருக்கிறவர்போலவும்

தோன்றும். அவரை அறிந்தவர்களுக்கு மாத்திரம் தான் அவரது நிலையின் சிறப்புத் தெரியும். ஸ்வாமிகளுக்கு அவரது நிலை உள்ளபடி தெரியும் என்று நாம் சொல்லவும் வேண்டுமா?

ஸ்வாமிகள் உபந்நியாஸங்களில் உறங்காது இவர் மிகுந்த கவனத்தோடு சிரவணம் செய்துவந்தார், என்பது ஒரு சிறு விஷயத்தால் வெளியாயிற்று. அப்பொழுது, இராயப்பேட்டையில் ஒருவர் தாயுமானஸ்வாமிகளைப்பற்றி உபந்நியாஸம் செய்வதாக ஒப்புக்கொள்ள அதற்கு ஏற்பாடு செய்த கார்யதர்சி ஒருவர் நமது ராஜம் அய்யரை அக்கிராஸனம் வகிக்கும்படி வேண்டிக்கொண்டார். ராஜம் அய்யர் அதை ஒப்புக்கொள்ள உபந்நியாஸம் நடந்தது. முடிவில் அவர் எழுந்து தமது அக்ராஸனாதிபதி அவஸரத்திலிருந்து உபந்யஸிக்கத் தொடங்கினார். அவர் எழுந்ததும் பரவசமாகிப் பேசத் தலைப்பட்டார். வெகு நாழிகை சரமாரியாகத் தாயுமானவரது சிறப்பைப்பற்றி பேசி முடித்தார். இவர் பேசியது உபந்யாஸமாகவும், உபந்யாஸகர் பேசியது அக்ராஸனாதிபதியின் சுருக்கமான பேச்சென்றும் கேட்டவர்களுக்குத் தோற்றியது. கேட்கவந்தவர்கள் எல்லோரும் அசையாது ஸ்தம்பமாய் இருந்துவிட்டனர். எல்லோரும் மிகுந்த ஸந்தோஷம் அடைந்தனர். இவ்வாறு ராஜம் அய்யர் அக்கிராஸனம் வகித்ததும் வேறு சில ஸமயங்களில் அவர் பேசியதுமே அவரது மனோநிலையை அக்காலத்தில் எல்லோருக்கும் நன்கு விளக்கியது.

மேலும் அக்காலத்தில் ராஜம் அய்யருடைய மனோநிலை எவ்வாறிருந்தது என்று நன்றாக அறியவேண்டுமானால் கமலாம்பாள் சரித்திரத்தில் 30-வது அத்தியாயமாகிய கருதுமன்பர் மிடிதீரப்பருகவந்த செழுந்தேனாகி என்ற அத்தியாயத்தை ஆழ்ந்து யோசித்து வாசித்துப்பார்க்கவேண்டும். கோபுரதர்சனத்தின் ஸ்வரூபம், சிதம்பரத்தின் சிறப்பு, 'கடவுள் ஒருவரோ ஆனாலும் அவரை அறியவும் அனுபவிக்கவும் அனேக வழிகள் இருக்கின்றன' என்ற விஷயத்தைப் பற்றிய விசாரணை, முத்துஸ்வாமி அய்யர் 'சிந்தையில் எழுந்து பொங்கி ஜகமெலாம் நிறைந்து தேங்கி அந்தமில்லாததான ஆனந்தத்தில் மூழ்கி'ப்பெற்ற சிவானுபூதி விசேஷம் * ஆகிய இந்த அரிய விஷயங்களை அடக்கியுள்ளது. இந்த அத்தியாயத்தில் முத்துஸ்வாமி அய்யர் சிதம்பர கோபுரந்

* மோனானந்தநிலை :—திருவொற்றியூரில் பட்டணத்தார் ஸமாதிக் கருகில் சச்சிதானந்த ஸ்வாமிகளது சிஷ்யர்களோடு முத்துஸ்வாமி அய்யர் ஓர்ஸாயங்காலம் உட்கார்ந்துகொண்டிருக்கையில், அவர் வெகு உற்சாஹத்தோடு 'கடவுள் ஒருவரேயானாலும் அவரை அறியவும் அனுபவிக்கவும் பலவழிகளிருக்கின்றன. அந்தவழிகளிலெல்லாம் உத்தமமான வழியை எது போதிக்கிறதோ அதுதான் உத்தமமான மதம்' என்ற விஷயத்தைப்பற்றி முதலில் பேசினார். பின்பு நம்முடைய பெரியவர்கள் கடவுள் மூர்த்தங்களை எல்லாம் ஞானஆனந்த மூர்த்திகளாகப் பாவனை பண்ணியிருக்கிறார்கள்' என்ற விஷயத்தை விஸ்தரித்தார். இதைப்பற்றி உற்சாஹமாக பேசிக்கொண்டு வரும்போதே அவருக்கு 'திடீரென்று பெரிய விஷயங்களைப்பேச ஒரு ஆசையும் கட்டுக்கடங்காத ஒரு குதூஹலமும், உண்டாயிற்று அவர், ஆகாயம் காற்று

கை மனமுருகித் துதித்தபின்பு, அவர் குரு ஸச்சிதா
னந்த ஸ்வாமிகள் 'முத்துஸ்வாமி, என் தங்கமடா நீ
என்று மனதாரமெச்சித் தட்டிக்கொடுத்து' சிதம்பரத்

மேகம் கடவுள் இவற்றையெல்லாம் பற்றிப் பேசியும் அவருடைய உள்ளத்தின் ஆராமைக்கொதிப்பு அடங்கவில்லை. இவ்விதம் சிறிது நேரம் அவருக்கு அஸாத்தியமான பரபரப்பு இருந்தது- பிரமாதமான மனப்பசி ஒன்று உண்டாயிற்று. இப்படிச் சில நிமிஷங்கள் கழிந்தபிறகு அப்பரபரப்பு முற்றும் அடங்கி ஓர்வித ஆனந்தம் அவருக்கு ஜனித்தது. நிஷ்காரணமான குதூஹலம் ஒன்று அவருள்ளத்தில் பிறக்க அவருக்குக் கண் மூடிவிட்டது, பேச்சு ஒழிந்து மௌனம் குடிகொண்டது, மனதில் தான் அனுபவிக்கும் எண்ணம் ஒன்றுதவிர மற்றைய நினைப்பு அனைத்தும் இறந்தது. வெளியில் பார்க்கப்படும் பொருள்கள் எல்லாம் கொஞ்சமும் மனதில் பதியவே இல்லை. அவர் எதோ வெளியில் கலந்து ஒன்றுபட்டாற்போல அவருடைய மனம் அகண்டாகாரமான நிலைமை அடைந்தது. அவர் அனுபவித்த ஆனந்தத்திற்கு எதுவும் ஈடில்லை. அக்காலத்தில் மற்றைய எவ்வித ஸந்தோஷமும் அவருக்குக் கேவலமாகவே தோன்றிற்று, அவருடைய உள்ளக்கொதிப்பு அலைவீசி எழுந்தது. அவர் முகம் மலர்ந்த வண்ணமாகவே இருந்தது, கண்போயே போய்விட்டது. தானே பிரம்மமயமானாற்போன்ற ஓர்வித அறிவு அவருக்கு உண்டாயிற்று. புலன்கள் அனைத்தும் அடங்கியிருந்தன. பகவத் விஷயமாகத் தாழ்ந்த குரலில் அருகிலிருந்தவர்கள்பேச அவருக்கு அந்த ஆனந்தம் அதிகப்பட்டது. சொல்ல அறியாத இவ்வித ஆனந்தத்தில் அவர் இருந்தபோது, ஸ்வாமிகள் உள்ளே இருந்து வெளியே வந்தார். அவரைக்கண்ட உடன் முத்துஸ்வாமி அய்யருக்கு ஆனந்தம் பெருகிற்று ஸ்வாமிகள் அவர் அருகில் உட்கார்ந்து "இதுதான் இன்பம், உனக்குப்பரிபக்குவகாலம் ஸமீபிக்கி


தின் சிறப்பை விஸ்தாரமாக அவருக்கு உபதேசிக்கிறார். இந்த ஸந்தர்ப்பத்தில் ராஜம் அய்யர் பின்வரும் குறிப்பை எழுதியுள்ளார்.

இது குரு சிஷ்யபாவத்தை அனுபவித்தவர் அன்றி மற்றோர் அறிதல் அரிது. சிஷ்யன் குருவைத் தேடிச்செல்வது போலவே குருவும் சிஷ்யனைத்தேடி அலைகிறார். ஒரு ஊரில் ஒரு அரசன் வேதாந்த விசாரணையில் ஆசைகொண்டு சிஷ்யனுக்குத்தக்க குருவேண்டும் என்று முரசறைவித்தான். வள்ளுவன் முரசறைந்து வரும்போது ஊருக்கு வெளியில் ஓர் குப்பைமேட்டில் கூர்மாசனமிட்டு எழுந்தருளியிருந்த ருஷி ஒருவர் அவ்வள்ளுவனை அழைத்து 'குருவுக்குத்தக்க சிஷ்யன் வேண்டுமென்று முரசறையச்சொன்னார். அவன் அவ்வாறு அறைந்த பறையோசையைக்கேட்டு அரசன் திடுக்கிட்டு உண்மைவிசாரித்து மனமகிழ்ந்து குருவையடைந்து பிறவி கடந்தான் என்று ஒரு கதைகூட உண்டு. தேடிப்பெற்ற சிஷ்யனிடத்து குருவுக்கு அந்தரங்கமாக உள்ள சின்மயமான பேரின்ப வாஞ்சை ஜனிக்கும். இருவரும் பிரம்மத்தையறிந்தனுபவிக்கும்பொழுது குருசீஷன், சிறியன் பெரியன் என்ற பேதாபேதமற்ற ஸமரஸ நிலையில் இருப்பது வேதாந்திகள் அறிந்த வழக்கம்.

றது' என்று சொல்லி உற்சாஹப்படுத்த அவருக்கு ஆனந்தம் கரைகடந்து பெருகிற்று. அவர் வாய்விட்டுச்சிரிக்கவும் தொடங்கிவிட்டார். இன்னவிதமான ஸந்தோஷம் என்று அவருக்கு வாய்திறந்து சொல்லமட்டும் கூடவில்லை. மனதில் இன்னமிர்தம் ஊறிக்கொண்டேயிருந்தது. இவ்விதமாகப்பொழுதுபோவதே தெரியாமல் இராக்காலம் முழுவதும் கழிந்தது, அது மறுநாளும் தொடர்ச்சியாக நடந்திருக்கும்.' ஆனால் அருகாமையில் உண்டான சப்தாதிகள் அதைக்கெடுத்துவிட்டன.'

இக்குறிப்பு ராஜம் அய்யருக்கும் சாந்தானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கும் இருந்தவிசேஷப்பற்றுதலை யும், அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டுபேசு வதற்கு முன்னமேயே ஒருவரை ஒருவர் காண வேண்டுமென்று கொண்ட ஆவலையும் ஒருவாறு குறிப் பிக்கின்றது என்பது நாம் சொல்லாமலே இதைவாசிப் போருக்கு எளிதில் விளங்கும்.

இவ்வாறு உபதேசம் பெற்று மேன்மைஅடைந்த ராஜம் அய்யர் நமது நாட்டிற்குப் பொதுவாக இன்ன படி உதவிபுரிந்தனர் என்ற விஷயத்தை அடுத்த சருக் கத்தில் விவரிப்போம்.




பிரபுத்தபாரத முகபடம்.

# III. பிரபுத்தபாரதச் சருக்கம்

ஆன்றோ ரிருப்பது ப்ரஸித்தமுறா ஸரிதவர்
அபூர்வமாக் கண்டோமெனும்
அகமுறார், குருவினருள் தெரிவிப்பதாநம்பி
அறைவர் அவர் புகல் நூலெல்லாம்
வான்றோயு மெய்ப்பொருளவாம். அவற் றாக்கியோன்
வினைபெய ரிராதவர்க்கு
வினைகர்மம் நோக்கன்று, கடவுளிட நீடுபடல்.
மற்றதாக் கினுமாக்குவர்.
என்றே யதைச் செயினும் ஈசன்வழி பாடென்றும்
எண்ணமொடு செய்வர். உலகுக்
கிவ்வுதவி செயகுது மெனுஞ் செருக் கொடு
செயார். இதனி னிலை போலுமுதவி
சான்றோய தொன்றுமிலை. உதவி செய்
பேராவல் சார்ந்தவர்க ளாலுமிங்ஙன்
தட்டற்ற வுதவிசெய வொண்ணாதிவாறு
மறை தகையர்மெய் யுதவியாமே

இ. வை. அனந்தராம அய்யர்.

பொழிப்புரை:—பெரியோர்கள் இருப்பது உலகப்பிரசித்தமாவது அபூர்வம். தாம் புதிதாகக் கூறுகிறோம் என்ற கர்வத்தோடு ஒரு உண்மையையும் இவர்கள் கூறார்கள், தமது குரு அனுக்கிரஹத்தாலேயே தாம் கூறுவதாக நம்பி இவர்கள் வெளியிடுவார்கள். ஆதலால் இவர்கள் செய்யும் நூல்கள் யாவும் மாறா உண்மைகளை உடையனவாக இருக்கும். அவைகளில் ஆக்கியோன் பெயர் காணப்படாது. கர்மங்கள் செய்யவேண்டும் என்பது இவர்கள் நோக்கம் அல்ல, கடவுளிடம் ஈடுபட்டு நிற்றலே இவர்களது வாழ்க்கைத்தொழில். ஸாதாரண ஸமயங்களில் இவர்கள் கர்மங்கள் செய்தாலும் செய்வார்கள். இவர்கள் தாம் செய்யும் கர்மங்கள்

எல்லாவற்றையும் பகவத் ஆராதனையாகவே எண்ணிச்செய்வார்கள், லோகோபகாரம் என்ற செருக்குடன் செய்யார்கள். இவ்வாறு செய்யப்படுதலால் இவர்களது கர்மங்களைப் போல லோகோபகாரம் புரியக்கூடியவைகள் உலகில் ஒன்றும் இல்லை. உபகாரம் செய்யவேண்டும் என்ற பேராவலோடு மனப்பூர்வமாகக் கர்மங்களை செய்பவராலுங்கூட இப்பெரியோர்களைப்போன்றமாறு உபகாரம் செய்யமுடியாது. இப்படி மறைந்தொழுகும் பெரியோர்களே உண்மையான பரோபகாரிகள்.

உபதேசம் பெற்றதுமுதல் கொஞ்சகாலமாக ராஜம் அய்யர் ஸ்வாமிகளிடம்சென்று அரிய உண்மைகளை சிரவணம் செய்து, பின்பு மனன நிதித்யாஸனாதிகள் மூலமாக நிஷ்டையில் தேர்ச்சி அடைந்து கொண்டு வந்தார். மைலாப்பூர் பிரபுக்களும் ராஜம் அய்யரும் சேர்ந்து மதவிஷயங்களில் இவ்வாறு பாடுபட்டுவருநாளில் பிரபுக்களுக்கு ஓர்வித மனக்கிளர்ச்சி உண்டாயிற்று. ஸ்வாமிகள் வாரம் இரண்டுமுறை செய்யும் அரிய உபந்யாஸ விஷயங்கள் கேட்டது கேட்டபடி இருந்தனவே ஒழிய வேறில்லை. அவைகள் நீடித்து நிற்கும்படி எழுதப்பட்டால் உபந்யாஸம் கேட்டவர்களுக்கு ஞாபகக்குறியாகவும் மற்றவர்களுக்கு மிகுந்த உபகாரமாகவும் இருக்கும் என்று முன்னமேயே அவர்களுக்குத் தோன்றிக்கொண்டிருந்தது. மேலும் தமிழ் ஆங்கிலம்முதலிய பாஷைகளில் விசேஷத் தேர்ச்சியும், அழகிய வியாஸங்கள் எழுதுவதில் விசேஷசக்தியும், மதவிஷயங்களில் விசேஷப்பற்றும் வாய்ந்த ராஜம் அய்யர் அவர்கள் ஸ்வாமிகளுக்கு சிஷ்யராக ஏற்பட்ட

தாம் முற்கூறிய எண்ணம் பிரபுக்களுக்கு ஓர் மனக்கிளர்ச்சியாக எழ, அவர்களுக்கு ராஜம் அய்யரை பத்திராதிபராகவைத்துக்கொண்டு ஓர் மாதாந்திர பத்திரிகை ஏற்படுத்தி, அதில் எளிய ஆங்கிலநடையில் நமது பாண்டித்யசாலையில் படிக்கும் சிறுவர்கள் எளிதில் உணரும் வண்ணம் ஸ்ரீமத் சாந்தானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் அழகாக வெளியிட்டுவரும் மத உண்மைகளை எழுதி பிரசுரம் செய்யவேண்டும் என்ற பரபரப்பு உண்டாயிற்று. அந்த ஸமயத்தில் அமெரிக்காவிலிருந்து திக் விஜயம் செய்து நம் மதமாம் ஸனாதன தர்மத்தை அங்கு நிலைநிறுத்தி அரிய விஷயங்களைச் செய்த விவேகானந்த ஸ்வாமிகள் வெகு கோலாஹலமாக மரியாதைகள் செய்யப்பட்டு பட்டணம் வந்துசேர்ந்தார். அமெரிக்காவிற்கு போகும்முன்னரே விவேகானந்த ஸ்வாமிகளுக்கும் பிரபுக்களுக்கும் நெருங்கிய பழக்கம் இருந்தது. ஆதலால் பிரபுக்கள் விவேகானந்த ஸ்வாமிகளை அணுகி தாம் ஏற்படுத்தி நடத்தப்போகும் பத்திரிகையின் நோக்கம் முதலியவைகளைப் பற்றிவிஸ்தாரமாகப்பேசி, அதற்கு அதிபராக இருந்து அதை நடத்தப்போகிற ராஜம் அய்யரையும் ஸ்வாமிகளின்முன் கொண்டு விட்டார்கள்.

விவேகானந்த ஸ்வாமிகளுக்கும் ராஜம் அய்யருக்கும் கொஞ்சநாழிகை நடந்த ஸம்பாஷணையில் ஸ்வாமிகளுக்கு இவருடைய ஆழ்ந்த அறிவு, நிலைபெற்ற மன உருக்கம், அனுபூதி முதலிய யோக்யதாபாகங்கள் தெரியவந்தன. மதவிஷய பத்திரிகைகள் அநேகம் பரத கண்டத்தில் ஏற்பட்டு ஸனாதனதர்ம விஷயஞான

த்தை அமெரிக்கா முதலிய வெளிதேசங்களில் பரவச் செய்து அதனால் தாம் செய்த திக்விஜயம் நிலைபெற வேண்டும் என்பது ஸ்வாமிகள் மனதில் ஸதா இருந்த எண்ணம். இதனாலேயே அமெரிக்கா போவதன்முன் னர் பிரம்ம வாதினி என்ற ஓர் பத்திரிகையை திருவல் லிக்கேணியில் அவர் ஏற்படுத்திவிட்டுப் போயிருந்தார். இப்பொழுது ஸகல குணங்களும் நிறைந்த ராஜம் அய் யர் ஆதிபத்தியத்தின்கீழ் ஓர் பத்திரிகை ஏற்படப்போ கிறது என்று கேட்டதும் ஸ்வாமிகளுக்கு அடங்கா ஆன ந்தம் உண்டாய்விட்டது. உடனே கூடியசீக்கிரத்தில் தீர்க்காலோசனை செய்து, விழித்துக்கொண்ட இந்தியா என்ற பொருளையும், ஸநாதன தர்மத்திற்கும் புத்த மதத்திற்கும் உள்ள அந்நியோந்ய ஸம்பந்தத்தையும் குறிப்பிக்கும் பிரபுத்தபாரதம் என்ற பெயரையிட்டு ஓர் மாதாந்திர பத்திரிகை ஏற்படுத்தலாம் என்று சொல்லி ஸ்வாமிகள் பிரபுக்களது எண்ணத்தை அங்கீகரித்தனர். இதுவும் அல்லாமல் பத்திரிகை நடத்தும் விஷயத்தில் பின்வரும் புத்திமதியையும் விவேகானந்த ஸ்வாமிகள் கூறியுள்ளார். "இப்பத்திரிகை நடத்துவதில் அதிக கல்வித்திறனைக்காட்டி பாஷை நடையை கடினமாகப் போகவிடாதிருக்கவேண்டும். இப்படிச் செய்தால் இது உலகெங்கும் எளிதில் பரவும் என்பதற்கு ஐயம் இல்லை. எளியநடையில் எழுதினால்தான் உங்களுக்குசீக்கிரத்தில் எடுத்தகாரியம் கைகூடும். இதில் ஸநாதன தர்ம விஷயங் களை எளிய கதைகள் மூலமாக வெளியிடுவதே உங்கள் முக்கிய நோக்கமாக இருத்தல்வேண்டும். இம்மாதிரி கதைகள் ஸம்ஸ்கிருதபாஷையில் ஏராளமாகக் குவிந்து

கிடக்கின்றன. அவைகளின் சிறப்பு, அழகு முதலியவைகள் மிகுந்த அற்புதமாக இருக்கின்றன. அவைகளை நீங்கள் பலர் அறியச் செய்யவேண்டும். உங்கள் பத்திரிகையில் பொருள் எளிதில் விளங்காத நுட்பமான சாஸ்திர அல்லது வேதாந்த விஷயங்கள் அதிகமாக இருக்கக்கூடாது. தைரியமாகக் காரியத்தை நடத்துங்கள். சீக்கிரத்தில் உங்களுக்கு சிறப்பு வந்துவிடும் என்ற வீண் ஆசைக்குமாத்திரம் இடங்கொடாதேயுங்கள். நீங்கள் மனப்பூர்வமாகப் பாடுபட்டால் உலகம் காலடைவில் உங்களை மதிக்கும்.'' இப்படிக் கிரிவிவேகாநந்தஸ்வாமிகள் தமது எண்ணத்தை அனுமோதித்ததும் பிரபுக்களுக்கு எப்படியாவது கூடியசீக்கிரத்தில் பிரபுத்தபாரதத்தைத் தொடங்கிவிடவேண்டும் என்ற ஆவல் பிறந்தது.

முற்கூறிய ஆவலை மனத்தில் உடையவராய் பிரபுக்கள் சாந்தாநந்த ஸ்வாமிகளை சுத்தமனதோடு அணுகி தமது அந்தரங்க நோக்கத்தை வெளிப்படுத்தினர். இது இவ்வாறுவதற்கு முன்னமே ராஜம் அய்யருக்கு வரவர நிஷ்டைபழகுவதில் ஓர்வித விருப்பும் உத்தியோகம் முதலிய லௌகிக விஷயங்களில் ஓர்வித வெறுப்பும் உண்டாகி விருத்தி அடைந்துகொண்டே வந்தன. சிற்சில ஸமயங்களில் உத்தியோகத்தைவிட்டுத் தமது காலம் முழுவதையும் நிஷ்டைபழகிக் கழித்தால் நலமாக இருக்கும் என்றுபட, ராஜம் அய்யர் இந்த எண்ணத்தை வெளியிட்டிருந்தார். இது ஸ்வாமிகளுக்குத் தெரியவர, அவஸரப்பட்டு வேலையைவிட வேண்டியது அனவசியம் என்று சொல்லி ஸ்வாமிகள்

ராஜம் அய்யரை அவர் மனம்போனபடி போகவிடா மல் அடக்கி வந்தார். இப்படி இருக்கையில் பத்தி ரிகை விஷயத்தை ஸ்வாமிகள் பிரபுக்களால் அறிந்து, அதுவே ராஜம் அய்யருக்குத் தகுந்தவேலை என்று ஸந்தோஷித்து, பத்திரிகை ஏற்பட்டு பலப்பட்டால் வேலையை விட்டுவிடலாம் என்றும் ராஜம் அய்யருக்கு அனுமதிகொடுத்தார்.

இந்தத் தருணத்தில் தமது மனதின் நிலைமையை ராஜம் அய்யர் பிரபுத்தபாரதம் முதல் தொகுதி முடி வில் எழுதியுள்ள பின்நோக்கில் ஆங்கிலத்தில் தாமேவெ ளியிட்டிருக்கிறார். பின்வருவது அவர் எழுதியதின் மொழிபெயர்ப்பு. 'இப்பத்திரிகை ஆரம்பிக்குங்கால் உலகம் கரை ஏறும்படியான பேருதவி புரியவேண்டும் என்ற வீண் மனோராஜ்யம் எங்களிடம் குடிகொண்டிரு க்கவில்லை. நாங்கள் கேட்டு ஆனந்திக்கும் விஷயங்கள் உலகில் சிறு பாலாருக்காவது ஆனந்தம் விளைவிக்கலாம் என்பதும், இவ்விஷயங்களை உள்ளவாறு எழுதி வெளி யிடுவதால் நாங்கள் கேட்ட விஷயங்கள் எங்களுள் வேரூன்ற நாம் மேன்மை அடைவோம் என்பதுமே எங்கள் முக்கிய எண்ணங்களாக விருந்தன. இப்பத் திரிகையைத் தொடங்கவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குத் தற்செயலாக உண்டாயிற்று. இப்பத்திரி கை பின்னால் எந்நிலைக்கு வந்தாலும் ஸரி இந்த வேலை யில்இறங்குங்கால் சுத்தமான மனதோடு தொடங்கக்கி ருபைகூர்ந்த கடவுளுக்கு எக்காலத்தும் நாங்கள் நன்றி அறிதலுடையவர்களாய் இருப்போம். இது தொடங் கியகாலத்தில் எங்கள் மனதில் ரஜோகுண ஸம்பந்த

மான ஸ்வசக்தியைப் பற்றிய கர்வமும் தமோகுண ஸம்பந்தமான உலகம் உய்யச் செய்யவேண்டும் என்ற பேராவலும் எங்களுக்கு உண்டாகவேயில்லை. இம் மாதிரியான ஸாத்வீக ஸமயத்தில் மிகுந்த குதூஹலத் துடன் எத்தகையவரிடமிருந்து அனுமதி பெறவேண் டுமோ அவரிடம் (சாந்தானந்த ஸ்வாமிகளிடம்) இரு ந்து அனுமதி பெற்று அவர் அனுக்கிரஹத்தின்பேரில் வேலை தொடங்கினோம்.

முற்கூறியபடி நல்ல தருணத்தில் தொடங்கிய பத் திரிகைக்கு ராஜம் அய்யரே முக்கிய பத்திராதிபராக வும் வேறிருவர் ஸஹாய பத்திராதிபர்களாகவும் ஏற் படுத்தப்பட்டனர். உடனே இப்பத்திரிகைக்கு ஓர் முன் னோக்கு ஒன்று எழுதி இவர்கள் வெளியிட்டனர். ஆதியில் பரதகண்ட ரிஷிகளுக்கே தெளிவாக தோன் றிய அரிய விஷயங்கள் திரைகடலோடித் தூரதேசங் களில் பரவவேண்டும் என்றிருந்த கடவுள் கருத்தை யும் அது ஸரிவர நடந்தேறுவதற்கு ஸஹாயமாக இரு ந்து உதவிய அநேக அதிசய ஸம்பவங்களையும், அவை களால் தூரதேசங்களில் அநேகம் பேருக்கு ஸனாதன தர்ம ரகஸியங்களில் நம்பிக்கை ஏற்பட்டதையும் விவ ரித்துக் கூறப்பட்டிருந்தது. அதன் பின்பு இவ்வாறு தூரதேசத்தார் எல்லோரும் நமது மதத்தை ஆராய்ந்து ஆனந்திக்கையில் நம் தேசத்தில் அக்காலத்தில் படிக் கும் பிள்ளைகள் மத்தியில் நாஸ்திகமும் லோகாதிக மதமும் குடிகொண்டு இருந்ததையும் அதை நீக்க பிர புத்தபாரதம் என்ற ஓர் மாதாந்த பத்திரிகை தொடங்கு வதாகவும் அது பிரம்மவாதினிக்கு ஸஹாயமாக இரு

ந்து, வயது சென்றவர்களுக்கு பிரம்மவாதினி உபயோகப்படுவதுபோல பாண்டித்யசாலைப் பிள்ளைகளுக்கு இதுவுபயோகமாகும் என்பதாகவும், அதில் எழுதியிருந்தது. இதுவும் அல்லாமல் ஸனாதனதர்ம ரகஸியங்கள், அவைகளை விளக்கும் புராண இதிஹாஸ கதைகள், தத்துவசாஸ்திர கதைகள், நூதன அற்புத கதைகள், பக்தர்கள் சரித்திரம், அவர்கள் பின் பற்றிய கொள்கைகள் ஆகிய இவைகள் அப்பத்திரிகையில் எளிய நடையில் எழுதி வெளியிடப்படும் என்றும் அந்த முன்னோக்கில் பிரசுரம் செய்யப்பட்டது. இந்த முன்னோக்கு பாவி முதல் ஸஞ்சிகை வெளியாகும் முன்னர் பகவத்கிருபையால் அப்பத்திரிகைக்கு 1500 சந்தாதார்கள் ஏற்பட்டனர்.

முதல் ஸஞ்சிகையில் வெளிவந்த ஸ்வகீயமே வாசிப்போர் மனதைக் கவரத்தக்கதாக விருந்தது. 'நூராதேசத்தில் உண்டான ஸனாதன தர்மவிஷய மனக்கிளர்ச்சியால் நமது பரதகண்டம் எழுப்பப்படுங்காலத்தில் அதை தெளியும்படி செய்ய ஸஹாயமாக இப்பத்திரிகை இருக்கப்போகிறபடியாலும், முன் எழுதி வெளியிட்டு உள்ள முன் னோக்கின் மூலமாக பத்திரிகைக்கு வந்து குவிந்த சந்தாதார் கணக்கினாலும், இந்தப் பத்திரிகை நடைபெற வேண்டியது அவசியம்' என்பதை இதில் முதலில் காட்டி யிருந்தது. மேலும் ஸனாதன தர்ம உண்மைகள் பரதகண்டம்விட்டு வெளியேறிய வழியைக் காட்டும் முகபடம் ஒன்றை இயற்றி அதை ஒவ்வொரு ஸஞ்சிகையின் அட்டை காகிதத்தில் அச்சிடப்பட்டு வந்தது. அதில் ரமணீயமான காட்டின்

மத்தியில் ரிஷி ஒருவர் தமது சிஷ்யர் இருவர்களுக்கும் அரிய உண்மைகளை உபதேசிப்பதை தற்செயலாக தூரத்திலிருந்து ஒரு துரையும் அவன் ஸ்திரீயும் கண்டு வியந்துகொண்டு அசையாது நிற்பதுபோலக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறு கண்ட அவர்கள் மூலமாக ஸநாதன தர்ம அற்புதங்கள் வெளியுரிலபரவ அநேகர் பரதகண்டம் வந்து ஸநாதன தர்ம உண்மைகளை ஆராயத் தொடங்கினாராம். சிலர் குற்றங்கூறப் புகுந்து செய்தவேலைகளால் தமது எண்ணத்திற்கு விரோதமாக நமது மதரகஸ்யங்களைப் புகழவேண்டி வந்ததாம். இப்படி இருக்கையில் நமது மதத்தை ஓர் ஸந்யாஸி அமெரிக்காசென்று ஸ்தாபிக்க இந்த அற்புத சங்கதியைக் கேட்டு நமது நாடு நமது மதத்தின் சிறப்பை ஒருவாறு உணர்ந்து விழித்துகொண்டதாம். அக்காலத்தில் நமதுநாட்டில் பாடசாலைகளில் படிப்போர் மனம் தெளிவதற்காக அந்த பத்திரிகை வெளிவந்ததாக ஸ்வகீயத்தில் கண்டிருந்தது. மேலும் முன் நோக்கில் கூறியபடி விஷயங்கள் பத்திரிகையில் அமைக்கப்பட்டுவரும் என்றும் ஒரு மதத்தையும் அதில் தாக்ஷிக்காது எல்லா மதங்களை ஸமரஸப் படுத்தப்படும் என்றும், வேதாந்த முடிவைஎவ்வளவு எளிய நடையில் எடுத்துக்காட்ட முடியுமோ அவ்வளவு ஸரஸமாகக் காட்டப்படும் என்றும் அந்தஸ்வகீயத்தில் வாக்களிக்கப்பட்டு இருந்தது. அதன் முடிவில் ' இந்தத் தொழில் உண்மையான பெரியோரது மனப்பூர்வ ஸஹாயம் இல்லாவிடில் தொடங்கியே இருக்கமாட்டாது. கடவுள் எங்கும் பரவியிருக்கும் இவ்வுலகில்

தொழில் செய்யவேண்டியது நமது பொறுப்பு. அதன் லாப நஷ்டங்களைப்பற்றி எண்ணமிடுவது நமது கடன் அல்ல. அவை அனுதராகி ஸர்வத்துக்கும் நாதரான ஜகன்னிவாஸராம் பரம்பொருளது பாரம்' என்று எழுதப்பட்டிருந்தது.

முற்கூறப்பட்டுள்ள வாக்குத் தத்தங்கள் யாவும் இப்பத்திரிகையில் பூர்த்திசெய்யப்பட்டன. பத்திராதிபர் வியாஸம் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் ஸனாதனதர்மத்தைப் பற்றியும் வேதாந்த விஷயங்களைப் பற்றியும் உள்ள பொது வியாஸங்களும், பத்திராதிபர் குறிப்பு இருக்கவேண்டிய இடத்தில் சிறு கதைகளும், மௌனியின் மனனம் என்ற சிறுவேதாந்த வாக்கியங்களும், பின்னர் வெளியிலிருந்து தானம் செய்யப்பட்ட இரண்டொரு விஷயங்களும், விஸ்தாரமாய் எழுதப்பட்டுள்ள இரண்டொரு புராணக்கதைகளும், பரம்பொருளைத் தேடிச் சென்றோர் என்ற பெயரின்கீழ் முறையாக பக்தர் சரித்திரங்களும், கீதா சாஸ்திர ஆராய்ச்சியும், ஆராதனை செய்யப்படும் விக்கிரஹங்களின் உட்பொருள்களும், வேதாந்த ஸாரபாகங்களும், வேதாந்த விஷயபாகங்களும் கமலாம்பாள் சரித்திரத்தைப் போன்ற உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி என்ற அற்புத கதையும், மேலும் வேதாந்த உட்பொருள் அமைந்து கிடக்கும் ஸாதாரண கதைகளும் வெகு அழகாகப் பத்திரிகை ஸஞ்சிகைகளில் அமைக்கப்பட்டுவந்தன. ஒவ்வொரு ஸஞ்சிகையில் இரண்டொரு வியாஸங்களைத்தவிர மற்றையஎல்லாம் மறுபெயர் புனைந்து ராஜம்அய்யராலேயே நேரேஎழுதிவெளியாக்கப்ப

ட்டன். தாம் உபந்யஸித்துவந்த அரிய விஷயங்கள் எல்லாம் இந்த பத்திரிகையில் விடாது அழகாக அமைக்கப்பட்டிருந்ததைக் கண்டு இப்பத்திரிகையை அருள் வாக்கு என்று புகழ்ந்து மெச்சிக்கொண்டு சாந்தாநந்த ஸ்வாமிகளே வெகு ஆனந்தத்தோடு இதை மாதந்தோறும் விடாது தமது உபந்யாஸங்களுக்கு முன் வாசித்துவந்தனர். கடவுள் அருளால் முதல் வருஷம் முடிவிலேயே இப்பத்திரிகைக்கு 4500 சந்தாதார்கள் ஏற்பட்டனர். அதில் அநேகர் தாம் இதை ஒவ்வொரு மாதமும் மிகுந்த ஆவலோடு எதிர்பார்ப்பதாகவும் கடிதம் எழுதி வந்தனர். இப்பத்திரிகையால் என்னைப் போன்ற அநேக பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஆதியில் ஸநாதன தர்மரஹஸியங்கள் தெளிவாக விளங்கின. இப்பத்திரிகையால் ஞானம் உண்டாகி ஆனந்தம் அடைந்தவர் அநேகர் இருந்திருக்கவேண்டும்.

இவ்வளவு சிறப்போடுகூடிய பத்திரிகை எவ்வாறு நடத்தப்பட்டு வந்தது என்பதைப்பற்றிச் சற்றுவிவரிப்போம். ராஜம் அய்யர் தமது உத்தியோகத்தைவிட்டு நிஷ்டை பழகுவதும் ஸ்வாமிகள் உபந்யாஸங்களை மனம் ஊன்றிக் கேட்பதும், கேட்டவைகளை உள்ளபடி பத்திரிகையில் வெளியிடுவதும் ஆக ஸத்காலக்ஷேபம் செய்துவந்தார். பிரபுக்களைச் சேர்ந்தவர்கள் இரண்டொருவர் பத்திரிகையின் பணவிவரங்களையும், பொது வேலைகளையும் ஸரிவரப்பார்த்து ராஜம் அய்யரைப் போஷித்து வந்தனர். பிரபுக்களின் பேராவலால் பத்திரிகை தவறாது ஒவ்வொரு மாதத்திலும் முதல் தேதியிலேயே வெளிவந்துகொண்டிருந்தது.

பிரபுக்கள்வீட்டுக் குழந்தைகள்கூட மிகுந்த உத்ஸாகத்தோடு அன்றைக்குள்ளேயே 4500 பத்திரிகைகளையும் ஒட்டித் தபாலுக்குத் தயாராக்கினர். வழியில்போய்க்கொண்டிருந்த படித்த ஒவ்வொருவரும் இப்பத்திரிகைவேலைகளைத் தாமாகவே மேலேபோட்டுக்கொண்டு தம்மாலியன்றமட்டும் செய்துவந்தனர். இப்பத்திரிகை நடந்துவந்த இரண்டு வருஷமும் பிரபுக்கள் வீட்டில் உத்ஸவம் பட்டபாடுபட்டது. பெரியவர்கள் சிறியவர்கள் எல்லோரும் ஒரேவிதமாக இப்பத்திரிகை விஷயத்தில் ஆனந்தித்துத் தொழில்செய்து வந்தனர். இப்பத்திரிகை நடந்தகாலத்தில் அருகேயிருந்து ஆனந்திக்கக் கொடுத்துவைத்திருந்தவர்கள் எல்லோரும் தாம் அடைந்த ஆனந்தத்தை இன்னும் சொல்லி ஸந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வளவு கோலாஹலமாய் நடைபெற்றுவந்த பத்திரிகை திடீரென்று இரண்டு வருஷத்திற்குப்பின் ராஜம் அய்யருக்குவந்த அகாலமரணத்தால் தடைபட்டது. கடைசி ஸஞ்சிகையில் வெளிவந்த முடிவுரையில் ' இப்பத்திரிகை இதுகாறும் வேதாந்த ரகஸியங்களை எளிய நடையில் சிக்கற வெளியிட்டுக்கொண்டு வந்தது. உண்மையை உள்ளபடி வெளியிடவேண்டும் என்ற முக்கிய கருத்தோடு இப்பத்திரிகையைத் தொடங்கினோமே ஒழிய யாம் பணம் ஸம்பாதிக்கவேண்டும் என்று தொடங்கவில்லை. ஆதலால் இப்பொழுது பகவத்கிருபையால் எமக்கு பணவிஷயத்தில் யாதொரு குறைவும் இல்லாமல் இருந்தபோதிலும், எமக்கு முக்கியமாயிருந்த பத்திராதிபராகிய ராஜம் அய்யர் அவர்

கள் இறந்துவிட்டபடியாலும், அவரைப்போல எம்முள் ஒருவராலும் வேதாந்தரகஸியங்களை உள்ளபடி வெளியிட்டு இந்தப் பத்திரிகையை நிலைபெறச் செய்யமுடியாதாகையாலும், உண்மையை வெளியிடும் நோக்கத்தை உத்தேசித்து நாம் இப்பத்திரிகையை நிறுத்திவிட எமது அன்புடைய சந்தாதாரிடம் அனுமதி கேட்டுக்கொள்ளுகிறோம்' என்று வெளியிட்டிருந்தது. இந்த ஸஞ்சிகையில்தான் ராஜம் அய்யர் ஆதியில் பிரம்மவாதினியில் எழுதிவெளியிட்ட மனிதன் அவன் தாழ்வும் ஏற்றமும் என்ற வியாஸம் பத்திராதிப வியாஸஸ்தானத்தில் வெளிவந்தது.

ராஜம் அய்யர் இறந்தபின்பு, அவர், இப்பத்திரிகை, கமலாம்பாள் சரித்திரம் ஆகிய இவைகள் மூலமாக உலகிற்குச் செய்து வந்த உபகாரத்தை அனுபவித்தறிந்த ஒருவர் இவர் மரணத்தைப்பற்றி பரிதபித்து ஒருகவிதை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டனர். இக்கவிதை பின்னர் ஹிமாலயத்தில் பிரசுரம் செய்யப்பட்டு வெளிவந்து கொண்டிருந்த பிரபுத்தபாரதத் தொடர்ச்சியில் வெளிவந்தது. இன்னும் அந்தத் தொடர்ச்சி நடைபெற்று வருகின்றது. இவர் இறந்து ஏழு எட்டு வருஷங்களுக்குப் பின் முற்கூறிய மைலாப்பூர் பிரபுக்களின் பிரயத்தனத்தின்பேரில் பிரபுத்தபாரதத்தில் இம்மஹான் பகவத்கிருபையால் அருள்வாக்குக்களாக வெளியிட்டவைகள் எல்லாம் ஒழுங்காகத் தொகுப்பட்டு வேதாந்தஉல்லாஸம் என்ற பெயரோடு கூடிய ஓர் பெரியபுத்தகமாக வெளிவந்தது. இப்புத்தகவேலையில் யானும்

சேர்ந்து என்னால் இயன்ற உதவியைப் புரிய பாக்கியம் பெற்றிருந்தேன். இப்புத்தகம் இப்பொழுதும் அநேகரால் மதிக்கப்பட்டு உயர்ந்த ஸ்திதியில் இருந்துகொண்டு அவர்களுக்கு ஆனந்தத்தை அளித்து வருகின்றது.

இவ்வாறு இரண்டு வருஷத்திற்குள் உலகில் எல்லோரும் வியக்கும்படி பரோபகாரம் புரிந்து பரமபதம் அடைந்த ராஜம் அய்யரது இல்லறவாழ்க்கை முதலியவைகளைப்பற்றி அடுத்த சருக்கத்தில் விவரிப்போம்.

# IV. வாழ்க்கைச் சருக்கம்

பத்தாலிற்கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங்கூடி வாழலாம்—சற்றேனும்
தாறுமாறாயிருப்பளே யாமாகில்
கூறாமல் ஸந்நியாஸங் கொள்.

முன்னர் கூறியிருக்கிறபடி ராஜம் அய்யர் இளமைப்பருவத்தில் ஸாதாரணக் குழந்தைகளைப்போல விளையாட்டுகளை விளையாடினவர் அல்லர். இவர் அப்பொழுதேயே மிகுந்த யோசனையில் ஆழ்ந்தவர்போலக் காணப்பட்டார். வீட்டிலிருந்தவர்களோடு கூட இவர் கலகலப்பாக பழகிவந்ததில்லை. எப்பொழுதும் இவர் எல்லா விஷயங்களிலிருந்தும் ஒதுங்கியே இருந்தார். படிப்பு முதலிய தமது காரியங்களை யாதொரு குறைவுமின்றி இவர் பார்த்துவந்தமையால் இவர் தகப்பனார் இவரது ஒதுங்கிய ஸ்வபாவத்தைக் கவனியாமலே இருந்துவிட்டார். அதிக வார்த்தையாடி கலகலப்பாக இல்லாவிடினும் தமது குழந்தை தடையின்றி முன்னுக்குவந்து பெரிய விஷயங்களை வஹித்து தமது குடும்பத்தைச் சிறப்புப்படுத்துவான் என்று ராஜம் அய்யர் விஷயத்தில் அவர் தகப்பனாருக்குப் பூர்ணநம்பிக்கை இருந்தது. இப்படி இருக்கையில் இவருக்கு விவாஹம் நடந்து பெண்சாதி வீடுவந்து சேர்ந்தாள். அவளோடு மாத்திரம் இவர் ஸகஜமாகப் பழகி வந்தார். இவர் தமது பெண்சாதி விஷயத்தில் வெகு ஸஹஜமாக நடந்துகொண்டபோதிலும், இவ

ரிடம் இருந்த நம்பிக்கையால் இந்த மூல மாகவாவது இவருக்குக் கலகலப்பு உண்டாகி, குடும் பத்துடன் இவர் ஸகஜமாகப் பழகும் நிலையை அடை யட்டும் என்று எண்ணி, அவர் தகப்பனார் அவரைத் தடுக்காது அவர் மனம் போனபடியே விட்டுவிட்டார். ஆகவே பீ. எல். பரீக்ஷை தவறினவரையில் ராஜம் அய்யர் ஒருவராலும் தடுக்கப்படாது தமது மனம் போனபடியே உலக இன்பங்களை அனுபவித்துக்கொ ண்டு படிப்பில் யாதொரு குறைவுமின்றி தமது காலத் தைக் கழித்துவந்தார். இக்காலத்தில் இவர் புத்தி விசா லத்திற்கேற்ப இவர் மனதில் உலகப்பற்றும், பரோப கார சிந்தையும், கற்பனாவிசேஷமும் நிறைந்திருந்தன.

பீ. எல். பரீக்ஷை தவறியதும் இவர் மதவிஷயங் களை வாசிக்கத்தொடங்க காலக்கிரமத்தில் ஸங்யிலினி யம்மாளிடம் இருந்து உபதேசம் பெற்றார். இதன் பிறகு இவருக்கு மனம் லௌகிக விஷயங்களிலிருந்து திரும்பிவிட பரீக்ஷைப்படிப்பு முதலிய விஷயங்களில் அசிரத்தை உண்டாகி அதிகரித்துக்கொண்டே வந்தது. இதை அறிந்த இவர் தகப்பனார் எவ்வளவோ இவ ரைக் குறிப்பாகக் கண்டித்து மறுபடியும் கவனமாக பீ. எல். படிப்பைப் படித்துவரும்படி செய்ய முயன் றார். இதுவரையில் ராஜம் அய்யர் குடும்ப விஷயங்க ளில் கலந்து தமது தகப்பனார் முதலியவர்களோடு ஸஹஜமாகப் பழகாமல் இருந்தபடியால் இவர் தகப்ப னாருக்கு இவரை நேராக வற்புறுத்திக் கண்டிக்க முடி யாமற் போயிற்று. ஆதலால் ராஜம் அய்யர் குடும்ப விஷயங்களில் ஒருவாறு அசிரத்தையாகவே இருந்து

தமது மதவிஷயப்பற்றைக் காலக்கிரமத்தில் விருத்தி செய்துகொண்டு வந்தார். இதனால் பரீக்ஷை தேறல், தேசஸஞ்சாரம் செய்து தமது நாட்டை முன்னுக்குக் கொண்டுவர எண்ணுதல் ஆகிய லௌகிக முயற்சிகள் யாவும் இவரைவிட்டு அகன்றன. இவர் பபித்தியம் பிடித்தாற்போல மணி அடித்தல் முதலியவைகளைச் செய்துகொண்டிருந்த காலத்தில் தமது குடும்பவிஷயம் முதலியவைகளை முற்றும் கவனிக்காமலே இருந்துவிட்டார். இவ்வாறு இவர் மாறிவிட்டபடியால் இவர் தகப்பனருக்கு இவரிடம் மிகுந்த மனஸ்தாபம் உண்டாயிற்று. இவர் விஷயத்தில் முன்வைத்திருந்த நம்பிக்கைகள் யாவும் அவரை விட்டோட அவர் மனமுடைந்தவர்போலானார்.

இப்படி இருக்கையில் சாந்தானந்த ஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்று மனம் தெளிந்து குடும்ப விஷயங்களை ராஜம் அய்யர் உள்ளிருந்தபடியே ஒதுக்கிக் கொண்டு நிஷ்டைபழகத் தொடங்கினர். குடும்ப விஷயங்களை இவர் இவ்வாறு எளிதில் ஒதுக்கிவிட்ட போதிலும் தமது பெண்சாதியுடன் பழகிவந்த மாதிரியை இவரால் எளிதில் மாற்றமுடியவில்லை. இவர் அவளோடு ஆதியில் ஸர்வ ஸாதாரணமாகப் பழகிவந்ததே இந்தக் காரியத்திற்கு தடையாக ஏற்பட்டது. மனதார இவ்விஷயத்தில் இவருக்கு முன்போன்றபற்று இல்லாவிடினும், வேறுவிதமாகப் பழகும் வழியறியாதவராய், இவர் அவளோடு முன்போலவே பழகிவரும்படி நேரிட்டது. வேறுவிதமாகத்தமது நடத்தையை மாற்றினால் பெண்சாதிக்கு மனஸ்தாபம்

உண்டாகத் தமது மார்க்கத்தில் அவள் தடையாகநின்று விடுவாளோ என்ற அச்சம் இவருக்கு இருந்ததால், இவர் தமது உள் எண்ணத்தை வெளிக்காட்டாது அவளிடம் மாத்திரம் வெகு தந்திரமாகப் பழகிவந்தார். இந்தக் காலத்தில் தந்திரமாகத் தமது பெண்சாதியை ஒருவாறு திருப்திசெய்துவிட்டு குடும்பத்திலிருந்து கொண்டே ஒதுங்கி நின்று தமது மதவிஷயங்களுக்கு குறைவுவாராமல் நடந்துகொள்ளலாம என்ற நோக்கத்தோடு ராஜம் அய்யர் தமது நடத்தையை ஒழுங்குப் படுத்திப் பாடுபட்டுக்கொண்டிருந்தார்.

இராஜம் அய்யர் இவ்வாறு தமது நடத்தையை ஒழுங்குப்படுத்திக்கொண்டு வருகையில், பிரபுத்த பாரதம்தொடங்கிய மூன்றும் மாதமாகிய 1896-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் இவருக்கு குடற்சிக்கல் நோய் கண்டது. இதனால் இரைக்குழாயின் வேலை தடைபட்டு நின்றுபோக வலி அதிகமாய்விட்டது. மருந்துகளால் குடல்திறந்து மலசுத்தி யாகாவிடில் இந்த வியாதியை சஸ்திரப் பிரயோகத்தில் அறுத்துதான் ஸ்வஸ்தப்படுத்தவேண்டும். அறுத்தால் மனிதன்பிழைப்பது புனர்ஜன்மம்தான். ராஜம்அய்யருக்கு குருவைத்தேடிக்கொடுத்து அவர் மனதிற்கு இசைந்தவேலையில் அமர்ந்து அதன் மூலமாக ஜீவனத்திற்குக் குறைவின்றி வரும்படி செய்யமனப்பூர்வமாகப் பாடுபட்ட மயிலைப் பிரபுக்கள் தாமே வைத்தியர்களாகவும் மருந்துச்சாலை உடையவராகவும் இருந்தபடியால்,இந்தக் கொடிய வியாதிகண்டதும், ராஜம் அய்யருக்கு வேண்டிய சிகித்ஸைகள்செய்து தகுந்த மருந்துகளைக் கொடுத்து தக்கஸமயத்தில்

உதவினர். இந்தவியாதி வெகுவேகமாயிருந்த சிற்சில ஸமயங்களில் அவரை எல்லோரும் போய்விட்டனர் என்றே மதித்துத் துக்கிக்கலாயினர். இத்தகைய அபாயஸமயங்களிலும் ராஜம் அய்யர் மனவருத்தப்படாமல் வெகு ஸாதாரணமாக இருந்து, அவருக்கு ஸஹாயமாக அருகில் இருப்போரை அடிக்கடி கடிந்துகொண்டு வருத்தாது மிகுந்த அமைதியோடிருந்தார். அவர் வயதில் சிறியவராயினும் நடத்தையில் ஒரு பெரியவரைப் போலக் காணப்பட்டார். ஸுகமாக இருக்கும் பொழுது எல்லோரும் வாய் ஓய ஞானம் பிதற்றலாம். இன்னும் வேறு சிலர் தமது நெருங்கின உறவினர் வியாதியால் வருந்துங்காலத்தும் அல்லது இறக்கும்படி நேரிட்டகாலத்தும் தாம் கற்றஞானத்தை மனோபலத்தால் தக்க ஸமயத்தில் உதவும்படி மனதிற்குக் கொண்டுவந்து துக்கத்தை எழவொட்டாது அடக்கித் தீரராக விளங்கலாம். ஆனால் தமக்கே வியாதிவரும் பொழுது கஷ்டம் அதிகமாகுங்காலத்தில் தாம் கற்ற ஞானத்தை முன்கொண்டுவந்து மனம் குழம்பாது திடமாக நிற்றல் அரிது! அரிது! ராஜம் அய்யர் இவ்விதம் அருமையான குணாதிசயம் வாய்த்தவர், கேவலம் வாசாஞானியல்லர்,என்பதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல அறிந்த பிரபுக்களுக்கு இவரிடம் இருந்த மதிப்பு அதிகரித்தது. இதனால் மிகுந்த சிரத்தையோடு ஔஷதாதிகள் கொடுக்க மிகுந்த கஷ்டத்தின் பேரில் ராஜம் அய்யருக்கு இந்த வியாதி ஸ்வஸ்தமாயிற்று.

இந்த வியாதியால் ராஜம் அய்யருக்கு சிற்சில நன்

மைகள் உண்டாயின. இதுவரையில் தம் பிள்ளை தம் எண்ணப்படி பெரிய பரீக்ஷைகள் கொடுத்துப், பெரிய வேலைகளில் அமர்ந்து தமது குடும்பத்தை கௌரவமாக காப்பாற்றி விளங்காமல் போய்விட்டானே என்ற வருத்தம் இவர் தகப்பனருக்கு அதிகமாக இருந்தது. இந்தவியாதி காலத்தில் மயிலைப்பிரபுக்கள் புரிந்த உதவியையும், இவரைப் போஷிப்பதற்கு பிரபுத்தபாரத விஷயத்தில் அவர்கள் பாடுபட்டு வருவதையும், அந்தப்பத்திரிகை யாவராலும் நன்கு மதிக்கப் பெற்று ஏராளமாகச் செலவாகி வருவதையும் கண்டவுடன் ராஜம் ஐயர் தகப்பனருக்கு இவரிடம் இருந்த மனஸ்தாபம் வரவரக் குறைந்துகொண்டே வந்தது. இவர் முன்போலத் தமது பெண்சாதியிடம் உல்லாஸமாக இல்லாவிடினும் அவள், 'இது வியாதியால் உண்டானது. என்னிடம் இவர் முன்போல் உல்லாஸமாக இல்லாவிடில் என்ன? இவர் பிழைத்தாரே இதுவே எனக்குப்போதும்' என்று எண்ணி ஒருவாறு தேறி இருந்தனள். இதனால் வியாதிவந்தபின்பு கொஞ்சநாள் வரையில் உலக விஷயங்களிலிருந்து முற்றும் ஒதுங்கி, சாந்தானந்த ஸ்வாமிகள் எடுத்துக்காட்டிய ஒழுங்கின்படி நிஷ்டை பழக இவருக்குத் தருணம் வாய்த்தது. இதுவும் அல்லாமல் இந்த அபாயமான வியாதியிலிருந்து தாம் பிழைத்ததும் ஏதோ ஒரு சிறந்த வேலையை முடிப்பதற்காகக் கடவுள் தம்மைப் பிழைப்பித்தார் என்ற நம்பிக்கை ராஜம் அய்யர் மனதில் உண்டாக வெகு உத்ஸாஹத்தோடு பிரபுத்த பாரத விஷயத்தில் இவர் உழைத்துவந்தார். இதனால் தான் அந்தப் பத்திரி

கைக்கு சந்தாதாரர்கள் 1500-ல்இருந்து முதல் தொகுதி முடிவில் 4500 பெயர்கள் ஆயினர்.

இந்த பிரபுத்தபாரத வேலைக்காகவே வெகு உத்ஸாஹத்தோடு ஸம்ஸ்கிருதம் கற்றுக்கொண்டு ராஜம் அய்யர் உபநிஷத் முதலிய பிரஸ்தானத்ரயங்களையும் தேவபாஷையிலேயே படித்துவந்தார். தமது குரு அன்புடன் வெளியிடும் விஷயங்களை மிகுந்த பக்தியுடன் கேட்டுவரும் சிஷ்யனுக்கு, நல்ல பாஷை நடையில் விஷயங்களை எழுதும் சக்தி யிருப்பின், அவ்விஷயங்களை பிரசுரம் செய்துவர எப்படி உத்ஸாஹம் வாராதிருக்கும்? வெகு விசேஷமாகப்பிரபுத்தபாரதம் 1897-ம் வருஷம் நவம்பர் மாஸம் வரையில் மிகுந்த சிறப்புடன் நடந்துவந்தது.

இப்படி எல்லாம் சிறப்பாய் நடந்துவர 1897-ம் வருஷம் நவம்பர் மாதம் ராஜம் அய்யருக்கு மறுபடி குடற்சிக்கல் நோய் கண்டது. இது முன் வந்ததை விட அதிக குரூரமாக வந்துவிட்டது. தம்மா லியன்ற மட்டும் கொஞ்சநாள் தகுந்த மருந்துகள் கொடுத்துப் பார்த்தபின்பு, ராஜாங்கத்தார் வைத்தியசாலைக்குக் கொண்டுபோய் அறுத்துத்தான் ஸ்வஸ்தப் படுத்த வேண்டும் என்று பிரபுக்கள் அபிப்பிராயப்பட்டு, ராஜம் அய்யர் உறவினர்களை ஒருவாறுதேற்றி இவரை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர். அங்கு போனதும் அங்குள்ள ஆங்கலவைத்தியர் 'வியாதி அபாயமானது சீக்கிரம் சஸ்திரப் பிரயோகம் செய்தால்தான் நலம்' என்று சொல்லி ராஜம் அய்யரை அறுப்பதற்கு எல்லாவற்றையும் ஆயத்த மாக்கிவிட்டார். அப்போ

மூதா அறுக்காமல் இவரை பிழைப்பிக்க முடியாதா என்று இவர் உறவினர் குழம்பிக்கொண்டு கேட்க, வைத்தியர் ராஜம் அய்யருக்கு ஓர் மருந்து கொடுத்து விட்டு 'எனக்கு இப்பொழுது ஓர் அவஸரவேலை இருக்கிறது அது இரண்டொரு மணிக்குள் முடியும். நான் திரும்பிவருவதற்குள் இவருக்கு மலசுத்தியாகாவிடில் இவரை அறுத்து ஸ்வஸ்தப்படுத்த வேண்டியதுதான்' என்றுசொல்லி ராஜம் அய்யர் முதலியோரிடம் விடை பெற்று அவர் தமது வேலையை உத்தேசித்துப் போய் விட்டார். எல்லோரும் மிகுந்த கவலையோடு ராஜம் அய்யருக்கு வேண்டிய சிகித்ஸைகளைச் செய்துகொண்டிருக்கும் தருணத்தில் பகவத்கிருபையால் அவருக்கு மல சுத்தியாயிற்று. எல்லோருக்கும் மிகுந்த ஸந்தோஷம் உண்டாய்விட்டது. வைத்தியருக்கு உடனே ஸமாசாரத்தைத் தெரிவிக்க அவரும் மிகுந்த ஸந்தோஷத்துடன் வந்து ராஜம் அய்யருக்கு ஆசிகள் கூறித் தமது திருப்தியை வெளியிட்டார். ஸந்தோஷமாக அன்றே ராஜம் அய்யரை பிரபுக்கள் வீட்டிற்கு எடுத்துவந்து ஒரு மாதத்திற்குள் அவரை நன்றாக ஸ்வஸ்தப்படுத்தினர்.

இரண்டாம்தரம் வியாதியிலிருந்து விடுபட்டு ராஜம் அய்யர் வெளிவந்து கொஞ்ச நாளைக்கெல்லாம் அவர் குடும்பத்தில் அதிகரித்த சச்சரவால் அவர் மனோநிலை என்னமாக இருந்தது என்பதை விவரிப்போம். முதல்தரம் வியாதியில் அடிபட்டு வெளிவந்ததும் ராஜம் அய்யருக்கு உண்டான நம்பிக்கையும் உத்ஸாஹமும் இப்பொழுது உண்டாகவில்லை. தமது குடும்

பத்தின் நிலையால் இவருக்கு 'நீரில் எழுத்தாகும் யாக்கை' ஆதலால், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்', என்ற எண்ணம் பலமாய் உண்டாகிக் கொண்டிருந்தது. ஆதலால் காயமதுபொய்: அது நழுவும்முன் முத்திப்பேற்றை அடையவேண்டும் என்ற அடங்கா ஆவல் உண்டாக ஸதாநிஷ்டை பழகுவதிலேயே இவருக்குமனம் அடிக்கடிப் போகத் தொடங்கியது. இந்த ஸமயத்தில் சாந்தானந்த ஸ்வாமிகள் அடிக்கடி சொல்லிவரும்,

'கேட்டவுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறு உற்பவநோய் மாறுமோ—நாட்டமுற்று
மெய்யான நிட்டையிலே மேவினர்கட் கன்றேதான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்.'

'என்ற தாயுமானஸ்வாமிகள் அருள்வாக்கு இவருக்கு ஞாபகம் வந்துகொண்டே இருந்ததால் இவர் நிஷ்டையில் வெகுகாலம் இருந்துவிடுவார். இவருக்கு உலக விஷயங்களில் ஓர்வித வெறுப்பு உண்டாக அது சாந்தானந்தஸ்வாமிகளது ஸஹாயத்தால் ஒழுங்குபட்டு விருத்தி அடைந்தது, என்பதை இவர் தகப்பனும் பெண்சாதியும் அறிந்து விட்டார்கள். 'இருபத்தாறு வயதிற்குள்ளேயே நமது பிள்ளை அநியாயமாக உலக விஷயங்களை விட முயலுகிறானே! இது பாழும் வேதாந்தத்தின் வேலையல்லவா?' என்று இவர் தகப்பனார் அடிக்கடி துக்கிப்பது வழக்கம். உண்மைதெரிய வந்த இவர் பெண்சாதி முதலியோரை இவருக்கு தந்திரமாக முன்போல திருப்தி செய்துவருவது மிகுந்த கஷ்டமாகப் போய்விட்டது. ராஜம் அய்யருக்கு இவ

ர்களை திருப்திசெய்வதிலேயே வீட்டில் வீணாகக்காலம் கழிந்துபோக வெளியில் வந்த ஸமயங்களில் ஸ்வாமிகளிடம் சிரவணம் செய்த ஸமயம் தவிர மற்றைய ஸமயங்களில் இவர் குருவாக்கியப்படி நிஷ்டையில் இருக்க யத்தனித்தார். அதற்கும் பிரபுத்தபாரத விஷயம் குறுக்கேவந்து நின்றுகொண்டு இவரை நிஷ்டையில் நிலைக்கவொட்டாமல் தடுத்தது. நிஷ்டைக்கு இவ்வாறு நாழிகையே மிஞ்சாது போனதைக்கண்ட ராஜம் அய்யருக்கு மனம் ஸஹிக்கவில்லை. இதனால் இவருக்கு வரவர பிரபுத்தபாரதத்திற்கு எழுதுவதுகூட மிகுந்த பாரமாகத் தோன்றியது. கடைசி ஆறு ஸஞ்சிகைகளில் இவர் பிரபுக்களது கட்டாயத்தின்பேரிலே தான் விஷயங்களை எழுதிவந்தார்.

இவர் மனம் மேல்நோக்கிப் போவதால் அருமையானபத்திரிகை விஷயங்களைக்கூடக் கவனியாமல் இருக்கஇவரை கீழ்நோக்கி இழுக்கும் சக்திகள் இவ்வாறு தொழிற்பட்டன என்பதை விசாரிப்போம். ஒருகாரிய விஷயத்தில் ஒருவன் ஓர் தந்திரத்தை முதலில் உபயோகப்படுத்திவிட்டானாகில் காரியம்முடியும்வரையில் முன்னதற்கு ஏற்ப அநேக தந்திரங்களை அவன் அடிக்கடி உபயோகிக்கவேண்டி வந்துவிடும். காரியம் உலகஸம்பந்தமான விஷயமாகில் அதனால் அநேக புதிய வியவஹாரங்கள் ஏற்பட்டு அவன் மனதைச் சின்னபின்னப் படுத்தும். ராஜம் அய்யர் கதியும் இவ்வாறே ஆயிற்று. வீட்டிலுள்ளோரை வெகு தந்திரமாகத் திருப்திசெய்து விட்டு நிஷ்டைபழக முயன்ற ராஜம் அய்யருக்கு வர வரமுன்போலத் தமது தந்திரத்தை எளிதில் உபயோ

கிக்கமுடியாமல் போயிற்று. தாம் உபயோகித்த தந்தி ரத்தை•மேலும் உபயோகிக்கவேண்டுமாகில் பணம் தமக்கு அதிகம் வேண்டும் என்று இவருக்குத் தோற் றியது.பிரபுக்களிடம் அவர் இரண்டொரு ஸமயத்தில் பணவிஷயமாகக் கலந்து பேசிப்பார்த்தார். அவர்கள் தம்மால் இயன்றவரையில் பத்திரிகை விஷயத்திலிருந்து பணம் உதவிப்பார்த்தனர். அதுவும் இவர் தந்திரங்க ளுக்குப் போதாமல்போக, இவர் திரவ்யார்த்தம் பிர போதசந்திரிகை என்றொரு தமிழ்ப்பத்திரிகையைத்தொ டங்க யத்தனித்தார். அதற்கு இவர் பிரபுக்களின் இஷ்டத்திற்கு விரோதமாகவே ஆங்கலத்தில் முக்நோக் கையும் எழுதி வெளியிட்டார். என்னவானாலும் பிர புத்தபாரதத்தின் கௌரவம் இதற்கு எப்படி வரும்? பிரபுத்தபாரதம் ராஜஸ தாமஸ அகங்காரங்கள் ஒன் றும் இல்லாதஸமயத்தில் வெளிவந்த பத்திரிகை; பிர போதசந்திரிகையோ கஷ்டநிலையில் திரவ்யத்திற்காக ராஜஸ ஸம்பந்தமாக வெளிவந்த ஓர் பத்திரிகை. பிரபுத்தபாரதத்திற்கு எழுதுவதே பெரும்பாரமாகத் தோன்றிய இவருக்கு பக்கபல விசேஷத்தால் பிரபோ தசந்திரிகையைத் தொடங்கும்படியான கஷ்டம் வரப் பார்த்தது!

குடும்பவிஷயங்களிலிருந்து பரமபதம்பெற முடியும் என்றுவீண்பெருமைபேசும் நண்பர்காள்! ராஜம்அய்யர் கதியைப்பாருங்கள்! ஒருதொழில் கஷ்டம் என்று எண் ணி இருந்த இவரை, அந்தோ! அதைவிட அநேகவிஷ யத்தில் கஷ்டமான தொழில் வந்து கவியைப்பார்த்த தே! இந்தத்தருணத்தில் ராஜம் அய்யர் நடத்தையை

சிலர் நியாயம் என்று ஸ்தாபிக்க முயலலாம். எவ்வாறு வால்மீகியின் கோபவேளையில் உண்டான சுலோகத்தால் உலகம் உய்யும்படியான ராமாயணம் உண்டானதோ அவ்வாறு ராஜம் அய்யர் உலகஸம்பந்தத்தால் தொடங்க எண்ணிய பிரபோத சந்திரிகையும் உலகத்திற்கு ஓர்பேர் உதவியாக ஏற்பட்டிருக்கலாம் என்பதையும் நாம் அங்கீகரிக்கிறோம். பின்பு வால்மீகி தமது கோபவேளையை உத்தேசித்துபரிதவித்ததுபோலராஜம் அய்யருக்கு இந்த ஸமயத்தில் மனம்பதைத்திராதென்று எண்ணுகிறீர்கள் ? ஒரு பத்திரிகைக்கு எழுதுவதே நிஷ்டைக்கு விரோதம் என்று எண்ணியமனம் இரண்டாவதொரு பத்திரிகையை முழுவதும் எழுதி வெளியிடும்படி தூண்டப்பட்டால் எவ்வளவு வருந்தி இருக்கும் ? உண்மையில் இவ்வாறு பட்டவர்களுக்கன்றோ இக்கஷ்டம் தெரியும் ! அவர் கஷ்டத்தால் நன்மையை அடையும் நாம் வேண்டுமானால், நமது ஸ்வயநயம் கருதும் வழக்கத்திற்கேற்ப, அவர்காரியத்தை நியாயம் என்று கூறித் திருப்தி அடையலாம். ராஜம் அய்யர் தந்திரமாகத் தொடங்காமல் நேர்மையாகவிருந்து நிஷ்டை ஸாதித்திருப்பாராயின் இந்தக்கஷ்டத்திற்கு அவர் ஒருநாளும் உள்ளாயிருக்கமாட்டார்.



ஆநந்த நடேசர்

(ராஜம் அய்யர் தியானம் செய்துவந்த
திவ்யமங்கள விக்கிரஹம்.)

# V தேகம் நழுவிய சருக்கம்

நீரிற்குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற்சுருட்டு நெடுந்திரைகள்—நீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்காளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இவ்வாறு வெளிவிஷயங்கள் யாவும் ராஜம் அய்யருக்கு விரோதமாக அணிவகுத்து நிற்குங்காலத்தில் உள்ளூரவே இவரை ஓர் வியாதி கவர்ந்துகொண்டு விருத்தியாகிவந்தது. இரண்டாம்தரம் குடற்சிக்கல் நோய் வந்தபின்பு விருத்தியாகிய வ்யவஹாராதி சச்சரவுகளே இந்த வியாதியை உண்டாக்கி பலப்படுத்தி வந்திருக்கலாம். இவர் தேகத்தில் ஓர்வித வாட்டமும் காணப்படவில்லை. ஆனால் இவர் கொஞ்சதூரம் நடந்தால் கால் ஒய்ந்துபோகிறது பலஹீனமாக இருக்கிறது என்று மாத்திரம் அடிக்கடிப் பிரபுக்களிடம் சொல்லி வந்தார். பிரபுக்கள் ராஜம் அய்யர் தேகத்தில் ஓர்வித வாட்டமும் இல்லாதிருப்பதைக்கண்டு இது நரம்பு ஸம்பந்தமான பலஹீனமென்று எண்ணி ராஜம் அய்யருக்கு நரம்பை சீர்திருத்தவேண்டிய ஔஷதங்களைக் கொடுத்து வந்தனர். இதனால் ராஜம் அய்யருக்கு ஓர் வித குணமும் காணாமலிருந்ததோடுங் கூட வரவர இடுப்பில் பலமில்லாமல் போய்க்கொண்டே வந்தது. பிரபுக்கள் எத்தனையோதரம் ராஜம்அய்யர் நீரை எடுத்துப் பரிசோதிக்கவேண்டும் என்று எண்ணி அவரை

நீரெடுத்து அனுப்புவிக்கும்படிக் கேட்டபோதிலும் அவர் அசிரத்தை யாகவே இருந்துவிட்டார். இவருக்குச் சிறு வயதிலிருந்து இரவில் நல்ல தூக்கம் பிடிக்காமலே இருந்து கொண்டிருந்ததாம். அந்தத்தூக்கம் இன்மை இந்தக்காலத்தில் அதிகரிக்க 1898-ம் வருஷம் ஏப்பிரல் மாதத்தில் இவருக்கு மூன்றுநாள் இரவில் தூக்கமே இல்லாமல் போய்விட்டது. இதனால் இவருக்கு பலஹீனம் அதிகமாக பிரபுக்களிடம் வந்து தமக்கு தூக்கத்திற்கு ஏதாவது மருந்து கொடுக்கவேண்டும் என்று கேட்டார். அவர்கள் இதை ஸாதாரண பலஹீனம் என்று எண்ணி மயக்கம் கொடுக்கும்படியான மார்பியா என்ற வஸ்து கலந்த மருந்தைக்கொடுக்க அன்றிரவு ராஜம் அய்யர் நன்ருகத் தூங்கிஞர். காலையில் விழித்ததும் அவர் முகம் வீங்கியிருந்தது. இதைப் பிரபுக்கள் கேள்விப்பட்டதும் உடனே தாமஸிக்காமல் பரபரப்போடு ராஜம் அய்யர் நீரைத் தருவித்துப் பரிசோதித்தனர். அதில் ஏராளமாக வெண்கரு (ஆல்ப்யூமென்) இருப்பதைக்கண்டு மனமழிந்தனர். முன்னாள் கொடுத்த தூக்கமருந்து இந்தக் கொடும் வியாதியை ஸ்திரப்படுத்திவிட்டது. உடனே ராஜம்அய்யர் தகப்பஞர் முதலியவர்களுக்கு தந்தி கொடுக்கும்படி ஏற்பாடுகள் செய்துவிட்டு பிரபுக்கள் இவருக்கு சிகித்ஸைகள் செய்யத் தொடங்கினர். இதற்குள் வியாதிமுற்றிப்போய் விட்டபடியால் மருந்தொன்றும் பிடிக்காமல் போக வரவர இவருக்கு நீர் இறங்குவது குறைந்துகொண்டே வந்தது. இது குறையக் குறைய இதன் விஷம் தேகம் எங்கும் பரவிற்று. உட

னே இரண்டொருநாளைக்கெல்லாம் இவர் தேகம் மலை போல வீங்கிவிட்டது. ஐந்து நாளைக்கெல்லாம் இவர் கண்களிலிருந்து பார்வை அகன்றன.

இந்த அகாத ஸமயத்திலும் ராஜம் அய்யர் காட்டிய பொறுமையே பொறுமை! பெரியோர்கள் மரணத்தை நிர்ப்பயமாக ஏற்றனர் என்று நாம் கதையில் தான் கேட்டிருக்கிறோம். இவ்வாறு செய்பவர் இக்காலத்திலும் இருப்பார்கள் என்று எண்ணியிருக்கமாட்டோம். இந்த ஸமயத்தில் ராஜம் அய்யர் கூடவே இருந்தவருக்கு பெரியோர்களின் பெருமை நன்றாக விளங்கியிருக்கும். அவர்களுக்குங்கூட ராஜம் அய்யர் இருந்தமாதிரியைப்பார்த்த உடன் அப்பொழுதாவது மரணத்தை அச்சம் என்று எண்ணும் நிலை வந்திருக்கலாம். மருந்துண்ணுவதிலாகட்டும் மற்றும் வேறு எந்த விஷயங்களில் ஆகட்டும் ராஜம் அய்யர் தமது பிடிவாதத்தைக் காட்டவேயில்லை. இவரது வியாதி வீக்கம் ஸம்பந்தமானதாகையால் அதிக வலிமுதலிய தொந்திரவை அவருக்குக் கொடுக்கவும் இல்லை, அவரது பிரஞ்ஞையையும் மங்கும்படி செய்யாதிருந்தது. இந்த இரண்டும் இல்லாமல்போக ராஜம் அய்யர் கண்கெட்டது ஒரு பெரிய ஸாதகம் என்று எண்ணி இடைவிடாது நிஷ்டையையே ஸாதித்து வந்தார்: அப்பொழுது அவர் இவ்வளவு பரிசுத்தமனதோடு அசைவற்று படுத்திருந்த படுக்கை அறையில் அவருக்கு வேண்டிய சிச்ரூஷையை பிரபுக்கள் செய்துகொண்டு தயாராக இருந்து உறவினர்களை அதிக சச்சரவுகள் செய்ய விடாதிருப்பதை நோக்கியவருக்கு அந்த உள்

ஓர் சிறந்த கோயிலாகவே தோற்றியது. அங்கு வந்தவர்கள் எல்லோருக்கும் ஞானஸம்பந்தமான எண்ணங்களே உண்டாயின.

இவ்வாறு வெகு கம்பீரத்தோடு ராஜம் அய்யர் மரணத்தை லக்ஷ்யம் செய்யாது படுத்திருக்கையில் அவர் சாவதற்கு இரண்டு மூன்று நாளைக்குமுன் ‘ கன்றினுக்குச் சேதாகனிந்திரங்கல்போல’ அன்பது பெருகி சாந்தானந்தஸ்வாமிகள் தமது சிஷ்யனை கடாக்ஷித்து தேற்றிச்செல்ல அங்கு வந்துசேர்ந்தார். ஸ்வாமிகள் வந்திருக்கிறார் என்று அருகிலிருந்தோர் ராஜம் அய்யருக்குச் சொல்ல, இதுகாறும் அடங்கி இருந்த அவரது குருபக்தி அவருடைய உள்ளத்தில் பொங்கி எழுந்தது! இதுவரையில் ராஜம் அய்யர் தமது குருவை ஒழுங்காகப் பூஜை செய்தவர் அல்லர். தமது அந்தியகாலத்தில் “ இந்த மஹானது அனுக்கிரஹத்தால் அன்றோ நாம் இப்பொழுது ‘ கசத்த தேகத்திலிருக்கினும் ஆனந்தக்கடல்’ வடிவாக இருப்பது!” என்று தோன்றத்தோன்ற அவர் மனதில் அன்பெனும் ஆறு கரையது புரண்டோடியது. தமது தேகபலஹீனத்தைக் கூடக்கவனியாது தமதுகுருவுக்கு பாதபூஜை செய்தால் நலமாகயிருக்கும் என்று தமது உள்எண்ணத்தை அவர் வெளியிட்டார். இதை அறிந்த ஸ்வாமிகள் ராஜம் அய்யர் உறவினர்களுக்கு இதனால் மனஸ்தாபம் அதிகரிக்கும் எனக்கருதி அவர் அருகில் சென்று, “ ராஜம் அய்யர்! உமக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. இதுவரையில் நீர் எனக்குப் பாதபூஜையையா செய்துகொண்டிருந்தீர்? ‘ மனதிற்கு மனதேஸாக்ஷி.’ நீர் வெளிப்

பட்டியாக உமது அன்பைக் காட்டாவிடினும் உமது அன்பின் பெருமை எனக்குத் தெரியாதா? ஆகை யால் நீர் உமது தேகத்தை இந்தக் கஷ்ட ஸ்திதியில் வருத்தப்படுத்த வேண்டியதில்லை" என்று மெதுவாகச் சொல்லி அவரை ஸமாதானப்படுத்தினர். ஸ்வாமிக ளின் குறிப்பை அறிந்த ராஜம் அய்யர் உடனே அடங்கிவிட்டார். அப்பொழுது,

'ஐயனே எனதுள்ளே நின் றனந்தஜன் மங்களாண்ட
மெய்யனே யுபதேசிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்திநல்க முதலிக்கோர் உதவிநாயேன்
செய்யுமா றென்றறங்காணேன் றிருவடி போற்றி போற்றி;

என்ற கைவல்யப் பாடலின் கருத்து ராஜம்அய்யர் மனதைக் கவர்ந்து ஆனந்தமழை பொழிந்திருக்கும் என்பதற்கு என்ன ஸந்தேகம்?

ஸ்வாமிகள் வந்து போனதன்பின்பு வரவாராஜம் அய்யருக்கு நாடிகள் அடங்கிக்கொண்டே வந்தன. ஆனல் அவர் வியாதியில் வீக்கம் உண்டாயிருந்ததால் 'வீக்கமோ தூக்கமோ' என்ற பழமொழிக் கேற்ப உயிர்போகும் தருணம்வரையில் நோயாவது மயக்க மாவது அவருக்கு வரவேயில்லை. இவ்வாறு தேகபா தை முதலியன ஒன்றும் இன்றி மரணச்சோர்வு மாத் திரம் காணப்படும் மரணத்திற்கே அனாயாஸ மரணம் என்று பெயர். இவ்விதமாகிய மரணம் இவருக்கு வந் துக்கொண்டிருந்தபடியால் இவர் நிச்சிந்தையாகமுடிவு வரையில் அசைவற்று நிஷ்டையிலிருந்தார். நடுவில் பிரபுக்கள் இவரைக் கலைத்து 'குடும்ப விஷயமாக ஏதாவது சொல்ல விருப்பம் இருக்கிறதோ?' என்று

கேட்டதற்கு, 'ஒன்றுமில்லை' என்று அவர் பதில் கூறிவிட்டு மௌனமானார். ராஜம் அய்யர் வாக்கின்படியே, 'குருவருளால் எவன் ஒருவன் தனது முடிவு காலத்தில் வேறொன்றையும் சிந்திக்காமல் தனிமையாக காயத்திரி சென்றடையும் ஜகந்நாதரை தியானம் செய்துகொண்டு தனது தேகத்தை நழுவவிடுகிறானோ அவனே நன்றாக இறந்தவன்.' இம்மாதிரி அற்புதமான மரணம் ராஜம் அய்யருக்கு 1898-வருஷம் மேமீ 13-ம் தேதி அதிபால்யமாகிய 26-வது வயதில் கிடைத்தது. அவர் அருகிலிருந்த பிரபுக்களும் நெருங்கிய தோழர்களும், முதலில் சற்றே துக்கித்தபோதிலும் 'அரிது, அரிது ராஜம் அய்யர்போல் வாழ்தலும் இறத்தலும்' என்றே அவரைப் புகழ்ந்திருக்கவேண்டும். *

* ஓர் அதிசயசம்பவம்—ராஜம்அய்யர் இறந்த இரண்டொரு நாளைக்கெல்லாம், இரண்டொரு போலீஸ்காரர்கள் அவர் வீட்டிற்குவந்து ராஜம் அய்யரைப் பார்க்கவேண்டுமென்று பிரியப்பட்டனர். விஷயத்தை விசாரித்ததில் ராஜம் அய்யர் 1898-ம் வருஷம் எப்பிரல் மாஸஸஞ்சிகையில் எழுதி வெளியிட்ட வேதாந்தமும் சக்கிரவர்த்திபெருமானும் என்ற வியாஸத்தில் ஏதோ ராஜநிந்தனையாகச் சில விஷயங்கள் எழுதியிருப்பதற்காக அவரைக்கண்டு அவ்விஷயமாகப் பேசவேண்டும் என்று அந்த ஸேவகர்கள் தெரிவித்தனர். உடனே அங்கிருந்தோர், ராஜம் அய்யர் சிவலோகம் சென்றதை அவர்களுக்குக் தெரிவிக்க அவர்கள் தமது இருப்பிடம் சென்றனர். முன் குறிப்பிட்ட வியாஸத்தின் முன்பாகத்தில் வேதாந்தம் சக்கிரவர்த்தி பெருமானது அரசாட்சியை எப்பொழுதும் கவிழ்க்கவே பார்க்கிறது ; அது இருக்கிறவரையில் என்றைக்காவது அவருக்கு அபாயம் வருவது திண்ணம்,

ராஜம் அய்யர் பரமபதம் அடைந்தவிஷயத்தில் அநேகர் அநேக அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தனர். அவர் தகப்பனர், 'பிஞ்சில்பழுத்து வெம்பி வெடித்ததாலும் தக்க குருவை அடையாததாலும் என் பிள்ளைக்கு அகாலமரணம் வந்தது' என்று பரிதவித்தார். அவரது சிறப்பை அறியாத உறவினர்கள் எல்லோரும் இவ்வாறே எண்ணி இருந்தனர். சாஸ்திர விஷயத்தில் தேர்ச்சி அடைந்த சிலர், ஒழுங்குப்படியோகாப்பியாஸாதிகளை ராஜம் அய்யர் செய்யாத குற்றத்தால் அவரை இளம் வயதில் இழக்கும்படி நேரிட்டது என்று தூக்கித்தனர். அருகிலிருந்த அவரோடு பழகிய உள்ளன்பருக்குத் தான் ராஜம்அய்யர் ஸாதாரணமாக ஆயுஸ்மாத்திரம்முடிய மற்றையவரைப் போல இறந்தார் என்பது தெரியும். அவர்கள், முற்கூறிய

ஆகையால் அவர் எந்த ராஜ்யத்திலும் வேதாந்தத்தைத் தரிக்கவிடக்கூடாது என்று வெகுவாக எழுதியிருந்தாரே ஒழிய சக்கிரவர்த்தி பெருமான் இன்னர் என்பதை அவர் குறிக்கவில்லை. வியாஸமத்தியில் சக்கிரவர்த்தி பெருமான் அநந்தாரய் என்றுசொல்லி அதன் அரசாட்சியை வேதாந்தம் இவ்வாறு கெடுத்துவிடுகின்றது என்று விவரமாக எடுத்துரைத்து, முடிவில் 'ராஜசிந்தனையில் இதைவிட மேல்பட்டதும் உண்டோ? என்று மிகுந்த கம்பீரமாகத் தமது வியாஸத்தை பூர்த்தி செய்திருக்கிறார். இதன் ரகஸியத்தை உணராமல் ராஜாங்கத்தார் ராஜம் அய்யரைச் சோதிக்க சேவகர்களை அனுப்பினர் என்ற சங்கை நமக்கு உண்டாகலாம். 18.7-ம் வருஷத்தில் திலகர்மேல் ராஜசிந்தனை வியாஜ்யம் நடந்திருந்தமையால் ராஜாங்கத்தார் இவ்வாறு செய்யும்படி நேர்ந்தது.

வர்கள்கொண்டிருக்கும் எண்ணத்தை மாற்றப்பிரபுத்த பாரதம் இரண்டாம் தொகுதி 12-ம் ஸஞ்சிகையில் தாம் எழுதி வெளியிட்டுள்ள ராஜம் அய்யர் சரித்திரச் சுருக்கத்தின் முடிவில் தாம் அறிந்த விஷயங்களைப் பின் வருமாறு பிரசுரம் செய்திருக்கின்றனர். ''சிற்சில விடங்களில் ராஜம் அய்யரைப்பற்றி ஓர் தப்பு அபிப பிராயம் மெதுவாக நுழைந்து பரவிவருகின்றது. சிலர் 'ராஜம் அய்யர்வேதாந்தத்தின் நிமித்தம் தமது உயிரை இழந்தவர்' என்று கூறினர். இதனால் அவர்கள் ராஜம் அய்யர் தாம் செய்த யோகப்பியாஸத்தால் பெரிய வியாதியை இழுத்துவிட்டுக்கொண்டு அகாலத்தில் இறந் தார் என்று பொருள் கொள்வார்களாகில், இப்பொரு ளோடு கூடியவர்க்கு ராஜம் அய்யரது நண்பர்களுள் பரவாதிருக்கும்படி தடுப்பது எங்கள் பொறுப்பு. ரா ஜம் அய்யர் ஆத்மஸாக்ஷாத்காரமடைய முயன்ற நிஷ் டாமார்க்கமானது, ஸாதாரணமாக சுவாஸபந்தம், நாஸாக்ரதிருஷ்டி முதலிய ஹடயோக அப்பியாஸங்க ளோடு ஸம்பந்தப்பட்டதல்ல. அவர் உயிரோடிருந்த வரையில் மிகவும் மேன்மையாகவும் ஸமாதானமாக வும் வாழ்ந்தார். இறக்குங்கால் ஸ்வாபாவிகமாகவும் மிகுந்த சாந்தமாகவும் இறந்தார். அவரது அந்திய காலம் வரையில் அவர்அருகே இருந்த எங்களு க்கு அவர் முற்றிலும் காட்டியஸமாதானம் சாந்தம் முதலியவைகள் மிகுந்த ஆச்சர்யத்தை விளைத்தன. அவரைவிடப் பகுத்தறிவுடன் ஒருவன் வாழமுடி யும் அல்லது அவரைவிட சந்தமாக ஒருவன் இறக்க முடியும் என்றுவது எங்களுக்குத் தோன்றவில்லை, ஆத

லால் அவரைப்போல் வாழ்ந்து இறக்கவேண்டும் என்ற ஆவலே எங்கள் மனதில் குடிகொண்டிருந்தது.''

ராஜம் அய்யர் பரமபதம் அடைந்ததைப் பற்றி அவரை அந்தரங்கமாக அறிந்த சிலர் 'அவர் புண்ணியாத்மா. உள்ளபடி மூமுக்ஷுத்வம் உண்டாகி அனுபவம் பெற்றவர். ஆனால் லௌகீகவிஷயங்கள் அவருக்கு விரோதமாக ஏற்பட்டன. அவைகளைத் துறந்துபோய் நிஷ்டைஸாதிக்க வியாதியில் அடிபட்டு பலஹீனமான அவர் தேகம் இடங்கொடாது. இவைகளை நோக்கிக் கடவுளே தமது அருளால் அவரைச் சுற்றிலும் இருந்த கஷ்டங்களிலிருந்தும், ஸ்வாமிகள் ஸமாதியான பின்பு அவருக்கு ஏற்படக்கூடும் கஷ்டங்களிலிருந்தும் அவரை விடுவித்துத்தமது பாதாரவிந்தங்களிகளில் சேர்த்துக்கொண்டார். நல்லோர் உலகில் சீக்கிரம் இறப்பதற்கு இதுவேதான்எங்கும் காரணமாக இருக்கும். அவரது அபிவிருத்திக்கு அவர் இருக்கும் இடம் நிலை முதலியன தகாதனவாக இருப்பின் கடவுள் அவர்களை உடனே தம்மிடம் அழைத்துக்கொள்ளுவார்' என்று அபிப்பிராயப் படுகின்றனர். அவர்களை அபிமானம் மிகுந்த வேறோர் ஸபையத்தில் 'ராஜம் அய்யர் மாத்திரம் இப்பொழுது உயிரோடிருந்தால் நாகரீகம் மிகுந்து முமுக்ஷுத்வம் உண்டாவதே மிகக்கடினமாக இருக்கும் இக்காலத்தில் உண்மையாகப் பாடுபடும் சிலருக்கு அவர் மிகுந்த ஸஹாயமாக இருப்பார். இக்காலத்திலோ பக்தி முக்கியமென்று ஒருதிறத்தார் ஸபைகள் மத்தியில் பகவந்நாம

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

ஓசையில் பரவசமாகிக் குதிப்பதே முமுக்ஷுத்வம் வருவதற்குத் தக்க ஸாதனம், என்று கொண்டு அவ்வாறே செய்துவர அது வீண் மனக்கொதிப்பாக மாத்திரம் முடிந்து மேல் விருத்தியாவதற்கு தடையாக வருகின்றது. ஞானம் முக்கியம் என்றுகொண்டு மற்றொரு திறத்தார் வாசா கைங்கரியம் அன்றி வேறொன்றும் செய்யாது தானம், தர்மம், தயை, ஆராதனை, நல்லொழுக்கம் முதலியவைகளைக் கவனியாதவர்களாக வீண்காலம் கழிக்கின்றனர். இக்கொடிய காலத்தில் ஞானத்தால் வெளிவருபவைகளை சிரத்தையாக பக்தியின் ஸஹாயத்தால் இவ்வாறு நிஷ்டையில் அனுபவத்திற்குக் கொண்டுவருவதென்று ராஜம் அய்யர் நன்றாக வெளிப்படுத்தி இருப்பார்' என்று எண்ணி உருகுவார்கள்.

மஹானாகிய ராஜம் அய்யர் சரிதை முடிந்தது, இவர் முமுக்ஷுத்துவத்திற்காகப் பட்டபாட்டையும், பின்பு நிஷ்டையில் நிலைப்பதற்காகப் பட்டபாட்டையும் நன்கு உணர்ந்து உருகி நாமும் மேன்மை அடைய விடாது முயலுவோமாக.

இனி இச்சரிதையிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியவைகளைச் சுருக்கிக் கூறுவோம். எந்தப் பாஷையிலாகிலும் சுத்தகல்பனைசக்தியால் வெளிவந்திருக்கும் அருட்பாடல்களை உள்ளபடி உணரும்சக்தி ஒருவனுக்கு வருமாயின் அவன் எளிதில் முமுக்ஷுத்வத்தை அடைந்து முத்திபெறுவான் என்று நாம் இவர் சரித்திரத்திலிருந்து முதலாவதாகத் தெரிந்துகொள்ள வேண்டியது. உலகத்தில் எல்லோரும் பந்தப்பட்டிருப்பதால்

ஸுகம் அடையவே முயல்கின்றனர். அவர்கள் முயலும் வழிகளிலும், அவர்கள் அடையும் ஸுகங்களிலுமே அதிக வித்தியாஸங்கள் காணப்படுகின்றன. முமுக்ஷுவும் ஸுகத்திற்கே பாடுபடுகின்றான். மற்றையவர்களைப்போல நிலையற்றதாயும் பிறருக்கு துக்கஹேதுவாயும், உள்ள ஸுகத்தை பெரிதென்று எண்ணுவதால், பிறருக்கு யாதொரு கஷ்டத்தையும் உண்டாக்காமல் எப்பொழுதும் மாறாதிருக்கும்படியான நிரதிசய ஸுகத்தை அடைவதே அவனது உள்ளக் கருத்தாகக் காணப்படுகின்றது. இந்தச் சிறந்த நோக்கத்தின் பெருமையை உள்ளவாறு உணர்ந்து இதை ஸாதிக்க இளமை வயதாகிய 26-ல் இதற்கு விரோதமாகிய ஸந்தர்ப்பங்களுக்கிடையில் மனப்பூர்வமாகப்பாடுபட்டு முடிவில் இதை ஸாதித்ததே இவர் சரித்திரத்தில் முக்கியமான விஷயம். இதனால் வைதிகஸாம்பிரதாயப்படி ஆசாராதிகளை விடாது செய்துவந்தால்தான் ஒருவனுக்கு முமுக்ஷுத்வம் வரும் என்ற விதிக்குபகவானே, உள்ளத்துறவும் கனிவும் வாய்ந்த தமது நிஜபக்தன் விஷயத்தில் அடிக்கடி மாறாக நடக்கிறார், ஆதலால் உள்ளத்துறவும கனிவுமே முமுக்ஷுத்வத்திற்கு ஸாதனங்கள் என்பதை நாம் இவர் சரித்திரத்திலிருந்து தெரிந்துகொள்ளவேண்டியது. வைதிக ஆசாரத்தோடு முற்கூறிய லக்ஷணங்கள் கலந்திருப்பின் அது பொன்மலர் நாற்றமுடைத்து' என்பதுபோல மிகச் சிறந்தது என்பதற்கு என்ன ஸந்தேகம்?

# VI உபதேசமொழிச் சருக்கம்

*தாங்கலி லொன்றதனைச் சார்ந்து நடு நடுவே*
*ஓங்கியடைக உறுதி.*

*வேண்டா ஒழுக்கில் அத்துவிதம்; வேண்டு*
*மியாண்டு நற்பாவத் தது.*

இதுவரையில் ராஜம் அய்யர் இவ்வாறு உலகத்தில் வாழ்ந்து விமுக்தி அடைந்தார் என்பதையும் இவைகளிலிருந்து நாம் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டியவை இன்னவை என்பதையும் முன் ஐந்து சருக்கங்களில் எடுத்து விவரித்து ஆய்விட்டது. இந்தச் சருக்கத்தில் அவர் நேராக தமது நூல்கள் மூலமாய் நம்மைப்போன்ற உலகத்தவர்களுக்கு இவ்வாறு உபதேசம் செய்திருக்கிறார் என்ற விஷயத்தை, அவர் எழுதிய கமலாம்பாள்சரித்திரம் என்ற தமிழ்க்கற்பனைக் கதையிலிருந்து எடுக்கப்பட்ட தக்க மேற்கோள்களாலும், வேதாந்தஉல்லாஸம் என்ற ஆங்கில நூலிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட தக்க பாகங்களினாலும், நன்றாக விவரிப்போம்.

முதல் இரண்டு சருக்கங்களில் ராஜம் அய்யர் கற்பனைசக்தி விசேஷமும், அவர் மத விஷயஞானமும் ஆகிய இவைகளை முன்னிட்டுக்கொண்டு அவர் நமக்கு உபதேசிக்கும் விஷயங்களையும் ஒருவாறு சுருக்கமாக கமலாம்பாள் சரித்திரத்தைப்பற்றிக் கூறுமிடத்துக் கூறியாய் விட்டது. (6, 7-ம் பக்கங்களைப்பார்க்க) கமலாம்பாள் சரித்திரத்தில் சுத்தகற்பனை நிறைந்த வர்ண



காளிங்க மர்த்தனம்
(சிறந்த உட்கருத்து நிறைந்த
கிருஷ்ண லீலைகளுள் முக்கியமானதென
ராஜம் அய்யர் மனனம் செய்துவந்த லீலை).

னைகளின் உட்கருத்தைப் பின்வருமாறு ராஜம் அய்யரே வெளியிட்டிருக்கிறார்.

'நமக்குக் கடவுள் விளையாடக்கொடுத்திருக்கிற ஸாமான்களைப் பாருங்கள்! மரங்கள், நதிகள், நட்சத்திரங்கள், மேகங்கள், ஆகாயம்! நமக்கு என்ன குறைவு. நாம் அனுபவிக்கவே பிறந்தவர்கள். கடவுள் நமக்கு அனுபவிக்கும் சக்தியையும் கொடுத்து அவ்வனுபவம் ஸ்வல்பத்தில் கிட்டாதபடி பலமான தடைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார். இவ்வுலகம்தான் நமக்கு விரோதி. ஐயோ! அது செய்கிற சந்தடியும் அதன் அற்ப ஸந்தோஷங்களும், அற்பதுக்கங்களும், மஹா அற்பமான சண்டை சச்சரவுகளும் நம்மைக் கழுதையாக்கி விடுகின்றன.'

(க. ச. பக்கம் 263 & 264).

இந்தக் கருத்தைக்கொண்டே சிற்சில இடங்களில் மெய்ம்மறந்து பிரபஞ்ச வைசித்திரியத்தை ராஜம் அய்யர் வர்ணித்து வாசிப்போர் மனதை குதூஹலப்படுத்துகிறார். இம்மாதிரியான வர்ணனைகள் கமலாம்பாள் சரித்திரம் 68, 143—145, 160—161 ,174—175, 183—185, 247—250, பக்கங்களில் அமைந்து கிடப்பதைக் காணலாம். இப்புத்தகத்தில் ஆங்காங்கே சிறு சிறு உபதேசமொழிகள் அடங்கியிருக்கின்றன. அவற்றுள் சில பின்வருவன.

'நாய்வேஷம்போட்டால் குலைக்கவேணும். இவ்வுலகில் வாழ வரம்வாங்கி வந்தபிறகு முடியவில்லை என்றால் யார்விடுவார். அந்த உணர்ச்சி முன்னமேயே இருந்திருக்கவேண்டும்'.

(பக்கம் 148)

*
* *

'அவஸரப் படுவார்களா (அவஸரப்பட்டு தற்கொலை செய்து கொள்வார்களா) பொறுத்துக்கொள். அதைக்காட்டிலும் மேலானதாய் நாம் இந்த உலகத்தில் செய்யக்கூடியது

ஒன்றும் இல்லை; இல்லையென்று சொல்லவும் நமக்கு அதிகாரம் இல்லை; உண்டு என்று சொல்லுவதற்கும் அதிகாரம் இல்லை.

(பக்கம் 223)

*
* *

'நமக்குள் தற்காலத்தில் சில சிறுவர்கள், ஸ்திரீகள் இருபது வயதுக்கு மேல்பட்டு மணம்செய்தால்தான் புருஷருடன் ஸுகித்து வாழக்கூடும் என்று நினைக்கிறார்கள். ஸ்ரீநிவாஸன் லக்ஷ்மி இவர்களுடைய நேசத்தை (183—193, 299—301. பக்கங்களைப் பார்க்க) நன்றாய் அறிந்த எனக்கு அப்படித் தோன்றவில்லை.

(பக்கம் 182)

*
* *

' துன்பங்கள் ஒருமித்துவருவது இவ்வுலக இன்பத்தில் நமக்கு உள்ள ஆசையை ஒழிக்கவேண்டும் என்று ஏற்பட்ட கடவுளது அனுக்கிரஹம்.

(பக்கம் 201)

*
* *

' கடலில்காற்றினால் தூரத்தப்பட்ட இரண்டு நாணல்கள் சிலகாலம் ஒன்றை ஒன்று சேர்ந்திருந்தால் எப்படியோ அப்படித்தான் உலகத்தில் பந்துக்களும், மித்திரர்களும் : எல்லாம் இந்திரஜாலம், மாயை, அஞ்ஞானம்.'

(பக்கம் 202)

*
* *

அதோ அந்த கோபுரத்தைப்பார்! அது தரையிற்கிளம்பி உயரச் சென்று உம்பருலகுடன் உறவாடி நிலையாய் நிற்பதுபோல் உன் உள்ளமும் மேல்நோக்கி மயங்காது நிற்கும்படி அந்தக் கோபுரத்தைக் கடவுள் மூர்த்தமாகப்பாவித்து ஸேவை செய்.'

(பக்கம் 259)

*
* *

' தில்லைஸ்தலமே ஸ்தலம். தில்லை தில்லை என்றால் பிறவி இல்லை இல்லை என்று மறைமொழியும். தொல்லை தொல்லையென்ற கொடுவினை வல்லை வல்லையென்றகலும். ஸ்வாமி உண்டென்பதும் அங்கேதான், இல்லை என்பதும் அங்கே தான். கடவுள் ஆனந்தத்தாண்டவம் ஆடுவதும் அங்கேதான், அசைவற்றுவெளியாயிருப்பதும் அங்கேதான். அறியாதாரும் அறிவைப்பெறுவதும் அங்கேதான், அறிந்தவர்கள் அனுபவிப்பதும் அங்கேதான். உருவமும் அங்கேதான் ஒளியும் அங்கே தான். ஸ்ருஷ்டியும் ஸம்ஹாரமும் அங்கேதான். அங்குதான் உபநிஷத்தின் உட்கருத்தை உள்ளடக்கி அமைத்த ஆலயமும், அதற்குள் ஸ்ருஷ்டிக்குமுன்னும் பின்னும் ஒடுங்காத கடவுளின் ஆனந்த நிலைமையையும் ஆகாய ரூபத்தையும் ஆனந்தத் தாண்டவத்தையும் ஒருமித்து உருவகம் செய்திருக்கும் ஸபாபதியும், ரஹஸ்ய வெளியும், அவற்றிற்குப்பின் திருமூலர் மந்திரமும் அமைந்துஉள்ளது.'

(பக்கம் 260 & 262)

***

'நம்முடைய பெரியவர்கள் கடவுள் மூர்த்தங்களை எல்லாம் ஞானானந்தமூர்த்திகளாக பாவனை பண்ணியிருக்கிறார்கள். நான் அறிந்தமட்டில் வேறெவர்களும் கடவுளை இப்படியறியவில்லை. கடவுள் அழிவில்லாத ஆனந்தமூர்த்தி. கணபதியோ ஆனந்தமதம் பொழிந்து அந்த ஆனந்தவெள்ளத்தில் கண்சிறுத்தயானை ஸ்வரூபம். ஸுப்ரஹ்மண்யரோ மயில் வாஹனத்தின்மேலேறி ஆனந்தப்பிரமை பாடுகிறார். மஹா விஷ்ணு பாற்கடலைத்தேடிப் பள்ளிகொண்டிருக்கிறார். நித்திரை வராவிடிலோ கருடன்மீதேறி ஆனந்தமாய்ப் பவனிவருகிறார். நடராஜரைப் பற்றித்தான் கேட்கவே வேண்டியதில்லை. 'சிற்சபையில் ஆனந்த நர்த்தமிடும் கருணாகரக்கடவுளே' என்று நன்றாய் (தாயுமானவர்) சொன்னார்.

(பக்கம் 262 & 263)

***

வேதாந்த உல்லாஸம் என்ற ஆங்கல நூலில் இதே மாதிரியான சிறு சிறு உபதேசமொழிகள் ஆங்காங்கு அமைந்துள்ளன. அவற்றுள் சில பின்வருவன.

பாம்பு, பக்ஷிகள், எரிமலை அருகில் அணுகா; அதுபோல ஸாமாந்திரிகள் ஞானாக்னியால் பிரகாசிக்கும் மஹானிடம் அணுகா.

(பக்கம் 193)

*
* *

ஸாதாரணப் பழமொழிகளில் எவ்வளவு சிறந்த பொருள் மறைந்து கிடக்கின்றன! உதாரணமாக:—'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழியை எடுத்துக்கொள்ளுவோம். இதன்பொருள்:— ஆத்மாவை மறைக்கும் பஞ்சகோசாதிகளை சுவாஸக்காற்றுள்ளபோதே நீக்கிக்கொள் அதாவது நிஷ்டைஸாதித்து இறக்கும் முன் விமுக்தி அடை

(பக்கம் 193)

*
* *

நாம் இருக்கும் நிலைக்கு ஏற்ப பாபத்தைப்பற்றிய எண்ணமும் மாறும். மேலானநிலையில் நாமரூபாதிகளால் மயங்கி கடவுளை மறந்துவிடுவதே பெரிய பாபமாகும்.

(பக்கம் 193)

*
* *

ஆத்மா என்பது ஓர்பெரிய ஸமுத்திரம். கைகால் முதலிய இந்திரியாதிகள் அதில் மிதக்கும் பனிக்குன்றுகள். ஞான ஸூர்யன் உதயமானதும் அவை ஆத்மாவில் கரைந்து நாமரூபாதிகளை இழக்கின்றன.

(பக்க 194)

*
* *

இதற்கு ஆதாரம்.—'காயமது பொய்யடா அதுகாற்றடைத் தபையடா' என்றபாட்டும் 'நெல்லாகிமுளைக்கும் எனைத் தண்டுலமாக்கிய குருவே' என்ற கைவல்லிய வாக்கியமுமே.

ஸத்ஸங்கம் என்ற பதம் நல்லோர் இணக்கம் என்ற பொருளை மாத்திரம் அடக்கியுள்ளதல்ல. இணங்கி இருப்போர் எவ்வளவு நல்லவர்களாக இருப்பினும் முற்றிலும் ஒருவரோடு ஒருவர் பொருந்துவது அஸாத்யம். மேலும் வ்யாதி முதலிய தீமையொன்று வரும் ஸம்பவங்களால் அவர்கள் பிரியும்படி நேரிடலாம். உண்மையான ஸத்ஸங்கம், ஸத்தாகிய ஆத்மாவோடு சேர்ந்திருத்தலே. இந்த சேர்க்கைமாத்திரம் உள்ளபடி ஏற்பட்டால், என்றும் மாறாததாகவே இருக்கும் இது ஒருநாளும் பிரிக்கப்படமாட்டாது. ஆத்மாவே நமக்குச் சிறந்த ஸ்நேஹிதன்.

(பக்கம் 196)

*
* *

மனதைக் கொல்லத் துணிதல் ஆழமான குழியைப் பறித்து அதனுள் நமது நிழலைமூடிவிடத் துணிவதற்கு ஸமானம். எவ்வளவு ஜாக்கிரதையாக நமது நிழலைமூட முயன்றபோதிலும் எப்பொழுதும் நாம் போடும் மண்ணிற்கு மேலேயே அது நிற்கும். இதுபோல நமது மனதை நம்மால் கொல்லவே முடியாது. அதை வெகு தந்திரமாக ஸாவதான வழிகளில் அடக்க முயலவேண்டும். அது எளிதில் பின்பற்றி நிற்கக்கூடிய அந்தர்முக வஸ்துக்களை அதற்குக் காட்டி அதை படிப்படியாகத் தனது உண்மை உருவமாகிய மாறா பிரக்ஞையாம் ஆத்மாவை அறியும்படி செய்யவேண்டும்.

(பக்கம் 196)

*
* *

'உயிருள்ள காலத்திலேயே எவன் செத்தாரைப்போலிருக்கிறானோ (அதாவது துக்கம் மமகாரம் ஆகிய இவைகளிலிருந்து விடுபட்டவனாக இருக்கிறானோ) அவனே மரணம் அடை

ய யோக்யன். இதுபற்றியே பட்டணத்தடிகளும் 'செத்தாரைப்போலேதிரி' என்றார்.

(பக்கம் 587)

* * *

பாவத்தில் ஸதா அத்வைதியாய் இருத்தல்வேண்டும். கர்ம ஸ்வரூபமாகி வ்யவஹாரத்தில் அத்வைதம் கொண்டுவரக் கூடியதல்ல. இதுதான் ஞானிகளது கர்மங்களின் ஸ்வரூபத்தை அறிவதற்குத்தக்க வாக்கியம்.

(பக்கம் 275)

* * *

சிற்றின்பம் மனதைச் சலிக்கும்படி செய்துவிட்டு மாறிவிடும், பேரின்பமோ மாறுததாயும் மனத்திற்கு அப்பாற்பட்டதாயும் உள்ளது. முன்னது மித்யாரூபம், பின்னது ஸத்யமானது. முன்னது அஞ்ஞானத்தால் விளைவது. பின்னது ஞானத்தின் முடிவு. முன்னது மமகாரத்தால் உண்டாகி அதனாலேயே விருத்தியடைகிறது. பின்னதோ ஸர்வ பூததயாரூபம், அஹங்காரத்தைச் சுட்டறுத்தலால் விருத்தியடைவது. முன்னது வெளிவஸ்துக்களிலிருந்து உண்டாகி அவைகளால் மாறுதல் அடையக்கூடியது ; பின்னது வெளிவஸ்துக்கள் தேகம், மனஸ் முதலியவற்றிற்கு அப்பாற்பட்டது, இவைகளோடு ஸம்பந்தம் உடையதும் அல்ல.

(பக்கம் 224)

* * *

உலகத்தில் ஸாதாரணமாக துக்கம்வந்த காலத்தில் 'எனக்கு சாவு வாராதா' என்று வாய்விட்டுக் கூறுபவர்களும் ஸாதாரணமாக இறப்பவர்களும், இறக்க யோக்யதை இல்லாதவர்களே. இதனால் அவர்களுக்கு மறுஜன்மம் உண்டாகும். வாழ்க்கையின் நோக்கம்நன்றாக இறக்கத்தெரிந்துகொள்வதே, அதாவது செத்தாரைப்போலே திரியத் தெரிந்துகொள்வதே. இதை அறிந்து தேகம் நழுவவிடும் ஞானிகள் மறுஜனனம்இன்றி இறப்பவர்கள்.

எங்கு உயிர் காணப்படுகின்றதோ அங்கு நித்யஞான ஸுக அபேக்ஷை காணப்படுகின்றது. இதனால் எல்லாஜந்துக்களும் விடாது எல்லாக் காலங்களிலும் தமக்குத் தெரியாமலேயே இந்த ஸச்சிதானந்தத்தைத் தேடித்திரிகின்றன. வெளிவஸ்து வொன்றும் இந்த ஸுகத்தைக் கொடுக்கமாட்டாது. இதை அடைவதற்கு வெளிவஸ்துக்களோடு ஸம்பந்தப்பட்டுத் தொழிற்படும் மனம் இறக்கவேண்டியது. இந்த இறப்பு யாதெனின் அஞ்ஞானம் நீக்கித் தானே ஆத்மா இது வரையில் எண்ணியிருந்ததுபோல ஆத்மாவினின்று வேறல்ல என்று அறிவதே.

(பக்கம் 232)

*
* *

இவ்வாறு ஆங்காங்கு ராஜம் அய்யர் சிறுசிறு உபதேசமொழிகள் மூலமாக பெரிய ரகஸியங்களைத் தெரிவிப்பதோடுங்கூட சிற்சில விடங்களில் மெய்ம்மறந்து அரியவிஷயங்களை விவரித்து நமக்கு ஞானத்தை தட்டிஎழுப்பத் தொடங்கிவிடுகிறார். அவ்விடங்களில் தம்மை அறியாமலே அவருக்கு ஓர்வித பரபரப்பு உண்டாக அவர் பரவசமாகி எழுதத்தொடங்கிவிடுகிறார். அவர் நூல் முழுவதும் ஆங்கலத்திலாகட்டும், தமிழிலாகட்டும் மிகுந்த நடைகாம்பீர்யத்தை உடையது. அப்படிப்பட்ட நடையானது முற்கூறிய விடங்களில் தீடீரென்று மிகச்சிறந்த காம்பீர்யத்தை அடைந்து அவரது மனோ நிலையை நன்றாகக் காட்டிவிடுகிறது. இது பின்வரும் மேற்கோள்களை வாசிப்போருக்கு நன்றாகத் தெரிய வரும். ஆங்கலநடை காம்பீர்யம் மாத்திரம் இங்கு எழுதியிருக்கும் மொழிப்பெயர்ப்பில் நன்றாக வெளிவந்திருக்கமாட்டாது.

ராஜம் அய்யர் கடலோசையின் காம்பீர்யத்தைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

'கடலோசை விடபுருஷர்களின் விளையாட்டரவமல்ல; வாலிபஸ்திரீகளின் வம்புக்கூப்பாடல்ல. இனிய வீணையாதிகளின் கானம் அல்ல. வெற்றித்தம்பட்டத்தின் ஓசையுமல்ல. அந்தக் குரலில் களியாட்டத் தொனி கிடையாது. சோகரசம் உண்டு. ஆனால் புத்திரனையிழந்த பிதாவின் சோகம், புருஷனையிழந்த மனைவியின் சோகம் முதலிய சோகங்களுக்கும் அதன் சோகத்துக்கும் ஸம்பந்தமில்லை. புலையன் வயிற்றிற்பிறந்து 'தஸ்மாத் ஜாக்கிரத ஜாக்கிரத' என்று பறையறைந்த புண்ணியபுருஷருடைய இரக்கங்கலந்த ஸ்வயஞாபகமற்ற சோகத்துக்கும் 'ஸுகமற்ற இப்பாழுலகத்தில் பந்துக்களையும்கொன்று ஸுகமனுபவிக்கக் கருதுவார்களா' என்று சோகித்த அர்ச்சுனனுடைய சோகத்துக்கும் காம்பீரியத் தன்மை மயமான கடலோசையின் சோகத்துக்கும் நிரம்ப நெருக்கமான ஸம்பந்தமுண்டு. ஆனால் அவர்களுடைய பறையோசையையும் குரலோசையையும்போன்று சிறுத்திராமல் அழிவற்றஆகாயமட்டுமௌனாவி அநேகஆயிரம்சிரஸுகளையுடையதாய் எள்ளருந்திசைகளோடி பரமாத்மாவே மூர்த்திகரித்து நின்றாற்போல் நிற்கும் ஹிமோத்பர்வதமானது திடீரென்று ஒருநாள்தனது மௌனப்பிரஸங்கத்தை நிறுத்தி வாய்திறந்து பேசினால் எப்படியோ அப்படிப் பெரிய, கம்பீரமான, பொருள்நிறைந்த வேதரகசிய தத்வார்த்தத்திற்குத் தக்கதோர் குரலுடனே கடலானது நம்முடன் இடையறாது வசனிக்கிறது. ஐயோ கடவுளின் மகிமையே மகிமை. ஆஹா!' என்ன கம்பீரம் என்ன விஸ்தீரணம். ஐயோ இதில் எத்தனைகோடி ஜீவஜெந்துக்களிருக்கின்றன! இதுவே தனியாக ஒரு உலகம் போலிருக்கிறது. இது ராத்திரிகூட தூங்காதோ'—' ஸ்வாமிக்குத் தூக்கம் உண்டோ இதுவும் அவரைப்போலவே (மாயை யாகிய காற்றினால் அலைகளை) சிருஷ்டிப்பதும் அழிப்பது

மாயிருக்கிறது. நாம் கடைசியில் ஈசுவரனைப் போய்ச் சேரு வதுபோல அலைகளும் ஸமுத்திரத்தில் கலக்கிறது.' இந்த அலை கள் பிறப்பதும், குதிப்பதும், சிரிப்பதும், ஓடுவதும், ஒன்றை யொன்று அடிப்பதும், முட்டுவதும், மோதுவதும், இறப்பதுமே தொழிலாயிருக்கின்றன. இவைகளுடைய வீணாரவாரத்தினால் விளையும் கடைசி யோசனையா இவைகளுடைய சிரிப்பு விளையாட்டுக்கு முற்றும் விரோதமாய் "ஐயோ வீண் இப்படி வீணாக கூப்பாடிட்டுக் கெட்டுப்போகிறீர்கள்" என்று சொல் லுவதுபோல் சோகத்தொனியை உடைத்தாயிருக்கிறது. இப் படித்தான் உலகவாழ்க்கையும்; மனிதனும் பிறந்து சிரித்து அழுது சண்டைபோட்டு ஆடிப்பாடிக்கடைசியில் அமருகிறது. இங்கே ஒருஆள் இருந்தானே என்னடா மிச்சம் என்றால், ஒரு பிடிசாம்பல்; அதையும் காற்று ஒரு மூச்சில் வாரிக்கொண்டு போய்விடுகிறது. 'வீணடா இந்தவிருதாச்சண்டை, இதில் உனக்கென்ன மிச்சம் மிஞ்சுவது' அவர் ஒருவர்தான்; போய் அவரைத்தேடு,'' என்றும்

'நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று''

என்றும் இந்த ஸமுத்திரம் நமக்குச் சொல்லுகிறது.

(கமலாம்பாள் சரித்திரம் பக்கம் 190-192)

உலகத்திலுள்ள துன்பங்களையும், நிஜமான அன் புடைமை பாட்டையும் ராஜம் அய்யர் நன்றாகப் பின்வரு மாறு எடுத்துக்கூறுகிறார்.

'உலகத்தில் நடப்பதெல்லாம் நம்மைக் கேட்டா நடக் கிறது? நம்முடைய திருப்திக்காக இவ்வுலகம் சிருஷ்டிக்கப் பட்டிருப்பதுபோல் காணவில்லை. உலகம் நமது ஆக்ஞைக் குள் அடங்குமாயின், வாலிபர்கள் இறப்பதேன்; வயோதிகர்

கள் வாழ்வதேன்? விதவைகள் பெருப்பதேன்? வீடுகளெங்கும் வியாதிகள் புகுந்து 'பூவுதிரப் பிஞ்சுதிரக் காயுதிரக்கனியுதிர' என்றபடி ஈவு இரக்கமில்லாது எங்கும்நிறைந்த பொருளாய் எமன் உலாவுவதேன்? பச்சைப்பாம்புகள் இலைகளோடிலைகளாய்க் கிடந்து வேற்றுமைப்படாது வாழும் ஓர் அடர்ந்த விருட்சம்போல பாபபுண்ணியங்கள் பேதாபேதமின்றி பின்னிக்கிடக்கும் இப்பாழுலகின் இன்பாதிகளை அற்பமெனக்கருதாது அவற்றில் ஆசைவைத்து ஓர் நாசகாலியின் பாட்டைக் கேட்டுப் பன்றியாய் மாறிய மானிடர்கள்போல் உணர்ச்சி உணவு உற்பத்தியாதிகளில் அவ்வுருவே அடைந்த அறிவீனர்களாகிய நாம் நமக்குளதோர் அரைக்கணத்துள் பண்ணும் பாபங்கள் எத்தனை? எண்ணும் எண்ணங்கள் எத்தனை? சொல்லும் துற்சொற்கள்தான் எத்தனை? இவ்விதம் செய்யத்தகாதனயாவும் செய்து கூட்டிய குற்றக்குவியலை அனுபவிக்கப்புகுந்ததோர் சிறைச்சாலையாகிய இவ்வுலகின்கண்ணும் சிற்சிலஸமயங்களில் யதார்த்தமான அன்பானது தன்னினத்தைவிட்டு வழிதப்பிவந்த மான்பேட்டைப்போல வந்துவிடுகிறது. அவ்வாறு வந்தவிடத்து அது மனிதனாலாவது விதியினாலாவது வேட்டையாடப்படாதுபோவது இல்லை.'

(க. ச. பக்கம் 200, 201.)

நமக்குத் துன்பம் வருங்கால் அதை எவ்வாறு ஸஹித்துக்கொண்டு கரையேற முயலவேண்டும் என்பதை பின்வரும் மேற்கோளிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம்.

"எதார்த்தத்திலேயே இவ்வுலக இன்பங்களைப்போல் நமக்கு விரோதிகள் வேறு ஒன்றுமில்லை. நம்முடைய நிஜஸ்வரூபத்தை நம்மிடமிருந்து மறைத்து, 'நாளைவரும் நெல்குவியலிலும் இன்றுள்ள பிடிவிதை பெரிது' என்று விழுங்கி வீணே நாள்கழிக்கும் 'நீக்ரோ' ஜாதியாரைப்போல்நாம் நாளை அடையக்கூடிய பிர்ம்மானந்த ஸுகத்தை மறந்து இன்றுள்ள சிற்றின்

பத்தில் முழுகி மயங்கும்படி நம்மைச்செய்கின்ற, அற்பமாயும் அநித்தியமாயும் பயனற்றவும் தமோகுண ஸம்பந்தமாயும் துக்ககரமாயும் அஸாரகுண ஸ்வரூபமாயும் நமக்கும் பிறருக்கும் ஜனனமரண ஸம்ஸாரமாகிய அனர்த்த பரம்பரைக்கு ஹேதுவாயும் உள்ள இவ்வுலக இன்பங்கள் உயர்ந்தோரால் விரும்பற்பாலனவன்று. 'இங்கற்றவர்க்கு அங்குண்டு' என்றபடி அநேகருக்கும் துன்பமே ஒரு பெரிய மோக்ஷஸாதனமாயிருக்கிறதாதலால், தனவானுடைய தனத்தையும், ரூபவானுடைய தனத்தையும், போகத்தில் உல்லாஸமாய்க் களித்திருப்பவரது போகத்தையும்கண்டு நாம் பொறாமை கொள்ளாது அவற்றிற்கு ஆளாயிருப்போருக்கிரங்கி துன்பரூபமாக கடவுளது அனுக்கிரஹத்தைப் பெற்றோரைக் கண்டு கைகூப்புவதே இரகசியமான தத்துவ வழியாம்.'

(க. ச. 298, 299, பக்கம்.)

துக்கத்தால் நமக்கு உண்டாகக்கூடிய நன்மைகளை பின்வருமாறு ராஜம் அய்யர் விவரிக்கின்றார்.

துக்கத்தால் நமக்குச் சிறந்த பிரயோஜனங்கள் உண்டு. அது மனிதன் மனதைக் கரையும்படி செய்கின்றது. புத்தியைக் கூர்மைப்படுத்துகின்றது. மார்கழிமாதம் விழும்பனியைப்போன்ற செழிக்கச்செய்யும் சக்தியை உடையது. அடிக்கடி துக்கமே மோக்ஷதிறவுகோலாக ஏற்படுகின்றது. வேதாந்த கிரந்தங்களில் சிஷ்யனை குரு முன்னிலையில் அழும்படி செய்தபின்புதான் குரு மனம் இரங்கி போதிப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. துக்கத்தால் மனிதர்கள் மஹான்களாக மாறியிருக்கின்றனர். துக்கம் கரை புரண்டு ஓடுங்காலத்தில் மானிடரது இந்திரியங்களுக்கு தெய்வீகமான தோற்றங்களையும் சப்தங்களையும் கண்டறியும் அற்புத சக்தி வந்திருக்கின்றது. பெரிய புராணத்தில் திருஞான ஸம்பந்தர் என்ற குழந்தை அழுதுகொண்டிருந்ததால் பார்வதியால் ஞானப்பால் ஊட்டப்பட்டது. உலகவாழ்க்கையிலும் அழும் குழந்தைகள்தான்

தாயாராது லாலனைக்கு சீக்கிரத்தில் ஆளாகி ஸங்கிக்கின்றன. கௌதம புத்தர் மஹாபோதி விருக்ஷத்தடியிலிருந்து கண்டுபிடித்த நான்கு உண்மைகளுள் முதலாவதான உண்மை 'உலகத்தில் ஸதா துக்கமே காணப்படுகின்றது என்று அறிந்து பரிதவிக்கவேண்டும்' என்பதே. துக்கம் என்பது மனதை மிருதுவாக்கும் ஓர் தைலம். இதற்கேற்பவே ஓர் மஹான் 'துக்கிப்போரே அதிர்ஷ்டவான்கள் ஏனெனில் அவர்கள் சீக்கிரம் தேற்றப்படுவார்கள்' என்றார்.

(வே. உ. பக்கம் 261, 262,)

கற்றோர்களிடம் காணப்படும் மூடநம்பிக்கைகளின் ஸ்வரூபத்தை பின்வருமாறு விளக்கப்பட்டிருக்கின்றது.

மூடநம்பிக்கைகள் படிப்பில்லா அஞ்ஞானிகளிடம் தான் காணப்படும் என்பதே ஓர் மூட நம்பிக்கையாகும். படித்தவர்களது மூடநம்பிக்கைகள் அதிஸூக்ஷ்மமாக இருப்பதால் அவைகளின் உண்மையான ஸ்வரூபம் அவர்களுக்கும் மற்றையவர்களுக்கும் வெளிப்படையாக விளங்கமாட்டாது. ஆதலால் அது மிகுந்த கேட்டை விளைவிக்கக்கூடியது. அதை அஞ்ஞானத்தடிப்பினாலே படித்தவர்களே மற்றவர்களுக்குப் புகட்டி அவர்களையும் அம்மூடநம்பிக்கைளை நம்பும்படி செய்து கஷ்டத்திற்குள்ளாக்குவார்கள். இம்மாதிரியான படித்தவர்களிடம் காணப்படும் மூடநம்பிக்கைக்கு ஓர் உதாரணம் "வேதாந்தம் எவனுக்கும் விளங்காத விஷயத்தைக் கூறுவது, மனிதனுக்கு நன்மை விளையக்கூடியவைகள் எல்லாவற்றையும் அவனிடம் இருந்து ஒழித்துவிடுகிறது. மனிதனைக் கல்லுக்கு ஸமானமாகச்செய்து, உலகம் அவனால் ஓர் பிரயோஜனமும் அடையாவண்ணம் செய்துவிடுகின்றது'' என்பதே.

(வே. உ. 55, பக்கம்)

வேதாந்த சாஸ்திரப்படி மனிதனது புத்தி ஸ்வதந்திரம் உடையதா அல்லது பரதந்திரம்தானா என்ற

'கேள்விக்கு ராஜம் அய்யர் பின்வருமாறு விடை அளிக்கின்றார்.

மனிதனது புத்தி ஸ்வதந்திரமுடையதா அல்லது பாதந்திரமுடையதா என்ற கேள்விக்கு வேதாந்தபாமாக பதில் கூறவேண்டுமாகில் அது இரண்டும் உடையதல்ல என்று தான் சொல்லவேண்டிவரும். வேதாந்த சாஸ்திரப்படி 'அவனன்றி ஓரணுவும் அசையாது' ஏனெனில் எல்லாவற்றுள்ளும் அவனே அந்தர்யாமியாக இருக்கிறான். இதை உள்ளபடி உணர்ந்து வ்யவஹாரதிசையில் அநுபவத்திற்குக் கொண்டு வருவது மிகக் கடினம். ஏனெனில் வ்யவஹாரதிசையில் அகங்காரம் தலையைத் தூக்கிக்கொண்டு தான்எல்லாவற்றிற்கும் அதிபதி என்று முன்னிற்கின்றது. இந்த அகங்காரத்தை அடக்கி ஸ்வதந்திரம் உடையதுபோலக் காணப்படும் புத்தியை பகவானிடம் ஸமர்ப்பணம் செய்துவிட்டால் அற்புதவிஷயங்கள் ஸம்பவிக்கும். இந்த ரஹஸ்யத்தைத் தான் திரௌபதிமான ஸம்ரக்ஷண ஸமயமாக மஹாபாரதத்தில் நன்றாக உருவகப்படுத்தியிருக்கிறது. ஆதலால் எல்லாக்காலங்களிலும் 'எல்லாமுன் அடிமை, எல்லாமுன் உடைமையே எல்லா முன்னுடைய செயலே' என்று உள்ளபடி சொல்லக்கூடிய சக்தியை உடைத்தாயிருத்தலே நமக்கு ஒரு பெரிய பேறு. இந்தக்குணமே நம்மை எளிதில் மாயையிலிருந்து விடுவிக்கும்.

'எங்கள் புத்தி எங்களதே எவ்வாறெனை யாமறியேம்
எங்கள் புத்தி எங்களதே தங்களதாச் செய்வதற்கே'

என்றார் ஓர் ஆங்கல கவி இது முமுக்ஷுவின் முதல் இரண்டு நிலைமைகளைக் காட்டுகின்றது. ஆனால் இதற்கப்பாற்பட்டதான மூன்றாவதான நிலை ஒன்று உண்டு. அதில் நீ, நான் என்ற பேதமே கிடையாது. அதைத்தான் யாஞ்ஞவலக்யர் கார்கியினிடம் பின்வருமாறு புகழ்ந்து கூறுகின்றார். 'ஓ கார்கி! மாறுதலடையாத அந்த ஏகவஸ்து தான்பார்க்க முடியாதவ

ளுக இருந்துகொண்டு எல்லாவற்றையும் பார்க்கிறான், கேட்க முடியாதவனாக இருந்துகொண்டு எல்லாவற்றையும் கேட்கிறான், நினைவுக்கு அப்பாற்பட்டவனாய் எல்லா நினைவுக்கும் ஆதாரமாய் இருக்கிறான், அறியமுடியாதவனாக இருந்துகொண்டு ஸகலத்தையும் அறிகிறான். அவனைப் பார்க்கிறவனைகட்டும் கேட்கிறவனைகட்டும், நினைப்பவனைகட்டும், அறிபவனைகட்டும் வேறொருவனும் இல்லை. இந்த நிச்சய வஸ்துவில்தான் ஆகாயம் அடங்கியிருக்கின்றது.' இதுபற்றியே பகவான் அர்ச்சுனனைநோக்கி 'நீ என் கைக்கருவியாகவே இரு' என்றார்.

(வே. உ. பக்கம் 107)

வயலறுத்து தான்யத்தை 'சேகரிக்கும்பொழுது வைக்கோலும் எப்படி உண்டாகிறதோ அவ்வாறே சிற்சில சக்திகள் மோக்ஷமார்க்கத்தில் உண்டாகின்றன. அவைகள் விஷயத்தில் நாம் நடந்துகொள்ளவேண்டிய மாதிரி இன்னது என்பதை ராஜம் அய்யர் பின்வருமாறு விவரிக்கின்றார்.

'உண்மையான பக்தியின் சிறப்பு இன்னது என்பதே நமக்குத் தெரியாது. நாம் இப்பொழுதிருக்கும் ஸாதாரண நிலையிலிருந்து நோக்கினால், பக்தியின் வீர்யம், செழிப்பு, அபாரசக்தி ஆகிய இவைகள் நமக்கு நன்றாய் விளங்கமாட்டா. பக்திமலையைத் தூககுவது, அலக்ஷ்யமாய் பெரியஸமுத்திரங்களைத்தாண்டுவது, பஞ்சபூதங்களை அழிப்பது, பிரபஞ்சத்தையேஅசைப்பது ஆகிய அற்புதச் செயல்களுக்குக் காரணமாக இருக்கும். பக்தியாலாகாத தொன்றில்லை. பக்தியால் ஒருவன் தொழில் செய்யும் காலத்தில் அவன் ஆத்மசக்தியே வெளிவருவதால் நடக்கும் தொழில் அற்புதமாக இருக்கும். சுத்த ஹிருதயம் உடைய மஹான்களிடத்தில் இந்த பக்தியின் சக்தியை நன்றாகக் காணலாம். வருவனகூறல், அற்புத மருந்துகள், தம்மை அறியாமல் வெளிவரும் உண்மை வாக்கியங்கள், மெய்ம்

மறந்து கூறல், இவைபோன்ற அற்புத சக்திகள் சுத்தாத்மாக்களுக்கு எதிர்ச்சையாய் உண்டாவது. இப்பெரியோர்கள் உலகத்தில் வாழ்வதே அற்புதம். மற்றைய ஜீவராசிகள் எவ்வாறு நாளைக்கு என்ற எண்ணமின்றி வாழ்கின்றனவோ அவ்வாறே இவர்களும் மறைவாக இருக்கும்படியான ஓர் சக்தியின் வைபவத்தால் காப்பாற்றப்பட்டு வாழ்கின்றனர் என்பது இவர்களது நடத்தையை உற்று நோக்குவோருக்கு விளங்கும். மனது அசுத்தப்பட்டதும் இந்தச் சிறப்பெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிப் போய்விடும். மஹானுக்கு தாம் அற்புதச் செய்கைகள் செய்கிறோம் என்ற எண்ணம் வந்ததும் உடனே மனம் அசுத்தமாகிவிடும், சக்திகளும் அவரை விட்டகலும். அப்பொழுது அவர் முன்போல மஹானாக விளங்கவேண்டும் என்று எவ்வளவு பாடுபட்டபோதிலும் முன்இருந்த சக்தி அவரிடம் நில்லாது மோசம்செய்து விடுகின்றது. சக்திபோனபின்புகூட அவன் முன் இருந்த கீர்த்தியை வஹிக்க முயலுகிறான். இதனால்தான் உலகில் அநேகம் வேஷஸந்யாஸிகள் உண்டாகின்றனர். புத்திமான்கள் இதை அறிந்து தமது சக்தியால் கீர்த்தி தமக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தை ஒருநாளும் தமது மனதில் புகுந்துகொள்ள இடங்கொடுப்பதேஇல்லை. அவர்கள் தமது சக்தியால்வரும் கீர்த்தியை தாம் அங்கீகரிப்பதில்லை. மனதார அவை பகவானது லீலை என்று எண்ணி அதை பகவானதுபாரமாக விட்டுவிடுவார்கள். அவர்களுக்கு தமது வாக்கு உண்மையாக வேண்டுமே என்ற கவலை ஒருபோதும் கிடையாது. பிரம்மமாகி இருக்கும் மஹான்களது மனத்தை எப்படிப்பட்ட சக்தியானாலும் ஸரி கீழே இழுக்கவல்லது அல்ல.'

(வே. உ. 444, 674, பக்கம்)

* *
*

நம்பிக்கை மாறுபட்டால் ஒருவனுக்கு உண்டாகக்கூடும ஏற்றத்தாழ்வை ராஜம் அய்யர் பின்வருமாறு எடுத்து விவரிக்கிறார்.

இவ்வுலகில் எவ்விஷயத்திலும் நம்பிக்கை 'யில்லாத மனிதனே கிடையாது. இவ்வுலக வாழ்க்கையால் ஏதோ ஒரு பிரயோஜனம் தனக்கு உண்டாகும் என்றே ஒவ்வொருவனும் எண்ணுகிறான். ஆதலால்தான் எவ்வளவு கஷ்டங்கள் இவ்வாழ்க்கையில் ஒருவனுக்கு வந்தபோதிலும் அவன் அவைகளைப் பொறுத்துக்கொண்டு உயிர்தரிக்க எண்ணுகிறான். ஒரு மனிதனது ஏற்றத்தாழ்வை அவனது நம்பிக்கையினால் எளிதில் அறியலாம். 'கொண்டதே கோலம் கண்டதே காட்சி' 'விஷயபோகமே மோக்ஷம்' என்ற நம்பிக்கையை உடையவனாக ஒருவன் இருப்பின் அவன் இவ்வுலகத்திய இன்பதுன்பங்களால் மொத்துண்டு மேல் போகும்வழி யறியாது தத்தளிக்கும் பாபியாவான். 'விஷயம் விஷமேயாம்' 'சிற்றின்பங்களைவிட கோடிமடங்கு மேலானதான பேரின்பம் ஒன்றிருக்கின்றது' என்ற நம்பிக்கையுடையவன் ஒருவன் உலகில் சிக்கிக்கொள்ளாது வரும் கஷ்டங்களைத் தாங்கும் திறனுடையவனாக உலகில் ஸஞ்சரித்துவரும் புண்யாத்மாவாவான். 'உன் தோழர் இன்னாரெனக்கூறு, நீயார் என்று கூறுவன்' என்று சொல்லுவதுபோல 'உன் நம்பிக்கை இன்னது எனக்கூறு நீ இத்தகையன் எனக்கூறுவன்' என்று நாம் தைரியமாகக் கூறலாம்.

இந்நம்பிக்கை அநேகவிதமாக உலகில் காணப்படுகின்றது. நெப்போலியன் என்ற அஸஹாய சூரனை பிரான்ஸ் சக்ரவர்த்தி 'அஸாத்யம்' என்ற பதமே பாஷையில் அநாவசியம், ஏனெனில் தீரனுக்கு அஸாத்யமான காரியமே கிடையாது' என்றானாம். ஜூலியஸ் ஸீஸர் என்ற ரோம சக்ரவர்த்தி போய்க்கொண்டிருந்த ஓர் கப்பல், பெரும்புயலில் அகப்பட்டுக்கொள்ள அதில் இருந்தோர் எல்லோரும் மிகவும் பயந்து நடுங்கிவிட்டாராம். அப்பொழுது அவர் கப்பற்காரரை நோக்கி 'பயப்படாதேயுங்கள். கப்பலில் யார் இருக்கிறது என்று எண்ணினீர்கள்! நான் இருக்கும்பொழுது உங்

களுக்கு என்ன ஆபத்துவரும்' என்று தேற்றினோம். இந்த நம்பிக்கைகள் கேவலம் ராஜஸகுண ஸம்பந்தமானவை. இவைகளுக்கு கர்வம் அல்லது அகங்காரம் என்று பெயர். இது முற்றினால் இதை உடையவனுக்குக் கேடேவிளையும். இதுபோன்ற அபாயமான ஸமயத்தில் பகவத்பக்தர்கள் 'இவை ஈசுவரன் செயல்' என்று சொல்லி தாம் ஏதோசெய்த பகவத் அபராதத்திற்காக அக்கஷ்டம் வந்தது என்று எண்ணி வருந்துவார்கள். இதில் ஸத்வகுணம் முன்னதைவிட அதிகமாக இருப்பினும், இதைவிட சிறந்ததான நம்பிக்கை ஒன்றுண்டு. முன்காலத்தில் கிரீஸ் தேசாதிபதியான அலக்ஸாண்டர் நம் பரதகண்டம் வந்து ஓர் மஹானைக்கண்டு அவருடன் வார்த்தையாடி அவரது புத்தி நுட்பத்தைக்கண்டு மகிழ்ந்து தனது ஊருக்கு வரும்படி அவரை அழைத்தான். அவர் மாட்டேன் என்று சொல்லிவிட எவ்வளவோ அவன் நயந்து பார்த்தான். ஒன்றும் முடியாமல்போக 'நீர் வாராவிடில் உம்மைக்கொல்வேன்!' என்று சொன்னான். மனங்கோணாத மஹான் நகைத்து 'உன்னைப்போல என்னுடன் பொய் சொன்னவர்களே கிடையாது. என்னை எவராலும் எதனாலும் கொல்லவேமுடியாது. பிரபஞ்சத்தில் என்னைத்தவிர உண்மை வஸ்து வேறுகிடையாது' என்று கூறி மௌனமானார். இம்மாதிரி ஸதா ஸர்வகாலமும் 'யானே எங்குமாம் பிரம்மம் என்பால் கவருடைப் புவனமெல்லாம் கற்பிதம் என்று அறிந்து' தைரியமாக இருப்பதே ஸாத்விக நம்பிக்கையின் முக்கிய லக்ஷணம்.

(வே. உ. 118, 124, 125.)

*
* *

வேதாந்த உல்லாஸம் என்ற ஆங்கல கிரந்தத்தில் இவர் வேதாந்தக் கருத்துக்கள் அமைந்த சிறு கதைகளும் எழுதியுள்ளார். அவற்றில் சிலவற்றை பின் எடுத்து மொழிபெயர்த்துக் காட்டுகிறோம். இக்கதைகள்

சிறுவர்களுக்கும் ஆனந்தத்தை விளைவிக்கும், உயர்ந்த கருத்தை உள்ளடக்கிக்கொண்டனவாகவும் இருக்கும்.

உலகத்தைச் சுற்றிவருதல்:—ஈசுவரன் ஒருநாள் பார்வதியோடு வீற்றிருக்கையில் தமது பிள்ளைகளாகிய கணபதி, ஸுப்ரஹ்மணியன் ஆகிய இவர்களை அழைத்து, 'அப்பா என்னிடத்தில் ஒரு அருமையான பழம் இருக்கின்றது. உங்களுள் எவன் ஒருவன் பிரம்மாண்டம் முழுவதையும் சுற்றிவிட்டு முதலில் என்னிடம் வந்து சேருகிறானோ, அவனுக்கு அதை கொடுத்துவிடுவதாக எண்ணி இருக்கிறேன்' என்றார். ஸுப்ரஹ்மணியருக்கு அந்த பழத்தை அடையவேண்டும் என்ற ஆவல் உண்டாக உடனே பிரம்மாண்டத்தை வலம் வரத் தமது மயிலின்மேல் ஏறினார். அது அவரை வாயுவேக மனோவேகமாக எடுத்துச் சென்றது. கணபதியோ தன் தம்பியின் தலை மறையும்வரை, சும்மாவிருந்துவிட்டு, பின்பு மெதுவாக எழுந்து தமது தாய் தகப்பன்மாரை வலம் வந்து 'இப்பொழுது இருக்கிறதும், இதுவரையிலும் இருந்ததும், இனிமேல் உண்டாகப்போகிறதும் ஆகிய அண்டங்கள் யாவும் உம்முள்ளேயே அடங்கி இருக்கின்றன. நான் உங்களைச் சுற்றிவந்தால் இவைகள் எல்லாவற்றையும் வலம் வந்தவனாவேன். ஆகையால் பழம் என்னைச் சேரவேண்டியது' என்று சொன்னார். இந்த மொழியைக்கேட்டு பார்வதி பரமேசுவரர்கள் மகிழ்ந்து கணபதிக்கே அந்த அருமையான பழத்தைக் கொடுத்தனர். இந்தக் காரியம் முடிந்து வெகு நாழிகைக்குப் பிறகு, வேர்க்க விருவிருக்க தமது மயிலின்மேல் ஏறிவந்த ஸுப்ரஹ்மணியர் தாம் மோசம்போய்விட்டோம் என்று அறிந்தாரே ஒழிய வேறில்லை. இக்கதையை இங்கு உள்ளவாறு எடுத்துக்கொண்டு சண்டையிடக்கூடாது. இதில் அடங்கி இருக்கும் உட்பொருளே மிகச்சிறந்தது. அதாவது 'கடவுளை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாகும். வெளிப்பிரபஞ்சத்தை எவ்வளவு நுட்பமாக அறிந்தபோதிலும் அத

ஞால் நமக்கு ஞானம் என்னும் பழம் ஒருநாளும் கிடைக்காது. வெளிஞானம் வரும் என்பதற்கு ஸந்தேகமில்லை, ஆனால் முதிர்ந்த ஞானமும் அதினால் உண்டாகும் சாந்தியும் ஆனந்தமும் நம்மை அணுகா' என்பதே.

(பக்கம் 356.)

* *
*

மனம்போல ஜகம்போலும்.—ஒருநாள் கிருஷ்ணபகவான் தருமபுத்திரருக்கும் துரியோதனனுக்கும் உள்ள தாரதம்யத்தை வெளியாக்க எண்ணி தருமபுத்திரரை அழைத்து 'அப்பா, நீ தேடிப்பார்த்து பத்து கெட்டவர்களை அழைத்துவா' என்றும், துரியோதனனை அழைத்து 'அப்பா நீ பத்து நல்லவர்களைத் தேடி அழைத்துவா' என்றும் ஏவினார். அப்பொழுது துரியோதனன் மிகுந்த ஆவலோடு தேடத்தொடங்கினான். இந்த ஆவலை விருத்திசெய்ய பகவான், கிடைக்கும் நல்லவரை வைத்துக்கொண்டு ஒரு யாகத்தைச் செய்து முடித்தால் அதனால் பாண்டவர்களை எளிதில் அழித்துவிடலாம் என்று அவனுக்கு ஆசைகாட்டி இருந்தார். துரியோதனன் எவ்வளவு தேடியும் அவனுக்கு ஒரு நல்லவன்கூட அகப்படவில்லை ஏனெனில் அவனுக்கு எங்கும் சிறுகுற்றங்கள் இருப்பனவாகவே தோன்றிற்று. இதுபோல தருமபுத்திரரது வேட்கையும் பயனற்றதாக முடிந்தது. அவருக்கு திருடன், கொலையாளி தாயைக் கொன்றவன், தகப்பனைக் கொன்றவன் முதலிய கொடியவர்களும் அஞ்ஞானத்துக்கு ஆளாகித் தத்தளிப்பவர்கள் என்றும், அவர்களுக்கு உண்மைஞானமிருக்குமாயின் தமது தொழிலை உடனே விட்டுவிடுவார்கள் என்றும் தோன்றிற்று. ஆகையால் ஸகலகுண பூரணரான தர்மபுத்திரருக்கு எல்லாம் தெய்வத்தன்மை வாய்ந்த சிறந்த வஸ்துக்களாகவே தோன்றின ஆகவே திரும்பிவருகையில் அவர் பகவானை நோக்கி, 'பரம்பொருளே! நான் ஒரு குற்றவாளியையும் கண்டிலேன். குற்றவாளியைக் காணவேண்டும் என்ற ஆவலோடு

புறப்பட்ட நானே குற்றவாளி' என்று நொந்துகொண்டார். இதனால் உலகத்தின் நிலை ஒருவன் மனோநிலைமையைப் பொறுத்தது, என்று தெரியவருகிறது.

(பக்கம் 255.)

*
* *

**திதிக்ஷை அல்லது ஸஹித்தல்.**—இராவணன் முதல் தரம் இராமரை எதிர்த்துப் போர்செய்தபொழுது மாலைக் காலத்தில் நிராயுதபாணியாகத் தோல்வியடைந்து இராமர் முன்பு வெட்கிநின்றான். அவனைக் கொல்லும் திறம் இராமருக்கு இருந்தபோதிலும், அவர் அவனைநோக்கி 'இராவணா நீ சிறந்த வீரனைப்போலச் சண்டைசெய்தாய். உண்மைதான். அது என்னிடத்தில் பலிக்காது அப்பா! இப்பொழுதே உன்னை நான் கொன்றாலும் கொல்லலாம்; ஆனால் நான் உன்னைக் கொல்வதில்லை. இதுவரையில் நான் உன்னை எவ்வளவோ தரம் ஸீதையைக் கொண்டுவந்து விட்டுவிடு அப்படியாகில் சண்டையை நிறுத்திவிடுவேன்' என்று கேட்டிருக்கிறேன். இப்பவும் நீ நல்லவழிக்குவா இனி ஒருமுறை அவ்வாறே செய்யும்படி உன்னை நான் கேட்கிறேன். இதைப் பற்றி நன்றாய் யோசித்துவிட்டு நாளைக்குவா. என் சொல்படி நடப்பாயாகில் உனக்கு ஒரு குறைவும் வாராது. இல்லாவிடில் நான் உன்னைக் கொன்றே தீரவேண்டும். பின்பு என்னால் வேறொன்றும் செய்யமுடியாது' என்று நயமாகச் சொன்னார். இந்தமொழியில் காணப்படும் சித்த ஸமாதானம் ஜன்மவைரியிடத்தும் ஓர்வித அன்பு ஆகிய இவைகளே உண்மையான திதிக்ஷையின் ஸ்வரூபம். தன் பிராணநாயகியாகிய ஸீதை விஷயத்தில்கூட கேவலம் ஸ்வயநயம் கருதி கோபதாபாதிகளால் விரோதிமேல் ஆக்கிரஹத்தோடு இராமர் பாய்ந்தவரல்லர். ஆனால் அந்தத் தருணத்தில் தாம் செய்ய வேண்டிய கடமையை ஸரிவர நடத்தி முடிப்பதற்கே இரா

வணனை• அவர் கொன்றவர். இராவணன் கொடியவன், அவனைக் கொன்று தமது மனமாரவேண்டும் என்ற ஆதங்கத்தால் அவர் அவனைக்கொன்றவர் அல்லர். அந்த ஸந்தர்ப்பத்தில் தாம் செய்யவேண்டியதை மனப்பரபரப்பின்றி அவர் செய்துமுடித்தவரே ஒழிய வேறல்ல. செய்யவேண்டியதை மனக்குழப்பமின்றி செய்வதுதிதீக்ஷையின் ஸ்வரூபம்.

(பக்கம் 290)

* * *

உண்மையும் நேர்மையும்!—ஒரு மனிதனுக்கு பன்றிகள்போல் உறுமும் திறம் நன்றாக இருந்தது. பன்றிகள் மேய்ந்துகொண்டிருக்கும் இடம்போய் அவன் உறுமினால் தமது கூட்டத்தில் எதாவது ஒரு புதிய பன்றிதான் வந்துவிட்டதோ என்று அவைகள் நாற்புறமும் சுற்றி வெருண்டு நோக்குமாம். அவன் கீர்த்தி உலகெங்கும் பரவினதும் தன் திறமையால் அவன் பணம் ஸம்பாதிக்க தேசஸஞ்சாரம் செய்யத் தொடங்கினான். ஓர் ஊரில் இவன் உறுமிப் பணம் ஸம்பாதித்துக்கொண் டிருக்கையில் அவ்வூர் வழியாக ஒரு மஹான் தமது சிஷ்யர்களுடன் போய்க்கொண்டிருந்தார். அவன் பணம் ஸம்பாதிக்கும் வழியைக் கண்டதும், அதன் மூலமாகத் தமது சிஷ்யர்களுக்கு நல்லவிஷயம் ஒன்றை போதிக்கலாமென்று அவருக்குத்பட, உடனே அங்கே ஒரு பந்தல் ஒன்றைத் தயார்செய்து 'இங்கு வேறிடங்களில் கேட்கக்கூடிய உறுமலைவிடச் சிறந்த உறுமலை கேட்கலாம். இதற்கோ காசு ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை, இஷ்டமானவர்கள் வரலாம்' என்று தமது சிஷ்யர்களால் தண்டோராப் போடுவித்தார். ருசிகண்ட அவ்வூர் ஜனங்கள் மிகுந்த ஆவலோடு மஹானது பந்தலில் வந்து கூடினார்கள். அவரோ நிஜமான பன்றி ஒன்றை வாங்கிவந்து அதன் காதைத்திருகிக் கத்தும்படி செய்தார். உண்மையில் இது மற்றையவன் உறுமலைவிட மிகநேர்த்தியாகத்தான் இருந்திருக்கவேண்டும்.

ஆனால் ஜனங்கள் எல்லோரும் சீ! இதுதானா! இதை நாம் தினம் கேட்கவில்லையா, இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது' என்று இகழ்ந்து பேசிவிட்டுப் போய்விட்டனர். மஹான் எவ்வளவோ தண்டோராப்போட்டுப் பாடுபட்டுப் பார்த்தார், அவர் பந்தலுள் ஒரு மனிதன்கூட வரவில்லை. ஆனால் போலிப்பன்றியின் பந்தலில் கூட்டம் எப்பொழுதும் விடாது கூடிக்கொண்டே இருந்தது. பந்தல் காலியானதும் மஹான் தமது சிஷ்யர்களைச் சூழ இருக்கும்படி சொல்லி, 'பார்த்தீர்களா! இப்பொழுது செய்த சோதனையில் ஓர் அற்புதம் வெளியாகின்றது. மனிதர்களுக்கு உண்மை வஸ்துக்களில் இஷ்டமில்லை, போலிந்தோற்றங்களில் அதிகப்பிரீதி. இதனால் தான் போலி இன்பங்களாகிய உலக இன்பங்களைக் கட்டிக்கொண்டு அவைகளைவிட்டு நீங்க மனம்வராது அவர்கள் அவைகளில் கிடந்து உழன்று வருந்துகின்றார்கள். மேன்மைஅடைவது கஷ்டமல்ல. அதற்கு எந்த வெளி வஸ்துவின் ஸஹாயமும் கொஞ்சமேனும் வேண்டியதில்லை. அதை அடையவேண்டுமென்ற மனப்பூர்வ அபேக்ஷை தான் வேண்டும். நாம் எவ்வளவுதான் பேரின்பத்தின் சிறப்பை எடுத்துரைத்தபோதிலும் அதில் ருசி உள்ளவர்கள் தவிர வேறொருவரும் நம்மை அணுகார் இதைப் பற்றிச் சிந்தியுங்கள்' என்றார்.

(பக்கம் 355, 356.)

* * *

மனதை ஜயித்தவனே வீரன்.—மஹாபலி என்றொரு அஸுர அரசன் இருந்தான். அவன் திருலோகங்களையும் ஜயித்து சிறப்பை அடைந்தான். அவனுக்கு இன்னும் நாம் ஜயிக்கத்தக்க இராஜ்யங்கள் இல்லையே என்ற ஏக்கம் உண்டாயிற்று. அப்பொழுது புத்திசாலியாகிய மந்திரி அவனை நோக்கி, 'நீங்கள் உலகம் முழுவதையும் ஜயித்த தென்னமோ உண்மைதான், ஆனால் இவைகள் எல்லாவற்றையும்விடப்

பெரியதாயும், செல்வச்சிறப்புற்றதாயும் உள்ள ஒரு ராஜ்யம் இருக்கிறது. அதை நீங்கள் ஜயிக்கும்வரையில் உங்களுக்கு வீரர் என்ற பெயர் தகாது' என்றான். இதைக்கேட்டதும் அரசனுக்கு அந்த ராஜ்யத்தை ஜயிக்கவேண்டும் என்ற ஆவலுண்டாக, 'அந்த ராஜ்யம் எங்கே இருக்கிறது. யார் அதற்கு அரசன்' என்ற விசாரணைகளைச் செய்யத் தொடங்கினான். அதற்கு மந்திரி, 'அந்த ராஜ்யத்தின் அரசன் ஸாது; குற்றமற்றவன். ஆனால் அவன் மந்திரி தந்திரசாலி; அவனைக்கொல்வது அஸாத்யம், அவனை எப்படியாவது அடக்கினபின்பு தான் அந்த ராஜ்யத்தை அடையமுடியும்' என்றான். உடனே அரசன் அதை ஜயிக்க மஹா வீராவேசத்தோடு ஸேனைகளைச் சேர்க்கத் தொடங்கினான். இதைக்கண்டு மந்திரி நகைத்துக்கொண்டு 'நான் சொல்லிவரும் ராஜ்யம் உள்ளேயே இருக்கிறது' என்று குறிப்பாக எடுத்துக் காட்ட, அரசன் புத்திமானாகையால் இந்தக் குறிப்பை அறிந்துகொண்டு 'நீ சொல்வது உண்மைதான்; எனக்குள் இருக்கும் இராஜ்யத்துக்கு அரசனாகிய ஆத்மாவை அடைய அவன் மந்திரியாகிய மனதை ஜயிக்காது முடியாது. ஆயினும், ஆத்மாவைக் கவனியாது உலகை ஜயிப்பதால் பயன் என்ன?' என்று வாய்விட்டுச்சொல்லிவிட்டு, அன்றுமுதல் அவன் பிரம்மநிஷ்டை பழகத்தொடங்கினான்.

(பக்கம் 662, 663.)

* * *

ஸித்திகள்.—ஹடயோகி ஒருவன் ஓர் மஹானிடம் சென்று தனக்கு ஆகாயத்தில் பறக்கசக்தி இருக்கின்றதென்றும், பூமியின் கீழ் அநேககாலம் கிடக்குந் திறனுண்டென்றும், ஜலஸ்தம்பம் தெரியுமென்றும், இதுபோன்ற மற்றைய சித்துவித்தைகள் தெரியுமென்றும் பெருமை பாராட்டினான். அப்பொழுது மஹான் அப்பா பக்ஷிகள் ஆகாயத்தில் பறக்கின்றன, புழுக்கள் பூமியின்கீழ் அதிக காலம் மறைந்து கிடக்கின்றன, மீன்கள் ஜலத்தில் வஸிக்கின்றன, இம்மா

திரி தாழ்ந்த ஜந்துக்களைப்போல் நடப்பதினால் என்ன பயன். கடவுளைப்போல நடக்க, கருணை முதலிய நற்குணங்களை விருத்திசெய், கர்வத்தையும் கோபத்தையும் அடக்கிவிடு என்று, மறுமொழி கூறினார். தாயுமானவரும்,

'சினமிறக்கக் கற்றாலும் ஸித்தி எல்லாம் பெற்றாலு
மனமிறக்க கல்லார்க்கு வாயேன் பராபரமே'

என்றுசொல்லி இருக்கிறார். ஆகையால் மனது தனது வாஸனைகள் யாவையும் இழந்து, அதன் உண்மை ரூபத்தை அடைதலே ஸகல ஸித்திகளையும்விட மேலானது என்பது இக்கதையால் எளிதில் விளங்கும்.

(பக்கம் 349.)

* * *

ஸ்ருஷ்டியின் ஸ்வரூபம்.--ஓரிரவில் மூன்று அபின்புகை பிடிப்பவர்கள்ஒரு ஆற்றங்கரையில் நின்றுகொண்டிருந்தார்கள். அக்கரையில் இருந்த ஒரு விளக்கு தண்ணீருள் ஓர் விளக்கு எரிவதுபோன்ற தோற்றத்தை உண்டாக்கியது. இம்மூன்று பேரும் புகைகுடிக்கவேண்டுமென்ற ஆவலுட னிருந்தார்கள். அவர்களில் ஒருவன் தண்ணீர் ஓரத்தில் நின்று கரியை பிரதிபிம்பத்திற்குநேராய் பிடித்துக்கொண்டு தன்கரித்துண்டு விளக்கில் பட்டிருப்பதாக எண்ணிக்கொண்டான்; ஏனென்றால் புகைக்குடிப்பவர்களுக்கு தூரத்திலிருக்கும் வஸ்துக்கள் தம் கண்கள்முன்னே குகிப்பனவாகத் தோற்றுவது வழக்கம். இம் மாதிரியாய்ச் சற்றுநேரம் நின்றபின் கரித்துண்டு பற்றிக்கொள்ளாதது கண்டு இந்தவிளக்குக்கு உஷ்ணம் போய்விட்டது என்றுஎண்ணி தன் தோழர்களிருக்குமிடம் சென்றான். அவர்களில் மற்றொருவன் முன்சென்றவன் மடத்தனத்திற்காக அவனைக் கடிந்துகொண்டு நல்ல கண்ணிருப்பவன் ஒவ்வொருவனும் விளக்கு தண்ணீரில் முழுந்தாளாழத்தி லிருக்கிறதென்று தெளிவாய்த் தெரிந்துகொள்வான் என்று சொல்லிக்கொண்டு தான்சொன்ன இடத்திற்குப்போய், கரி சீக்கிரம் பற்றி

விடும் என்ற பூரணநம்பிக்கையோடு கரித்துண்டை பிரதிபிம்பத்திற்கெதிராய்ப் பிடித்தான். ஆனால் சற்றுநேரத்தில், அவனும், தண்ணீரோடு சேர்ந்ததினால் நெருப்பிற்கு உஷ்ணம் போய்விட்டதென்றுஎண்ணித், திரும்பிவிடும்படி நேரிட்டது. உடனே மூன்றாவான் முன்சென்ற இருவர்களையும் கடிந்துகொண்டு நெருப்பு ஆற்றின் மத்தியில் இருப்பதாகச்சொல்லி கரித்துண்டைக் கையிலெடுத்துக்கொண்டு தண்ணீர் தன்கஷ்கத்தினளவு வருமளவும் சென்றான். அவன் குளிரினால் விறைத்துப்போமளவும் நின்றபோதிலும்கரியைப் பற்றவைக்காமல் திரும்பவேண்டியதாயிற்று. இம்மாதிரியேதான் பிரபஞ்சசிருஷ்டியையும் நாம் அறியும் விஷயமும்.

(பக்கம் 349, 350.)

*　　*　　*

அகங்காரம்.—முன்னொருகாலத்தில் வியாஸபகவான் குருக்ஷேத்திரம் வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அவர் காலடிச் சத்தத்தைக்கேட்டு அவர் வரும்வழியில் இருந்த ஓர் புழு பயந்து வெகு வேகமாக நகர்ந்து ஒதுங்கிச் சென்றது. இதைக்கண்ட உடன் அவர் ‘நாம் இந்த ஜந்துவை ஒரு பொருட்டாக எண்ணுகிறதில்லை. இது எவ்வளவு சிறிதாக நமக்குத் தோன்றியபோதிலும், இதற்கும் இதன் உயிர்வெல்லமாகவேதான் இருக்கின்றது! என்ன ஆச்சரியம்! பகவத்ஸ்ருஷ்டியின் மஹிமையே மஹிமை!’ என்று வியந்துகொண்டு, தமது ஞானதிருஷ்டியால் அந்த ஜந்துயார் என்று உற்று நோக்கினார். அத்தியாச்சரியம்! மஹாஞானிய நாரதமே அந்த ஜன்மம் அடைந்திருப்பதைக் கண்டார்! அப்பொழுது அந்தப் புழுவைநோக்கி, ‘ஓ நாரதபகவானே! உமக்கு ஏன் இந்தத் தாழ்ந்த ஜன்மம் வந்தது? இந்த நிலையை அடைந்தபின்பு உமக்கு ஏன் இந்த ஜன்மத்தைக் காப்பாற்றவேண்டும் என்ற துர்ஆசை உண்டாகிறது?’ என்றுகேட்டார். அதற்கு அந்தப புழு, ‘ஓ வியாஸபகவானே! ஓர் பாபம் செய்து நான் இந்த

நிலைக்கு வந்து விட்டேன். பகவன்மாயையின் சூக்ஷ்மத்தை என் என்று சொல்லுவேன்! இந்த ஜன்மத்திலிருந்தபோதிலும் என்னைப்பற்றி எனக்கு சிறந்த அபிப்பிராயம்தான். என் ஸுகதுக்கங்களே எனக்குப் பெரிதாகிவிட்டன. உம்முடைய திருஷ்டிக்கு நான் மிகத்தாழ்ந்தவஸ்துவாகத் தோன்றியபோதிலும், எனக்கு என்னைப்பற்றி அம்மாதிரியான எண்ணமேகிடையாது. இதனால்தான் என் உயிர் எனக்கு வெல்லமாக இருக்கின்றது,' என்றது. இம்மாதிரி ஓர்புழு தன்னைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கையில் மனிதராகிய நம்மிடம் அகங்காரம் குடிகொண்டிருப்பது ஆச்சரியமா? அணுமுதல் அண்டங்கள் பரியந்தம் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவஸ்துகளிலும் இந்த அகங்காரம் இருந்துகொண்டு தான் தொழிற்படுகின்றது. இந்த அகங்காரம் தான் பிரபஞ்ச வியாபாரம் எல்லாவற்றிற்கும் காரணம். இந்த அகங்காரம் எந்த தந்திரத்திலாகிலும் இந்தப் பிரபஞ்சத்தை விட்டு நீக்கப்பட்டால், இதன் உண்மை உருவாம் பரம்பொருள் மாத்திரம் தான் தனித்து நிற்கும். இம் மூடமான அகங்காரத்தை அடக்கி அப்பாற்பட்டு நிற்றல் நம்மவருள் அநேகருக்கு முடியாது. ஆதலால்தான் பத்ரகிரியாரும்,

'ஆங்காரமுள் அடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்'

என்று புலம்பினார்.

(பக்கம் 395.)

* * *

சாஸ்திரங்களில் மோக்ஷமார்க்கத்தில் நான்குபடிகள் இருக்கின்றனவென்றும் அவை கர்மயோகம், பக்தி யோகம், ராஜயோகம், ஞானயோகம் ஆகிய இவைகளே என்றும் கூறப்பட்டுள்ளது. இதில் ராஜயோகம் ஸித்தி முதலியவைகளை முன்புகொடுத்து, விதேஹம் மாத்திரம் தந்து மோக்ஷத்தைத் தரமுடியாத இந்த

ஸித்திகளிலேயே திருப்தியடைந்து நின்றுவிடாதவர்களுக்குப் பின்பு மோக்ஷம் கிடைக்கும்படி செய்தலால் அந்தப்படியை மாத்திரம் விட்டுவிட்டு மற்றையப் படிகளை நன்றாக விவரித்து ராஜம் அய்யர் வேதாந்த உல்லாஸத்தில் நன்றாக எழுதியுள்ளார். (இக்கருத்திற்கேற்பவே கைவல்ய நவனீதத்தில் ராஜயோகமார்க்கத்தை கௌணமாகக் கூறப்பட்டுள்ளது.) அதில் பரபக்தி அல்லது ஞானம் என்பதைப்பற்றி எழுதப்புகுமிடத்து அபர (சாதாரண) பக்தி மேல் நோக்கிப்போகும் முமூக்ஷுவுக்கு ஆதியில் அத்யாவசியகம் என்றும், அது இவ்வாறு பின்னர் மும்மூக்ஷுவினது புத்தியாலும் குரு உபதேசத்தாலும் பரபக்தி அல்லது ஞானமாக மாற்றப்படும் என்றும்கூறித் தாம் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளிடம் இவ்வாறு உபதேசம்பெற்று பக்தி நிலையிலிருந்து ஞானநிலைக்கு மாறினார் என்பதை கூடிய வரையில் நன்றாக வெளியிட்டிருக்கிறார். (வே. உ-பக்கம் 83-89 பார்க்க). இன்னும் இதுபோன்ற அத்யற்புத ரகசியங்கள் வேதாந்த உல்லாஸத்தில் ஏராளமாக நிறைந்து கிடக்கின்றன. இதை வாசிக்கும் ஆங்கிலம் தெரிந்த ஒவ்வொருவரும் அந்த ஆங்கிலநூல் நேரிட வாசித்து ஆனந்தித்து, ஆங்கலம் அறியாத தமது நண்பர்களுக்கு அதில் அடங்கியிருக்கும் அமிர்தமயமான அருள்வாக்கை எடுத்துக்கூறிப் பரவசமாகி பேரின்பம் அனுபவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ராஜம் அய்யருக்கு அநுபூதி விஷயத்தில் உள்ள மனோபாவங்களை முன்னரே மனம்மாறிய சருக்கம் 9-ம் பக்கத்தில் தொடங்கும் அடிக்குறிப்பிலும், உப

தேசம்பெற்ற சருக்கம் 24-ம் பக்கத்தில் தொடங்கும் அடிக்குறிப்பிலும், நன்றாக எடுத்துக்காட்டியாய் விட்டது. இங்கு அவரது அநுபவநிலையை நன்கு விளக்குவதற்காக கமலாம்பாள் சரித்திரத்தில் அவர் முத்துஸ்வாமி அய்யர் பிற்காலத்தில் அநுபவித்த ஞானானந்த வைபவத்தைப்பற்றிக் கூறியுள்ளவைகளை எடுத்து எழுதுவோம்.

'ஸர்வ வியாபகமாயும் நிறைந்திருக்கிற வாயுவானது எப்போதும் எப்படி ஆகாசத்தில் இருக்கிறதோ அப்படி ஸகல பூதங்களும் என்னிடத்திலிருக்கிறதாகத் தெரிந்துகொள்' என்றும், 'உலகம் யாவும் உயிர் பலவும் நானே சிறிதும் வேறில்லை' என்றும் வாக்குக் கொடுத்திருக்கும் பகவானுடைய மஹாவாக்கியத்தை விசாரணைசெய்து உலகெலாம் அலகைத் தேரெனத் தேர்ந்து,

> பூதநீயலை பொறிகளுமலையலை புந்தி
> எது நீயலை யிவற்றினை மயங்கியானென்னும்
> போதநியலை யென்றிவையனைத்தும் போக்கிச்
> சோதியாகிய பிர்ம்மமே நீ

எனச்சொன்ன குருபதேச விசேஷத்தால் பஞ்சகோசத்திரைகளைப் பிளந்து பூரணமாய் ஏகமாய் அசலமாய் அசரீரியாய் அநாதியாய் ஆப்தமாய் நித்திய நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப நிர்விஷயமாய் விளங்காநின்ற ஸச்சிதாநந்த ஸ்வரூபமாகிய ஆத்மாவைத் தரிசனம்செய்து, அகண்டபிர்ம்மாகாரமான விச்வரூப விருத்தியிற் பிரவேசித்து திரிபுடிரஹிதமான பிரம்மானந்தத்தில் மூழ்கி, ஆத்மக்ரீடை புரிந்து ஸமாதி நிஷ்டையில் நிர்வஹித்து ஸமாதியொழிந்த ஸமயங்களில் பகவானுடைய மாயாவிபூதியை வியந்து ஒளியிலே இருளிலே வெளியிலே மண்ணிலே தண்ணிலே மலையிலே கடலிலே கரையிலே ககனத்திலே மரத்திலே மரத்தினிலையிலே

கனியிலே காற்றிலே கற்றார் கல்லாரிலே கதியறியாக் கயவர் தம்மிலே, கடலன்ன ஜகமுழுதிலே,
நீயலால் பிறிது மற்றின்மை சென்று சென்றணுவாய்த்
தேய்ந்து தேய்ந்தொன்றாந் திருப்பெருந்துறையுறை
சிவனேயொன்று நீயல்லையன்றி யொன்றில்லை'

இல்லையில்லையெனத்தெளிந்து, உலக வியாபாரங்களில் புகும்பொழுது கோத்ததிலே குலையாது புதுமணம் புகுந்த நாரியர் போற்புக்கு ஆனந்தமாய்

'அச்சந்த விர்த்தாளென்றூதாது சங்கே
'யம்பல வாணனென்றூதாது சங்கே
'இச்சையளித்தானென்றூதாது சங்கே
'இன்பங்கொடுத்தானென்றூதாது சங்கே!
'இறவாமையீந் தானென்றூதாது சங்கே
'எண்ணம்பலித்ததென்றூதாது சங்கே
'ஊனே மறிவதென்றூதாது சங்கே
'உணர்வே பிரம்மமென்றூதாது சங்கே
'நானே அவனுமென்றூதாது சங்கே
'நானுவதில்லை யென்றூதாது சங்கே

எனப்பாடிப்பாடி ஞானானந்த வைபவஸாகரத்தில் மூழ்கியிருந்தார்.

(பக்கம் 305, 306.)

* * *

இவ்வளவு சிறப்புவாய்ந்த மஹான் ராஜம் அய்யர் என்பது இதற்குள் நண்பர்களே உங்களுக்கு நன்றாக விளங்கியிருக்கும். நீங்கள் ஒருவேளை 'இவர் இன்னும் கொஞ்சகாலம் இருந்திருப்பாராயின் எவ்வளவு சிறந்த உபகாரம் செய்திருப்பார்' என்று எண்ணமிடத் தொடங்கலாம். இது வீண் எண்ணமே. இதை அடிக்கடி எண்ணுவதை ஒழித்து தேகம் நழுவிய சருக்கமுடி

வில் கூறப்பட்டுள்ள இவர் சரித்திர ஸாரத்தை நன்ருக மனதில் வாங்கிக்கொண்டு, ராஜம் அய்யர் செய்துள்ள வேதாந்த உல்லாஸம், கமலாம்பாள் சரித்திரம் என்ற அரிய நூல்களை அடிக்கடி பாராயணம் செய்து ஆனந்தித்து, அவைகளில் காட்டியிருக்கிறபடி மோக்ஷமார்க்கத்தில் மனப்பூர்வமாக ஸ்வயஞானத்தோடு பாடுவீர்களாக.

ஓம்தத்ஸத்.

# அனுபந்தம்

## மனிதன்—அவன் தாழ்வும் ஏற்றமும்

‘பழகப்பழகப் பாலும் புளிக்கும்’ என்பது பழமொழி. இந்த அதிகப் பழக்கமே நமக்கு மிகுந்த விரோதியாக குறுக்கே நிற்கின்றது. இப்பிரபஞ்சத்தில் அதிக அற்புதமான வஸ்துக்களை நாம் அடிக்கடி பார்த்துக்கொண்டிருப்பதால்தான் அவைகளை நாம் கவனியாமலும், அவைகளின் ஸ்வரூபம் இவ்வாறு நுட்பமாயும் அற்புதமாயும் உள்ளது என்பதை உணராமலும் நமது காலத்தை வீணாகக் கழிக்கிறோம். ‘நம்முள் எத்தனைபேர் ஆகாயத்தை உற்றுநோக்கி அங்குள்ள அற்புதங்களைக் கண்டு ஆனந்திக்கக் கொடுத்துவைத்திருக்கிறார்கள்?’ என்று மிகுந்த இரக்கத்துடன் ரஸ்கின் என்ற ஓர் ஆங்கில ஆசிரியர் மனிதர்களை வினவுகிறார். இவ்வாகாயத்தை நாம்பிறந்ததுமுதல் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருப்பதால் இது என்றைக்கும் இப்படிதான் இருக்கும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டாக அதை நாம் உற்றுநோக்கி ஆனந்திக்காது நின்றுவிடுகிறோம். குழந்தைகள் ஆச்சரியத்துடன் புதிதாய் வந்தவர்களைப் பார்க்கின்றனவே ஒழியத் தமது தாய்மார்களை அவ்வாறு நோக்குவதில்லை. இதுபோலவேதான் நாமும் ஓர் புதிய நெசவு யந்திரத்தை எவ்வளவு ஆவலோடு பார்க்கிறோமோ அவ்வளவு ஆவலோடு அநேகாயிரம் அற்புத அண்டங்கள் நிராதாரமாகத் தொங்கிக்கொண்டு தமக்கு ஏற்பட்ட மார்க்கங்களில் நிலைமாறாது தொன்றுதொட்டு அலைந்துகொண்டிருக்கும் ஆகாயத்தை சற்றேனும் கண்ணெடுத்து நோக்குவதில்லை. இத்தகைய ஆகாயமானது நாம் பிறந்தகாலத்து இல்லாதிருந்து திடீரென்று பின்னர் நமது கண்முன் தோன்றி இருக்குமா

யின், நமது ஆச்சரியம், ஆவல் முதலியன கவிகளின் ஹிருதளில் குடிகொண்டிருக்கும் சுத்த கல்பனாசக்தியைப்போல கிளம்ப, நம்முள் சிறியாரிற் சிறியாராக இருப்பவர்கூட பயபக்தியுடன் தமது கையைச் சிரமேல்வைத்து சுத்த மனத்தோடும் அச்சத்தோடும் வேதமந்திரங்களைப்போன்ற ஸ்தோத்திரங்களை வாயாரத் தாமே கற்பிப்பர். இப்பொழுது நமக்கிருக்கும் மந்தநிலையைப் பாருங்கள்! ஆகாயமோ ஒரு நிமிஷம் இருந்ததுபோல மறுநிமிஷம் இருப்பதில்லை. அது ஸதா மாறிக்கொண்டும் மிகுந்த அற்புதத்தோற்றங்களை நிமிஷத்திற்கு நிமிஷம் காட்டிக்கொண்டும் இருக்கிறது. அதில் மேகங்கள் அற்புதமாய் மாறும் உருவங்களோடு ஸதா அங்கும் இங்கும் ஸஞ்சரிக்கின்றன; ஸூர்யோதய அஸ்தமனங்களோ வால்மீகி முதலிய மகாகவிகளாலும் வர்ணிக்கமுடியாத ஆடம்பரத்துடன் காணப்படுகின்றன; சந்திரனோ மிகுந்த ஜிலு ஜிலுப்போடு கூடிய வேணுநாதம்போன்ற இனிமையுடன் பிரகாசிக்கின்றனன்; அதில் ஓய்வு ஒழிவு இல்லாமல் காட்சிகள் ஸதா மாறிக்கொண்டேயிருக்கின்றன; இம்மாதிரியான விஷயங்களைப்பற்றி நமக்கு யாதொன்றும் தெரியாதிருந்தும், நம்முள் அநேகரது மந்தமான மனதில் ஆகாயத்தின் சிறப்பு பதியாமலே இருக்கின்றது. *

நாம் ஏன் இப்பொழுது ஆகாயத்தைப்பற்றிப் பேசவேண்டும்? நமக்கும் அதற்குமுள்ள ஸம்பந்தத்தை பஞ்சாங்கம், காற்றின் நிலைமையைக் கூறும் விளம்பரம் முதலியன நன்றாகக்காட்டிவிடுகின்றன. இது நமக்குப்போதும். நம்மோடு அதிக நெருக்கமாக இருக்கும் விஷயங்களைப்பற்றி விசாரிக்கப் புகுவோம். அதாவது மனிதனை எடுத்துக்கொள்ளுவோம். நமக்கு மனிதர்கள் ஸம்பந்தத்தைவிட்டு நீங்குதல் மிகக்கஷ்டம். நாம் தொழிலில் இருந்தாலும் ஸரி அல்லது அது இல்லாமல் இருந்தாலும் ஸரி எப்பொழுதும் மனிதர் மத்தியி

* 67-ம் பக்கம் பார்க்க.

லேயே• பழகிவரவேண்டியிருக்கிறது. கூடிவாழ்தல், ஸ்நேகம், அன்பு ஆகிய இவைகளையே நாம் எக்காலத்தும் விரும்புவது. இப்படி நாம் ஸதா விரும்பும் மனிதனுடைய உண்மையான ஸ்வரூபத்தைப்பற்றி நமக்கு என்ன தெரியும்? ஒன்றும் தெரியாது! மனிதன் பிறக்கிறான், பின்பு அவன் இறக்கிறான், அவன் எங்கிருந்து வருகிறான் எங்கே பின்னர் போகிறான் என்பதே நமக்குத் தெரியாது. ஒருவன் கவியாகவும், மற்றொருவன் போர்வீரனாகவும் இருக்கிறான். இப்படி இவர்கள் இருக்கக் காரணம் இன்னது என்பதும் நமக்குத் தெரியாது. மனிதன் உயிரோடிருக்குங்கால் மூச்சுவிடுகிறான், அவன் இறந்தபின்பு மூச்சு நின்றுவிடுகின்றது. மூச்சுவிட்டுக்கொண்டிருந்தது யாது, மூச்சில்லாதுகிடப்பது யாது, நாம் பிறக்கக் காரணம் என்ன, நாம் எங்கேபோகிறோம், மரணத்தோடு நமது வாழ்க்கை முடிந்ததா, நாம் ஆத்மாவா, அனாத்மாவா, மனமா, இந்திரியங்களா, அல்லது ஒன்றுமே இல்லையா என்ற இந்த சங்கைகளுக்கு எந்த தேகதத்வசாஸ்திரத்தாலும் தக்க விடைகொடுக்க முடியாது. இம்மாதிரியான பெரிதாயும், ஆழ்ந்ததாயும் உள்ள ரகஸ்யங்களால் நாம் சூழப்பட்டிருக்கிறோம். இதை அறிய நாம் எவ்வளவும் முயன்றாலும் நம்மால் ஆவதில்லை. இம்மாதிரியான இருளில்நாம்தத்தளிக்கிறோம் என்பதை உணர்ந்துதான் கிதே என்ற ஜர்மன் கவி 'நாம் எப்பொழுதும் விடாது அதிநுட்பமான விஷயங்களோடேயே ஸம்பந்தப்பட்டிருக்கிறோம். மனிதன் ஓர் பதருக்கு ஸமானம், அவனுக்கு உலகத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது, தன்னைப்பற்றியோ அவனுக்கிருக்கும் அஞ்ஞானத்திற்கு அளவேஇல்லை' என்றார். இதுபோல 'இவ்வுலகமாம் பெரிய யந்திரத்தை அளந்தறிவது அஸாத்யம். அதில் இருக்கும் காரியகாரண ஸம்பந்தத்தை முழுவதும் அறியமுடியாது. நாம் இன்னார் என்பதும், நமது ஸ்வரூபம் இன்னது என்பதும், நம்மால் அறியமுடியாது' என்றார் ரூஸோ என்ற

பிரஞ்சு நூலாசிரியர். இவைகள் அற்புதவாக்கியங்கள், நாம் முன்னர் எடுத்து விவரித்த அதிபழக்கத்தால் உண்டாகும் மந்தகுணத்தை சிதற அடித்த மணிதரது வாக்கியங்கள். ஸமுத்திரத்தில் மீனுக்காக அலைகளை எளிதில் தாண்டிச்செல்லும் செம்படவனுக்கு ஸமுத்திர ஒலியின் காம்பீரியமும் * அதில் உண்டாகும் புயல்களின் காம்பீரியமும் எவ்வாறு தோன்றாவோ, அவ்வாறு ஓயாது ஸமுத்திர அலைபோல மோதிக்கொண்டிருக்கும் விஷயங்களைக் கவனியாது, அவைகட்கு அப்பால்பட்டு நிற்கும் வழிதோன்றாது அதிகப் பழக்கத்திற்கு ஆளாகி கெட்டுப்போகும் மானிடர்கள் நிறைந்த இவ்வுலகில், பிரபஞ்ச வைசித்திரியம், அதன் ரகஸியத்தின் பெருமை, அதைப் பூர்ணமாக அறியமுடியாது என்பவைகளையும் நமது அறிவின் சிறுமையையும் உள்ளபடி உணரும் சக்திவருவதே ஓர் சிறந்தகுணம். இது கிடைப்பது அநேக ஜன்மங்களிற்செய்த புண்யபலன் என்றே சொல்லவேண்டும்.

இவ்வாறிருப்பினும் நாம் பெரியவர்கள் வம்சத்திற் பிறந்தவர்கள். அவர்கள் கண்டு அறிந்து அனுபவித்த ஞானம் எல்லாம் நமக்கு ஸஹாயமாகவே இருக்கின்றன. அவைகளின் ஸஹாயத்தின்பேரில் நமது சிற்றறிவிற் கெட்டியவரையில் அஹங்காரம் நிறைந்த விசித்திர ஜந்துவாகிய மனிதனது ஸ்வரூபத்தைப்பற்றி விவரிப்போம். கிருஷ்ண பரமாத்மா பகவத்கீதையில் (3-ம் அத்தியாயம் 42-ம் சுலோகத்தில்)

"இந்தியங்கள் மேலனவாம் என்றுரைப்ப இந்தியத்தில்
சிந்தைமிக மேலதனிற் சீருடைத்து—புந்திதான்
மன்னியவப் புந்தியினும் மாண்புடையான் அன்னோனே
கன்னவிலும் தோளாய் நீ காண்."

என்று உபதேசித்திருக்கிறார்.

மனிதன் ஸகல ஜந்துக்களிலும் மேலான ஜந்து என்றும் 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றும், பெரியோர்கள்

* 74, 75-ம் பக்கங்களைப் பார்க்க.

சொல்லுகிறார்கள். மனிததேகத்தின் ஸ்வரூபத்தை நோக்கில் இதை நாம் ஒப்புக்கொள்ளவே முடியாது. மனிததேகம் எவ்வளவு விசித்திரமாக இருந்தபோதிலும் மனிதனைவிட அதிக பலம், அழகு, காம்பீர்யம் முதலிய சிறப்புவாய்ந்த சரீரங்களை உடைய ஜந்துக்கள் அநேகம் உலகில் காணப்படுகின்றன. ஹக்ஸ்லி என்ற பிரகிருதி சாஸ்திரி ஜந்துக்களுள் குதிரையே நல்ல தேகக்கட்டு உடையது என்று அபிப்ராயப்படுகிறார். நல்ல கொம்பன் யானைக்கு இருக்கிற காம்பீர்யம் நல்ல கல்ல ஜெட்டிக்குக்கூட இல்லை. சிங்கத்திற்கு உள்ள பார்வை நல்ல வம்சத்திற் பிறந்த அரசனுக்குக்கூட இல்லை. சிறந்த காளைமாட்டின் நடையானது போர்வீரனது நடையைப் பழிக்குந்திறனுடையது. கானமயிலாடுவது கண்குளிரும் காட்சி. ரம்பைக்குக்கூட பஞ்சவர்ணக்கிளியின் அழகு இருந்திராது. பறக்கசக்தியில்லாத மனிதனைவிட வானம்பாடி மிகுந்த ஸ்வதந்திரம் உடையது. நல்ல ஸங்கீத ஸ்வரத்தைக் கேட்டு படமெடுத்தாடும் கிருஷ்ணஸர்ப்பம் தெய்வத்தன்மை வாய்ந்தது. ஆகாயத்தில் அசையாது உருவிச்செல்லும் கருடப்பட்சியும் அவ்வாறு என்பதற்கு என்ன ஸந்தேகம்! ஆகையினால் தேஹவிஷயமாகப் பார்க்குங்கால் மனிதன் மற்றைய ஜந்துக்களைவிட சிறப்புவாய்ந்தவன் அல்லன். யோசிக்குங்கால் மற்றை ஜந்துக்களைவிட மனிதன் ஆபாஸமான ஜந்து என்றே சொல்லவேண்டும். ஷோபன்ஹார் என்ற ஜர்மன் தத்துவசாஸ்திரி அநேக ஜனங்களது முகங்கள் மந்தமாகக் காணப்படுகின்றது என்கிறார். பட்டணத்துப் பிள்ளையார் தேகத்தினால் விளையும் கஷ்டத்தைப் பின்வருமாறு கூறுகிறார்.—

" மானார் விழியைக் கடந்தேறிவந்தனன் வாழ்குருவும் [லை
கோனாகி யென்னைக் குடியேற்றிக்கொண்டனன் குற்றமில்
போனாலும் பேறிருந்தாலு நற்பேறிது பொய்யன்றுகா
ணானாலுமிந்த வுடம்போ டிருப்பது அருவருப்பே."

ஆகையால் மனிதனுக்கு சிறப்பு அவன் தேஹத்தால் உண்டாவதில்லை என்பது விளங்கும். அவன் மேன்மையும்,

நிமிர்ந்த முகத்தால் அவனுக்கு உண்டாகும் காம்பீர்யமும் முக்கியமாக அவனுள் ஆடி ஒளிரும் பரஞ்சோதியின் சிறப்பால் உண்டாவனவே ஒழிய வேறில்லை.

மனிதனது சிறப்பு தேஹத்தைவிடச் சிறந்தனவாகிய இந்திரியங்கள் மனஸ் ஆகிய இவைகளால் உண்டாகின்றதோ என்பதை விசாரிக்கப் புகுவோம். இந்திரிய வ்யாபாரங்களை மாத்திரம் நாம் தனியாகப் பார்த்தால் மனிதன் மற்ற ஜந்துக்களைவிட மிகத் தாழ்ந்தவனாகப் போகிறான். இதனாலேயே ஷோபன்ஹார் என்பவர் மனிதன் எல்லா ஜந்துக்களையும்விட மிகத் தாழ்ந்தவன் என்றே ஸாதிக்கிறார். உற்று நோக்குங்கால் புலி காடி முதலியவைகள் கூட நல்லவைகள் என்ற மதிப்பை நமக்கு உண்டாக்கும் குணம் வாய்ந்தவர்கள் மனிதர்களுள் அநேகர் காணப்படுகிறார்கள். புலிக்கும் காடிக்கும் இயற்கையாக ஏற்பட்டுள்ள இரைகள் உண்டு. புலி ஒருநாளும் காக்கையைப்பிடிக்காது, காடி பூனையைக் கொல்லாது, மனிதனுக்கோ அவன் சண்டைவிஷயங்களில் இம்மாதிரியான எல்லையே கிடையாது. ஆடுகள், மாடுகள், இன்னும் பூமியில் உலாவும் மிருகங்கள் ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகள் ஸமுத்திரத்திலுள்ள மீன்கள் இன்னும்ஸமுத்திரத்தின்வழியாக ஓடும் ஜீவஜந்துக்கள் ஆகிய எல்லாம் மனிதனுக்கு விரோதிகளாக ஏற்படலாம். எறும்புமுதல் மனிதர்பரியந்தம் உள்ள ஜீவராசிகளில் எதைத்தான் மனிதன் தந்நயம்கருதி வருத்தாது விடுகிறான்? இந்திரிய வியாபாரக்குழப்பத்தில் மேலான உறவுகள் எல்லாம் சிதறிப்போகின்றன. தாயாதி என்ற நெருங்கின உறவைக்காட்டும் ஓர்பதம் விரோதி என்ற பொருளைக் கொடுக்கும் நிலைக்குவந்துவிட்டது. இந்திரிய வியாபார நிலையிலிருந்து ஷோபன்ஹார் பின்வருமாறுகூறுகிறார். 'நன்னடக்கை ஒழுங்கின்படி மனிதன் நிலை பொதுவாக இவ்வாறுஇருக்கின்றது என்பதை அறியவேண்டுமோ? இதற்கு மனிதன் அதிர்ஷ்டத்தை விசாரித்தால் போதும். அதுயாது எனில், அடங்கா

ஆவல், இழிவு, கஷ்டம், துக்கம், மரணம் ஆகிய இவைகளை மனிதர்கள் பொதுவாக உபயோகமற்றவர்களாக இல்லாவிட்டில் அவர்கள் இம்மாதிரியான கெட்ட அதிர்ஷ்டத்திற்கு ஆளாகி இருக்கமாட்டார்கள்.' மேலும் மனிதன் தான் செய்யும் செய்கைகளுக்கு உத்தரவாதி. அவனுக்கு இயற்கையான விரோதங்கள் இல்லை, அவன் புத்தியை அவன் இஷ்டப்படி உபயோகிக்கும் திறமுடையவன், என்ற இவ்வுண்மைகளைப் பற்றி ஆலோசிக்குங்கால் அவனை ஜீவஜந்துக்களுள் எங்கு வைப்பது என்று பலமான சங்கை உண்டாய்விடுகின்றது. சிலந்தியும், எறும்பும் அநேகருக்கு நற்போதனைகளைச் செய்திருக்கின்றன. தேனீக்களின் ஸங்கமானது இங்கிலாந்திலுள்ள ஆளும்ஸங்கத்தைப் பழிக்கும் திறனுடையது. பசுவின் ஸாத்மீகம் பழமொழியாகப் போய்விட்டது. பாம்புகள் தமக்குள்ள ஸங்கீத அனுபவசக்தி, புஷ்பங்கள் வாஸனை முதலியவற்றை அனுபவிக்கும் சக்தி ஆகிய இவைகளால் கவிராயர்களைப் பழிக்குந் திறனுடையவையாகின்றன. மனிதனது அளவிடமுடியாத, ஸ்வயநயம் கருதல், வீண்பெருமைபேசல், கொடுமை, தற்புகழ்ச்சி, விளையாட்டுத்தனம் ஆகியஇவைகளைப்போன்றபிசாசகுணங்களைநோக்கி, ஆழ்ந்து யோசிக்கும் திறனுடைய ஹாம்லத்தைப் போன்றவர் "காலகதியால் உண்டாகும் கஷ்டநிஷ்டூரங்களையும், அடக்கியாள்பவரது அக்கிரமத்தையும், மதம்பிடித்தவர்களால் உண்டாகும் மானபங்கத்தையும், வெறுக்கப்பட்ட காதலின் வெந்துயர்களையும், நியாயஸ்தலங்களில் நேரிடும் காலக்கழிவையும், அதிகாரிகளின் கர்வத்தையும், அயோக்கியர்களிடமிருந்து யோக்கியர்கள் பொறுமையுடன் அனுபவிக்கும் அவமானங்களையும் யாரால் பொறுக்கமுடியும்?" என்று நன்றாகத்தான் கேட்பார்கள். பிரான்ஸு தேசத்திய நூலாசிரியர் ஒருவர், 'தனது ஸமூக வாழ்க்கையில் சிற்சில ஸமயங்களில் தற்கொலை செய்துகொண்டால் நலமாக இருக்கும் என்ற எண்ணம் வந்திராத மனிதன் உயிரோடு வாழ்ந்தென்ன

பயன்'? என்று சொல்லுகிறார். 'வாடைக்காற்றே தாவுடகிட்ட வீசுவாய், நன்றிகொல்வோர் கொடுமையினும் நின்கொடுமை அஞ்சத்தக்கதல்ல' என்ற வாக்கியத்தில் அடங்கியிருக்கும் உண்மை அனுபவித்தால்தான் விளங்கும். மனிதன் சும்மாவிருக்கக் கற்றுக்கொண்டானாகில் உலகில் உள்ள அரைவாசி துக்கங்களும் பறந்தோடிப்போம் என்றார் பாஸ்கல் என்ற பிரகிருதிசாஸ்திரி. மனிதனுக்கோ அவ்வாறிருக்க முடியாது. இதைப் பிரகாரம் அவன் ஸதா கர்மங்களைச் செய்துகொண்டு பிறப்பு இறப்பு ஆகிய இவைகள் வளர்வதற்கு வேண்டிய வித்தை விதைத்துக்கொண்டே இருக்கின்றான். சிங்கத்தினது கோபமும், யானையினது மாறாப்பகையும், புலியினது கொடுமையும், பாம்பின் விஷமும், நரியின் தந்திரமும், பன்றியின் ஆபாஸ குணங்களும், எலியின் கெட்ட குணமும் மனிதனிடம் குடிகொண்டிருக்கின்றன. சிற்சில ஸமயங்களில் மனிதன் முற்கூறிய ஜந்துக்களைவிட அதிகமாகவும்போய் நடந்துகொள்ளுகிறபடியால் அவன் ஸ்திரமாயும் வர வர பலமாகும் குணமுள்ளதாயும் ராகத்துவேஷங்களாலாகியதாயும் உள்ள வலையை சிலந்தி தன் வலையை உண்டாக்குவதைப்போல ஸ்வபாவமாகவே உண்டாக்கிக்கொண்டு வருகிறான்.

* மனிதனது அறிவின் ஸ்வரூபத்தை நோக்குங்கால் அவன் அநேக ஜீவராசிகளைவிடச் சிறப்பு வாய்ந்தவனாகக் காணப்படுகிறான். இதில்தான் அவனுக்கு ஏற்றம் சற்று காணப்படுகின்றது. தனது கணிதவிஷயங்களில் மனத்தை இழந்து இருந்த நியூடன் என்பவர் பிரபஞ்ச விஷயங்களை விட்டு அப்பாற் சென்றவர். ஆற்றிலிருந்து எழுந்து தான் நிர்வாணமாக இருப்பதைக்கூட அறியாது, மனதில் ஓர் அற்புத விஷயத்தைக் கண்டு அறிந்து வெளியே ஓடிவந்த ஆர்க்கிமீடிஸ் என்ற பிரகிருதி சாஸ்திரி மனிதரூபமான கந்தர்வன்

* [மனிதனது புத்தியில் அறியும் சக்தியையுடைய அறிவு அதை விருத்திபண்ணும் சக்தியை உடைய கற்பனாசக்தி ஆகிய இரண்டு பாகங்கள் உண்டு.]

என்பதற்கு என்ன ஸந்தேகம்! பீஸோல் மலைச்சிகரத்திலிரு ந்து சந்திரமண்டலத்தை தமது தூரதிருஷ்டிக்கண்ணுடி மூல மாகப் பார்த்து ஆனந்தித்த காலிலியோ என்ற வான சாஸ் திரி ஓர் வனதேவதை என்பதற்கு என்ன ஸந்தேகம்! ஆனால் இவ்வாறு அறிவில் ஈடுபட்டு பிரபஞ்சத்தை மறக்கும் மஹான் கள் அந்தோ! நம்முள் எவ்வளவு அபூர்வமாகக் காணப்படு கிறார்கள். மிஞ்சி நிற்கும் ஏராளமான ஜனங்கள் என்னும் பாலைவனத்தோடு ஒப்பிட்டால் இவர்கள் எவ்வளவு அபூர்வம்! ஒவ்வொருவனுக்கும் அறிவு உண்டு. அது இந்திரியவியாபாரங்க ளோடு பேதாபேதமின்றிக் கலந்திருப்பதால் அது அவனை வெ குகாலம் காப்பாற்றுவதில்லை. அது பிரபஞ்ச விஷயங்களா கிய கொடிய ஸமுத்திரத்தில் இடைவிடாது அவனைத் தத்தளிக்கச் செய்யும் புயலாக ஏற்படுகின்றது. மனி தன் அடைந்திருப்பவைகளுள் அறிவு மிகச் சிறந்ததே. ஆனால் வக்கீல் வியாபாரி இவர்கள் போன்ற அநேகரிடத்தில் அது சீர்குலைந்து காணப்பட்டு பொதுவாகவும், சிறப்பாக வும் ஜனங்களுக்கு கெடுதலாக முடிகின்றது. இவ்வறிவால் நமக்கு 'ஆகாயத்தில் வாணிபம் நடாத்தவும், மலைகளைப் பிளக்கவும், ஸமுத்திரத்தை அடக்கவும், மின்னலை உண்டாக் கவும், ஸூர்யனை நிறுக்கவும்' சக்திகள் உண்டாகலாம். ரேனன் என்ற ஆசிரியர் கூறுவதுபோல பிரபஞ்சமே கடவு ளாகிய தனது முடிவைநோக்கி இயற்கையாகவே ஸ்திரமாக வும் உண்மையாகவும் போகின்றது என்பது உண்மைதான். ஆதலால் பிரபஞ்சமானது ஸதா முன்நோக்கி மாறுதல் அடை ந்துகொண்டே நடக்கட்டும்; நாம் இதனோடு போகுங்கால் மறவாது அறிவிற்கு தேவதையாகிய ஸரஸ்வதியை ஸ்தோத் திரம் செய்வோம்.

நமது பிரபஞ்ச அறிவு விருத்தியாகி நாம் மேலானநிலை யை அடையுங்கால் நமது நிலை எவ்வாறாகின்றது என்பதை நோக்குவோம். முதலில் தண்ணீர் என்ற ஓர் வஸ்துவை

இப்பொழுது பிராணவாயுவும், ஜலவாயுவும் சேர்ந்த சேர்க்கை என்கிறோம். ஆனால் இவ்விரண்டு வாயுவும் எத்தன்மையது என்பதை யாரால் அறியமுடியும். ஜந்து தத்வசாஸ்திரம் பூததத்வசாஸ்திரம், தேகதத்வசாஸ்திரம், வானசாஸ்திரம், சக்திதத்வசாஸ்திரம், வஸ்து தத்வசாஸ்திரம் ஆகிய ஸகல பிரகிருதிசாஸ்திரங்களிலும் நமது அறிவுக்கு எல்லை உண்டு, அதைத்தாண்டி அறிய நமது அறிவிற்கு சக்தியே இல்லை. இந்த சாஸ்திரங்களில் நாம் பிரவர்த்தி செய்துகொண்டு போகப்போக நமது அறியாமை அதிகமாகப் புலப்படத் தொடங்கும். ஸ்ருஷ்டிரகஸியத்தின் பெருமை அதிகமாக விளங்கும். இதனாலேதான் உலகத்தை முற்றும் உணரவேண்டும் என்ற பேராவலோடு அறியப்புகுந்து வெகுகாலம் விடாது முயற்சித்தபின்பு சிறந்த தத்வசாஸ்திரியாகிய காண்ட் என்பவர் பிரபஞ்ச விஷயங்களை முற்றும் உணரமுடியாது என்றார். இது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டதல்ல. முன்னரே ஐரோப்பாவில் ஸாக்ரடீஸ் என்ற மஹானாலும் நமது பரத கண்டத்தில் சங்கராசாரியர் என்ற மஹாபுருஷராலும் மிகுந்த வணக்கத்துடன் இவ்வுண்மை வெளியிடப்பட்டது. நியூடன் 'நான் அளவிட்டு அறியமுடியாத ஸாகரத்தின்கரையில் சிப்பி முதலியவைகளை பொறுக்கி ஆனந்தித்துக்கொண்டிருக்கும் குழந்தைக்கு நிகரே ஒழிய வேறில்லை' என்று சொல்லிய வார்த்தை வாசாவான அவை அடக்கமல்ல. நான் ஒருதுளி ஜலத்தை எடுத்துக்கொண்டு அதை ஜலம்என்று சொல்லிவிட்டு சும்மா இருக்கிறேன். டார்வின் என்ற பிரகிருதிசாஸ்திரி அதை சிறுகாகிதத்துண்டில் இழுத்து அதில் உண்டாகும் மாறுதலைக் கண்ணுற்று ஆச்சரியம் அடைகிறார். டின்டெல் என்ற பிரகிருதிசாஸ்திரி அதை நிறுத்துப் பார்த்துவிட்டு ஓர் பூதக்கண்ணாடியால் அதை பரிசோதிக்கிறார்; என்ன ஆச்சரியம்! அதனுள் அநேக ஜந்துக்கள் பூர்ணஜீவனோடும், உணர்ச்சியோடும், சுறுசுறப்போடும் மனிதன் தனது

தொழிலை எவ்வளவு ஆவலுடனும் ஸ்வதந்திரத்துடனும் நடத்துகிறார்களோ அவ்வாறே தமது தொழிலையும் நடத்திக்கொண்டிருக்கின்றன. பாவம்! டின்டேலது மனம் ஆச்சரியத்தாலும் பயத்தாலும் ஸ்தம்பிக்கிறது. உடனே அந்தத் தண்ணீர்த்துளியை நழுவவிட்டுவிட்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கி விடுறார். அந்தத் தண்ணீர்த்துளியை அறியும் விஷயத்தில் நானாவது டர்னராவது, டின்டேலாவது கொஞ்சங்கூட முயற்சிக்கவில்லை; ஏனெனில் அதை நம்மால் அறியவேமுடியாது. இது ஸத்யம். இது நமக்கு திருப்திகரமான முடிவாக இல்லாவிடினும் உண்மை என்பதற்கு ஸந்தேகமேயில்லை.

ஆதலால் அறிவுவிஷயத்தில் நாம் மற்றைய ஜந்துக்களை விட ஏற்றமுடையவர்களாக இருந்தபோதிலும், ஒவ்வொரு இடத்திலும் ‘எம்மால் பூர்த்தியாக ஒன்றையும் அறியமுடியாது’ என்று நமக்கு இடைவிடாது தோன்றுவதால் நாம் சிறந்த ஜந்து என்று பெருமை பாராட்ட நமக்கு இடமே இல்லாமல்போகிறது. அப்படிப் பாராட்டினால் அதை வீண் பெருமையென்றே சொல்லவேண்டும். நம்மைச்சுற்றி இருக்கும் வஸ்துக்களின் ஸ்வரூபம் இத்தன்மையது என்றும், அவைகளுக்கு இவ்வளவு சக்தியுண்டென்றும், ஆகாயத்தில் தொங்கும் அண்டகோளங்களின் ஸ்வரூபம் இப்படிப்பட்டது என்றும் நம்மால் அறியமுடியவில்லை. நாம் மூச்சுவிடும் காற்று நாம் நடமாடிவரும் பூமி, ஆகாயத்தில் தொங்கிக்கொண்டு தமது பிரகாசம் முதலியவைகளால் மனிதனுக்கு அவனது சிறுமை தாழ்வு முதலியவைகளை இடையறாது எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கும் நக்ஷத்திரங்கள் ஆகிய இவைகளைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் பிரபஞ்சம் அளவிட முடியாதது என்றும், நமது பூகோளத்தைப்போல கணக்கிடமுடியாத அநேக கோளங்கள் அதனுள் அடங்கி இருக்கின்றன என்றும், ஸ்ருஷ்டிமுழுவதும் வாக்கிற்கு எட்டா காம்பீர்யத்தை உடையதென்றும், நமது அற்பமான தேகத்

தோடும் இழிவான இந்திரியங்களோடும், மிகக் குறைந்த சக்தி வாய்ந்த அறிவோடும், கெட்டகுணம், வீண்பெருமை பேசல், அறியாமை ஆகிய இவைகளோடும் கூடிய நாம் மிகத் தாழ்ந்தவர்கள் என்றும் நமக்கு நன்றாகத் தெரியவரும். அளவிட முடியாததாயும், சக்திவாய்ந்ததாயும் உள்ள இப்பிரபஞ்சத்தில் நாம் அணுக்கள்—பரமாணுக்களே ஒழிய வேறில்லை. முற்காலத்தில் மூடத்தனமாக மனிதனே எல்லாவற்றிற்கும் மத்தியஸ்தானமென்று எல்லோரும் எண்ணியிருந்தனர், ஆனால் இந்த விசாரணையின்பேரில் அவன் ஸாரமற்றவனாகி இருந்த விடமே தெரியாதவனாகப் போய்விடுவான்.

புத்தியின் மற்றையப் பாகமாகிய கற்பனாசக்தி என்ற ஓர் சக்தி மனிதனிடம் இருக்கின்றது. அது தான் மனிதனது சிறுமை எல்லாவற்றையும் அகற்றும் திறனுடையது. சிறுமைநிறைந்த மனிதனிடம் இச்சக்தி இருப்பது விஷம் நிறைந்த கிருஷ்ண ஸர்ப்பத்தினிடம் நாகரத்னம் இருப்பது போலாகும். மதிப்புக்கடங்காத இச்சக்தியால் பிரபஞ்சத்தை ஒருவாறு அளவிடலாம். ‘கடவுளது வாக்குமுதலிய எல்லாவற்றிலும் நீ (கற்பனைசக்தி) தங்கு தடையின்றி எளிதில் செல்லும் திறனுடையாய். இது மாத்திரம் அல்ல கடவுளது ஸ்ருஷ்டிக்கப்புறமும் நின் நாட்டம் உண்டு.’ என்றார் ஓர் கவி. ஷெல்லி வேர்ட்ஸ்வர்த்து முதலிய சுத்த கற்பனை விஷயம் நிறைந்தவர்களது கவிபாடும் திறமையானது இந்த கற்பனைசக்தியாகிய செடியில் உண்டாகும் அற்புதமான புஷ்பம். பிரபஞ்சத்தை முற்றுமுணர நம்மால் முடியாது என்பது உண்மையாயினும், அதை நாம் உள்ளபடி அனுபவித்து ஆனந்திக்கும் சக்தி நமக்கு உண்டு. ‘பிறரால் அறியக்கூடிய விஷயங்களானாலும் ஸரி, அறியக்கூடாத விஷயங்களானாலும் ஸரி அவைகளை அனுபவித்து ஆனந்திப்பதிலேயே உண்மையான கவிராயர்கள் திருப்தி அடைவார்கள்’ என்றார் வேர்ட்ஸ்வர்த். (இதுபோலவே நமது கவிகளும் ‘புத்தியா

லறியெரிணைப் புராணனே பக்தியாம் வலையிற்படுத்து' என்ருர்கள்.) ஷெல்லி என்பவர் அவரது சுத்த கற்பனை நிறைந்த சிற்சில பாடல்களில் ஆகாயத்தை அளவிட முயலுகிருர். இது போதாதென்று தமது கற்பனுசக்தியை பூர்ணமாக உபயோகித்து 'ஆகாயம் என்ருல் என்ன? அது பனித்துளிபோன்றதுதானே!' என்ருர்.

இதுதான் சிறந்த கற்பனு சக்திவாய்ந்த கவிதையின் ஸ்வரூபம். உலகக் கவலைகளை மறந்து, வானம்பாடியானது அளவிடமுடியாத ஆகாயத்தில் பறந்தோடிப்போவதுபோல, வெளியேறிப்போய்அந்தபரவெளியேதானுகிச ற்றுகிற்குந்திறனுடைய மனத்தை உடையவர்கள் மனிதர்கள் என்பதை இந்த கற்பனுசக்தி பேசாமல் ஆனந்தகரமான அனுபவமூலமாகக் குறிப்பிக்கின்றது. இதில் ஈடுபட்டிருக்குங்கால் மனிதனுக்கு யாதொரு தடையும் ஏற்படுவதில்லை. இம்மாதிரி பரம்பொருளை நோக்கிப் புறப்படும் மனதை எல்லை கட்டித் தடுக்கவல்லது ஒன்றும்இல்லை. ஆதலால் ஓ மனமே! உனது இழிவானபந்தம் சிதறிப்போமளவும் உறங்கி உறங்கி விடாது பாடிக்கொண்டிரு. ஏனெனில் இங்கு நீ மோக்ஷமார்க்கத்திற்கு வந்துவிட்டாய், பரம்பொருளது திவ்யஸ்தானத்தருகில் வந்துவிட்டாய். அவர் உனது முயற்சியைக்கண்டு ஸந்தோஷித்து உனது வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருக்கிருர். இந்த விஷயத்தில் மனிதனைவிடச் சிறந்த ஜந்து எங்குதான் இருக்கின்றது? அவன் இங்குதான் அளவிடமுடியாத சிறப்பிற்கு ஆளாகிருன்.

இங்குகூட மனிதனது ஏற்றம்முழுவதும்வெளியாகிறதில்லை; ஏனெனில் கற்பனுசக்தி ஸுகத்தைபும் துக்கத்தையும் கொடுக்கின்றது. இது பிரபஞ்சத்தினது ஏற்றத்தையும் மனிதனது தாழ்வையும் உள்ளபடி காட்டிவிடுகின்றது. மேலும் உலகில் ஸாதாரணமாக ஈசுவர ஸ்ருஷ்டியில் அடிக்கடி ஏற்படும் கோடைநாள், பாலைவனம், அசுத்தமான குளம் முதலிய

வஸ்துக்களிடம் இந்தசக்தி நமக்கு அன்பு உண்டாகும்படி செய்யும் திறனுடையதல்ல. ஆதலால் யோசிக்குங்கால் கோயிலுக்குப்போகும் வழியில் தங்கிநிற்க ஏற்பட்டிருக்கும்மண்டபம் போல இது மோக்ஷமார்க்கத்தில் ஏற்பட்டுள்ள ஓர் களைப்பு நீங்கும் ஸ்தானமே ஒழிய முழுவதும் ஏற்றமான முடிவல்ல.

கற்பனை சக்தியினால் விளையும் ஆனந்தத்தைவிட மிகவும் ஏற்றமான ஆனந்தத்தை அனுபவிக்க பிறவியிலேயே மனிதர்களுக்கு பாத்யதை உண்டு. எந்நாளும்மாறாத ஆநந்தத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதும், நிலவு பட்டுப்போற்காயும் இரவைக் கண்டு ஆனந்திப்பதுபோல் மிகுந்த தாபமான பகலைக்கண்டு ஆனந்தித்துக்கொண்டிருப்பதும், மனிதரது ஸத்கிருத்தியங்களையும்துஷ்கிருத்தியங்களையும்கண்டு மனம்கலையாதிருப்பதும், நல்ல அழகிய ஸூர்யாஸ்தமனத்தைக்கண்டு ஆனந்தபாஷ்பம் பெருகவிடுவதும், பாடிக்கொண்டு உயர உயரச் செல்லும் வானம்பாடியுடன் மனதைப் பறக்கவிடுவதும் மாத்திரமன்றி, தாம் அனுபவிப்பதை வாயாரச் சொல்லமுடியாமலும், ஒளிக்க முடியாமலும் இருக்கும் அனுபவம் வரும்படி பிரபஞ்சத்தோடுகலந்து, தானே ஸூர்யன், அதன் அஸ்தமனம், அதன் சிறப்பு, வானம்பாடி, அதன் பாட்டு, ஆகாயம் முதலிய ஸகலப் பிரபஞ்சமுமாகி நின்று ஆனந்திப்பதுமே மனிதனுக்கு உண்மையாக ஏற்பட்டுள்ள உரிமைப் பெருஞ்செல்வம். ஆகாயம், நக்ஷத்திரம், மலைகள், ஆறுகள், தேகம், மனஸ், இந்திரியங்கள் முதலிய பிரபஞ்சம் எல்லாவற்றையும் தாண்டி அப்பாற்பட்டு இந்த ஜன்மத்திலேயே நிற்கும் அதிர்ஷ்டத்தை உடையவன் மனிதன். இதனால் அளாவிட முடியா ஆகாயத்தில் கரைந்துவிடும் சக்தி அவனுக்குவர, அவன் இடையறாது கோஷிக்கும் ஸமுத்திரம், உயர்ந்தமலை, பிரகாசிக்கும்நக்ஷத்திரங்கள், ஸதா சப்திக்கும்அருவிகள் முதலிய எல்லாவற்றையும் இந்த ஜன்மத்திலேயே வியாபித்து

ஆனந்திக்கும் சக்தி அவனுக்கு வருகின்றது. இந்த சக்தி மனிதனுக்கு இருப்பதினால்தான் (அதாவது மனிதனது சின்மயஸ்வரூபத்தினாலும் அவனது ஞானைந்த வல்லமையாலும்தான்) மனிதன் ஸகல ஸ்ருஷ்டிகளிலும் சிறந்தவன்; இதனால்தான் 'அரிது அரிது மானிடராதல் அரிது' ஆகவே மனிதன் உண்மையில் உலகில் எங்கும் பரவியிருக்கும் ஆனந்தமயமான பரப்பிரம்மம். இந்நிலையில்தான் அவன் கோபம், இழிவு கெட்ட குணம், முதலியவைகளுக்கு முற்றிலும் அப்பாற்படுகிறான். புத்தி அலைபாய்ந்தோடுவதும், இந்திரியங்கள் புயல்போல நிலைகுலையும்படி செய்வதும் இங்கு இல்லவே இல்லை. இது எல்லாம் ஓய்ந்தவிடம் இம்மாதிரி விடுபட்ட முக்தர் மனதில் நிலவினும் இனியதாகி ஸதா பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஜ்யோதியின் சிறப்பு காணப்படும், கட்டுக்கடங்காது வாக்கிற்கு எட்டாத ஆனந்தம் குடிகொண்டிருக்கும். மைத்ரேய உபனிஷத்திலுள்ள ஞானியைப்போல இம்மனிதனும் 'நான்தான் நான, மற்றவர்களும் நான்தான், பிரம்மமும் நான், ஸ்ருஷ்டிகர்த்தா நான், ஜகத்குரு நான், பிரபஞ்சமே நான், அவனும் நான்,' என்று ஆடிப்பாடி மெய்ம்மறந்து ஆனந்திக்கலாம். ஏனெனில் அவனை கத்தியால் வெட்டமுடியாததாயும், நெருப்பால் எரிக்கமுடியாததாயும், ஜலத்தால் நனைக்கமுடியாததாயும், காற்றால் உலர்த்த முடியாததாயும், பிறப்பற்றதாயும், மாறுதலற்றதாயும் இறப்பற்றதாயும் இருக்கும் ஆத்மா ஆகிவிடுவதனால். இதுதான் மனிதனிடம் காணப்படும் சிறப்பு. ஒவ்வொரு நிமிஷத்திலும் 'பாகக்காய்க்காகப் பங்கை விற்ற கதையாய்' அஞ்ஞானத்தால் மூடப்பட்டு விலையற்ற ஆத்மலாபத்தை இடையறாது புத்திகெட்ட மனிதன் அற்பமான உலக இன்பங்களின்பொருட்டு விலைப்படுத்துகிறான்.

நம்மவருள் பெரும்பாலாருக்கு நமது ஸ்வரூபமே தெரியாது. நமக்கு எவ்வளவு ஆதாரம் இருக்கின்றது என்பதும் தெரியாது. எண்சாண் உடம்பினுள் மறைந்துகிடைக்கும் எண்

ணிறந்த செல்வம் இன்னது என்பதும் தெரியாது. வேதாந்த சாஸ்திரமானது, ஆளவந்தார் சரிதத்தில் வரும் மணக்கல் நம்பியைப்போல, விலையற்ற நமது உரிமைப்பொருளை உறுதியாக கைப்பிடித்து மாருத ஆனந்தம் அனுபவியுங்கள் என்று நம்மை ஸதா அழைக்கின்றது. இதுதான் உபநிஷத்துக்களில் அடங்கியிருக்கும் வாக்குத்தத்தம். இதில்கொஞ்சமேனும் பூர்த்தியாகாது நின்றுவிடுவதில்லை என அநேக மஹான்கள் அனுபவித்தறிந்திருக்கின்றனர். மனிதனது உண்மை உயர்வு இத்தன்மையது என்பதை இவ்வாறு அறிந்தபின்னர் பின்வரும் கடவுள் தியானம்,

‘ஓ பரம்பொருளே! இவ்வுலகில் உமது நாமம் எவ்வளவு சிறப்பு உடையதாக இருக்கின்றது : உமது சிறப்பெல்லாம் ஆகாயத்தில் வெளியாகின்றது’ என்பதுபோல இராது,

‘ஓ ஆத்மாவே! உன்நாமம் உலகில் எவ்வளவு சிறந்ததாக இருக்கின்றது! உனது சிறப்பு ஆகாயத்திற்கும் அப்பாற்பட்டது. நீயேதான் ஆகாயம், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், இவைகளை எல்லாம் உண்டாக்கிய கடவுளும் நீயே ஆகிருய். ஓம் தத்ஸத்’ என்று மாறிவிடவேண்டியது.

ஓம் தத்ஸத்.

மகாமஹோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.